கல்கி

KALKI 17-2-1974 50 காசு



எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்

கல்கி



பொருளடக்கம்

பிரமாதீச, மாசி 5 ■ பிப்ரவரி 17, 1974

மேலட்டை: மழலைச் சிரிப்பும் முல்லைச் சிரிப்பும்

வண்ணப்படம்: வித்யாவ்ரதா

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



CMGF-39-104 TM

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 :: இதழ் 29

கடிவாளம் வேண்டும்; பிடிவாதம் வேண்டாம்!

மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைச் சிறிதும் கவனிக்காமல், தான் கொண்ட கொள்கைகளை எப்படியும் நிறைவேற்றியே தீர வேண்டும், ஆட்சி பீடத்தையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று பிடிவாதத்துடன் ஒரு கட்சி நடந்தால் எத்தகைய விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்பதற்குக் குஜராத் மாநிலம் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. கலவரங்களும், ராணுவத் தலையீடும், துப்பாக்கிச் சூடும், அமைச்சரவைப் பிளவுகளும், மாணவர் கிளர்ச்சிகளும் பற்றிய செய்திகள் மிகுந்த வருத்தமளிப்பவை.

காந்தியம் பரப்பிய மாநிலம் குஜராத். காந்திஜியின் கொள்கைகள் காற்றில் விடப்பட்டு விட்ட இந்தக் காலத்திலும் அவற்றில் இன்னமும் பற்றுக் கொண்டிருப்பவர்கள் இம்மாநிலத்தினர். பழுத்த தேசத் தலைவர்கள், அமைதியான முறைகளில் போராட்டங்கள் நடத்தி அனுபவப்பட்டவர்கள் இம்மாநிலத்தில் உள்ளனர். அவர்களுடைய செல்வாக்கு இன்னமும் மங்கி விடவில்லை. இங்கேதான், வங்காளம், தெலிங்கானா போன்ற இடங்களில் நடந்தது போன்ற வன்முறைகள் இப்போது நிகழ்கின்றன.

இம்மாதிரி வன்முறை நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட வேண்டுமானால், அவர்களின் தொல்லைகள் அளவுக்கு மீறித்தான் போயிருக்க வேண்டும். உணவுப் பஞ்சம் அங்கே ஏற்பட்டிருப்பதுதான் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணம். நல்ல விளைச்சல் என்ற சூழ்நிலையில் இப்பஞ்சம் ஏற்பட்டிருப்பது மிகவும் வியப்புக்குரிய விஷயமாகும்.

இந்நிலை ஏன் ஏற்பட்டது?

கோதுமைக் கொள்முதல் வர்த்தகத்தை அரசாங்கம் மேற்கொண்டதும், விநியோகத்தில் தோன்றிய குறைகளும், மாநிலத்துக்குள்ளேயே தனியார் வர்த்தகத்துக்குப் போடப்பட்ட தடைகளும், இதர மாநிலங்களுடன் நடைபெறும் மாமூல் வர்த்தகத்துக்குப் போடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளும் காரணங்கள். வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெருவாரியான குஜராத்தியர்கள் செயலிழந்து நிற்கும் நிலை அங்கே தோன்றியுள்ளது. அரசாங்க வர்த்தகம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று ஒப்புக் கொண்டு, அதை முற்றிலும் கைவிடா விட்டாலும் பெருமளவுக்குத் தளர்த்தி, தனியார் வர்த்தகத்தையும் அரசாங்கத்தின் கொள்முதலுடன் இயங்க அனுமதித்தால் நிலைமை சீர்ப்படக் கூடும்.

ஆனால் அவ்விதம் செய்தால் கொள்கை தோல்வியடைந்து விட்டது என்பதை ஆளும் கட்சி ஒப்புக் கொள்ள வேண்டுமே? கௌரவத்துக்கு ஹானி வந்து விடுமே! அதனால் இந்திரா காங்கிரஸ் இக் கலவரங்களுக்கு, இல்லாத காரணங்களைத் தேடிப் பிடித்து எதிர்க் கட்சிகளைக் குறைகூற முற்பட்டுள்ளது! கிளர்ச்சிகளை வேண்டுமென்றே எதிர்க் கட்சியினர் தூண்டி விடுகின்றனர்; நிலச் சீர்திருத்தங்களை எதிர்த்துக் கிளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன; சுயநலமிகள் விஷமம் என்று இப்படிப் பல சால்ஜாப்புக்கள்.

இப்போது மாணவர்களும் பெருவாரியாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அரசியலில் மாணவர்களை ஈடுபடுத்துவது தவறு என்பதை உணர்ந்திருந்தபோதிலும் பழுத்த தேசபக்தர்களான ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜிதேசாய் போன்றவர்கள்கூட நாட்டில் தோன்றியுள்ள இன்றைய திருப்தியில்லாத நிலைமையை அனுசரித்து, ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் மாணவர் சமூகம் விழித்தெழத்தான் வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றனர்.

ஆளும் காங்கிரஸ் கட்சியின் மேலிடத்திலிருந்து அடிக்கடி தூதுவர்கள் வந்து ஆட்டம் கண்டுள்ள ஆட்சியைப் பலப்படுத்த முற்படுகிறார்களே தவிர, அடிப்படைத் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்ள முற்படவில்லை.

அரசாங்கக் கொள்முதல், ஒரு நெருக்கடி நிலைமை, ஆபத்து என்று வரும்போது சமாளிக்கத் தேவையான அளவுக்கு அவசியம்தான். இது கடிவாளம். ஆனால் தனியார் வர்த்தகத்தை அடி

யோடு அழித்து விட்டு, அரசாங்கக் கொள்முதல் மட்டுமே ஏகபோகமாகச் செயல்பட வேண்டும் என்பதினால்தான் விரும்பத் தகாத விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இது பிடிவாதம். பதுக்கலும், கறுப்பு மார்க்கெட்டும் அரசாங்க விநியோக முறைகளின் உடன் விளைவுகள். அரசாங்க வியாபாரம் திறமையாகவோ திருப்திகரமாகவோ செயல்படவே முடியாது. வேண்டாத அமைச்சர்கள் நால்வரை அமைச்சரவையிலிருந்து வெளியேற்றியிருப்பது ஆளும் கட்சியிலேயே இவ் விஷயத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது. மற்ற மாநிலங்களுக்குக் குஜராத் ஒரு படிப்பினை.

தமிழ் நாட்டிலே...

தீரன்

வீட்டு வசதி வாரியம் பற்றி நீதிபதி

தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி வாரியத்தில் முழுமையான திறமையின்மை நிலவுவதாக நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில் அந்த வாரியம் தொடர்பான ஒரு வழக்கின் தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

வீட்டு வசதி வாரியத்தில் வேலை பார்க்கும் சூபர்வைசர்களில் சிலர், தங்களை உதவி இன்ஜினியர்களாக நியமிக்க வேண்டும் என்று கோரியும் ஏற்கனவே உதவி இன்ஜினியர்களாக நியமிக்கப்பட்ட ஜூனியர் இன்ஜினியர்களின் நியமனம் தகுதியற்ற முறையில் நடந்திருப்பதனால் அது செல்லாது என்று அறிவிக்கக் கோரியும் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை ஏற்று விசாரித்த நீதிபதி, 'ஐந்து ஆண்டுக்கால அளவு பணிபுரிந்தவரையே உதவி இன்ஜினியராக நியமிக்க வேண்டும் என்ற விதியை மீறி நியமனம் நடந்திருப்பதால் இந்த நியமனங்கள் செல்லாது' என்று தீர்ப்புக் கூறிவிட்டார்.

'8–6–68-ந் தேதியில் தமிழ்நாடு அரசின் உதவிச் செயலாளர் வீட்டு வசதி வாரியத்துக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் என்பது ஃபைல்களில் இருந்து தெரிகிறது. அந்தக் கடிதத்துடன் வீட்டு வசதி வாரியத்தின் ஊழியர்களுக்கான சட்ட திட்ட நகலும் அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழக அரசு மேற்படி வாரியத்துக்கு அனுப்பிய கடிதத்தையும் நகல் சட்டதிட்டங்களையும் பார்த்தால் இந்த வழக்குச் சம்பந்தமாகப் பல விவரங்கள் தெரியலாம் என்று அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு வாரியத்தின் வழக்கறிஞருக்கு உத்தரவு இட்டிருந்தேன். ஆனால் இரண்டு முழு நாட்கள் செலவழித்த பின்னும் அந்தக் கடிதமும் சட்டதிட்ட நகல்களும் கைக்குக் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து வீட்டு வசதி வாரியத்தில் முழுமையான திறமையின்மை நிலவுகிறது அல்லது அந்தக் கடிதத்தையும் சட்டதிட்ட நகல்களையும் இந்த நீதிமன்றத்தின் பார்வைக்குக் காட்டாமல் தவிர்க்க வேண்டும் என்ற திட்டமிட்ட முயற்சி நடக்கிறது என்றுதான் நான் முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது' — என்று தம்முடைய தீர்ப்பில் வீட்டு வசதி வாரியத்தைக் கண்டித்திருக்கிறார் நீதிபதி. அரசே வரையறுத்த சட்ட திட்டங்களுக்குப் புறம்பான முறையில் பதவி நியமனங்களும், பதவி உயர்வுகளும் ஓர் அரசு இலாகாவிலேயே நடைபெறுமானால் அதை மக்களுக்கு இழைக்கப்படும் பச்சைத் துரோகம் என்றுதான் வர்ணிக்க வேண்டும்.


கண்மூடித்தனம்

சென்னையில் நடைபெற்ற விவசாயப் பத்திரிகை ஒன்றின் வெளியீட்டு விழாவில் பேசும்போது உணவுதானிய வர்த்தகத்தை அரசு ஏற்பது பற்றிய தமது கருத்தைத் தமிழக முதல்வர் திரு. கருணாநிதி ஓரளவு துணிவுடனேயே தெரிவித்திருக்கிறார்.

''புரட்சிகரமான கொள்கைகள் என்ற பெயரால் சிலவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றினால் அதன் விளைவாக மக்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களையும், துன்பங்களையும் நல்ல முறையில் தீர யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான் தானியக் கொள்முதல் வர்த்தகத்தை அரசே ஏற்க வேண்டும் என்று மத்தியில் யோசனை கூறப்பட்ட போது, கொள்கை அளவில் இதை ஒப்புக் கொண்டாலும் இதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களையும், விளைவுகளையும் எண்ணிப் பார்க்கும்போது தமிழக அரசு இதில் இறங்கவில்லை. அரசே உணவு தானிய வர்த்தகத்தை நடத்த வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காததால்தான் அநாவசியமான சிரமங்களுக்கு ஆளாகாமல் தமிழ்நாடு தப்பித்தது. அக் கொள்கையை விழுந்தடித்துக் கொண்டு கண்மூடித்தனமாகவும், படுவேகமாகவும் பின்பற்றிய மாநிலங்கள் அதனால் இன்று சிரமப்பட்டுத் திணறிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்'' — என்று தமிழக முதல்வர் கூறியிருக்கிற ஒரு கருத்து அனைவருடைய சிந்தனைக்கும் கவனத்துக்கும் உரியது.

புனிதத் திருமாளிகை

உடையவர் என வைணவர்களால் செல்வமாக அழைக்கப்படும் ஸ்ரீ இராமானுஜர் காஞ்சியில் வாழ்ந்த திருமாளிகையைப் புதுப்பித்துக் கட்டும் பணியை ஆஸ்திகப் பெருமக்கள் தொடங்கியிருக்கிறார்கள். காஞ்சி தேவராஜப் பெருமாள் சந்நிதியில் கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் இராமானுஜர் தங்கியிருந்த திருமாளிகை விஷ்ணு



ரூபாய்க்கு 3 படி
உப்பு வேண்டுமா?
தி.மு.கவுக்கு ஓட்டு அளியுங்கள்

பாம்பின் கால்
பாம்புக்கே தெரியும்!
உங்கள் ஓட்டு அ.தி.மு.கவுக்கே

உறவுகள் மாறுமடி
பாப்பா!
கம்யூனிஸ்டுகளை ஆதரியுங்கள்

காஞ்சியில் உள்ளது. திவ்யதேச ஜீர்ணோத்தாரண சமிதி என்ற ஆஸ்திக அமைப்பு இப்பணியை மேற்கொண்டு உடையவர் திருமாளிகை உள்ள தலமான க்ஷேத்ரய்ய பின்னை வீதியில் அடிக்கல் நாட்டத் திட்டமிட்டிருக்கிறது.

மகாவித்வானாகிய ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் இத்திருப்பணியைத் தொடங்கி வைக்கிறார். கைராசியுள்ள அவர் தொடங்கும் பணி பூர்த்தியாகி எல்லாச் சிறப்புக்களுடனும் நிறைவேறும் என்று நம்பலாம்.

கருணாநிதியின் ஆசைகள்

மாநில சுயாட்சி பற்றிய முரசொலி மாறனின் புத்தகம் ஒன்று தடபுடலாக வெளியிடப்பட்டது. அந்த வெளியீட்டு விழாவில் பேசுகிற போது கலைஞர் மாநில சுயாட்சி பற்றிய தமது ஆசைகளை வெளியிட்டிருக்கிறார். 'சுதந்திர தினத்தன்றும் குடியரசு தினத்தன்றும், எந்த மாநிலத்திலும் தேசியக் கொடியை ஏற்றி அணிவகுப்பை ஏற்கும் உரிமை கூட முதல்வருக்கு இல்லாமல் கவர்னருக்கு இருக்கிறதே' என்பது கலைஞரின் வருத்தங்களில் ஒன்று.

'தனிக்கொடி, தனிக்கொடி' என்று முன்பு புலம்பியவர் இப்போது 'தேசியக் கொடியை என் கையால் ஏற்றக் கூடாதா?' — என்று கேட்கும் அளவுக்கு இறங்கி வந்துவிட்டார். எல்லா மாநிலங்களிலும் ராஷ்டிரபதியின், பிரதிநிதியாகவும் மத்திய அரசின் பிரதிநிதியாகவும் கவர்னர் கொடியேற்றி அணிவகுப்பை ஏற்பது என்பது நீண்ட நாள் மரபு. எல்லா ஆட்சிகளின் போதும் அதுவே வழக்கம். கவர்னரை அந்தக் கொடியேற்றும் வேலைகளிலிருந்து கூடக் கழற்றி விட்டு விட வேண்டும் என்பது தான் முதல்வரின் ஆசையோ, என்னவோ?

எதை எதையோ. கேட்போம், போராடுவோம், என்று சாகஸங்கள் செய்த பின் கடைசியில் மாநில சுயாட்சி இல்லாததால் 'கோட்டையிலும், குடியரசு தின விழாவிலும் என் கையால் கொடி ஏற்றக் கூட உரிமை இல்லையா?' — என்று கேட்கும் நிலை வந்திருப்பதைப் பார்த்தால் கலைஞர் கோரும் மாநில சுயாட்சியே இப்படி ஒரு சிறுபிள்ளைத்தனமான தீப்பெட்டிப் படம் சேர்க்கும் ஆசை தானோ என நினைக்கத் தோன்றுகிறது.

அடிகளாரும் பொதுஉடைமையும்

"ஆலயங்கள் தனிப்பட்டவர்களின் நிருவனமாக நடப்பதால் பக்தி உணர்வுகள் சிதைக்கப்படுகின்றன. அனைத்து ஆலயங்களையும் பொதுஉடைமையாக்கித் தேசிய மயமாக்கச் செய்துவிட வேண்டும்'' என்று திரு. குன்றக்குடி அடிகள் அண்மையில் வேலூரில் பேசியிருக்கிறார். ஏற்கனவே அரசு பிடியில் போய்ச் சிக்கி இப்போது இந்து அறநிலையப் பாதுகாப்பின் கீழ் உள்ள கோவில்கள் நிர்வாகச் சீர்கேட்டாலும், நிதிகளைத் துஷ்பிரயோகம் செய்வதாலும் கெட்டு விட்டிருப்பதைக் கண்டு அவற்றையே அரசு விடுவித்து இந்துக்கள் அடங்கிய தனிப்பட்ட குழுவிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று இந்து தேவாலயப் பாதுகாப்புக் குழு போராடி வருகிறது. இந்த நிலையில் எல்லாக் கோயில்களையும் தேசிய மயமாக்க வேண்டும் என அடிகளார் நேர்மாறான யோசனையைத் தெரிவித்திருப்பதுவேடிக்கையாக இருக்கிறது. சர்ச், மசூதி ஆகியவற்றைத் தேசிய மயமாக்கச் சொல்லியோ, மடங்களையும், ஆதீனங்களையும் தேசிய மயமாக்கச் சொல்லியோ அடிகளார் கூறவில்லை. மதச் சார்பற்ற அரசு இந்து ஆலயங்களை மட்டும் நிர்வகிப்பதில் உள்ள ஊதாரித்தனங்களை,ஊழல்களைக் கண்டு இந்துக்களே அவற்றை 'வக்ஃப் போர்டு'போல 'சர்ச் ஆஃப் சவுத் இந்தியா' போலத் தங்கள் வசம் திரும்பக் கேட்க முன்வந்திருக்கிறார்கள் இப்போது. எல்லா ஆலயங்களையும் — ஆலயங்களில் நம்பிக்கையில்லாத ஒரு நாத்திக அரசாங்கம் தேசிய மயமாக்குவது என்று வந்தால் அதைப் போல் விபரீதம் வேறு இல்லை. தேசிய மயமாக்கிய பல நிறுவனங்களின் நிலை அடிகளுக்குத் தெரியாது போலும்.

தேசிய சக்திகளின் உடன்பாடு

சோவைப் பகுதிகளில் தேர்தல் பிரசாரம் செய்து வருகிற திரு. காமராஜ் அவர்கள் நாட்டு நலனையும், ஜனநாயகத்தையும் காப்பதற்குத் தேசிய சக்திகள் ஒன்று சேர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை விளக்

ராஜாஜி சிந்தனை

ஏழை ஒருவனுடைய குமாரன், தான் பணக்காரனுடைய மகன் அல்ல, பரம ஏழை என்று அறிந்து அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளுவது உண்மைக்குப் பயந்த அடக்கம். அது புத்திசாலித்தனம். வேறுவிதம் நடந்து கொள்ளுவது மடமை. அதுபோலவே யாராயினும் சரி, தான் என்ன பதவியிலிருந்தாலும், என்ன ஐசுவரியம் பெற்றிருந்தாலும் அவற்றின் நிலையும் பயனும் உண்மையில் சிறிது என்பதைக் கண்டு அடக்கத்துடன் நடந்து கொள்ளுவது புத்திசாலித்தனம். உண்மையைக் கண்டு அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளுவது அவசியம். அவ்வளவின்றிப் பிறருடைய பாராட்டுதலுக்காக மாத்திரம் அடக்கம் காட்டிக் கொள்ளுவது உண்மை அடக்கம் அல்ல.



mysore queen

பிரிண்ட்டட் வாஷ் அண்ட் வியர் கேம்ப்ரிக்குகள்

MYSORE BEAUTY

பிரிண்ட்டட் வாஷ் அண்ட் வியர் கேம்ப்ரிக்குகள்

Pushpanjali

வாஷ் அண்ட் வியர் டைட் கேம்ப்ரிக் வாயில்கள்

தாவண்கெரே

துணிவகைகள்

தி தாவணகெரே காட்டன் மில்ஸ் லிமிடெட

Thomas/DCM/11 d Tam

னர். எல்லா இடங்களிலும் அவருக்கு நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது.

''தேச விரோத சக்திகளை முறியடிக்கத் தேசிய சக்திகளையெல்லாம் ஒன்று சேர்த்துத் தமிழ்நாடுதான் நாட்டின் பிற பகுதிகளுக்கு முன்னுதாரணமாயிருக்க வேண்டும். ரத்தப் புரட்சி, அது இது, என்று சில கட்சிகள் குழப்பமும், அராஜகமும், நாடு முழுதும் பரவ ஏற்பாடு செய்கின்றன. காந்திய வழி தான் நமக்கு ஏற்றது. நாட்டை ரத்தக்களறியில் ஆழ்த்துவதற்குத் தேசிய சக்திகள் அனுமதிக்கலாகாது. கம்யூனிஸ்டுகள் பற்றி நாட்டு மக்கள் மிகவும் உஷாராக இருக்க வேண்டும்.

''நாட்டில் செழிப்பும் உற்பத்தித் திறனும் இருந்தாலும் ஆள்கிறவர்கள், தூய்மையானவர்களும், நேர்மையானவர்களுமாக இல்லா விட்டால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காது'' - தம்முடைய எல்லாத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் திரு. காமராஜ் இக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறி வருகிறார்.

அடுப்பில் பூனை

மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டில் தமிழ் நாட்டுக்கு மாதம் பதினைந்து சதவிகித வெட்டு என்றும், முப்பது சதவிகித வெட்டு என்றும் பத்திரிகைகளில் செய்தி வந்தாலும் வந்தது, மறுநாள் காலையிலிருந்து சென்னை நகரத் தெருக்களில் மண்ணெண்ணெய் வண்டிகள் தலைமறைவாகி விட்டன. விலையும் லிட்டர் ஒரு ரூ. ஒன்றேகால் ரூ. என்று தாறுமாறாகத் தோன்றியபடி உயரத் தொடங்கி விட்டது. விலை உயர்வு பற்றிப் பத்திரிகைகளில் வரும் தலைப்புச் செய்திகள் எல்லாமே பண்டங்களைப் பதுக்கவும், (காபி, இட்லி விலை உட்பட) விலை ஏற்றி வைக்கவுமே உதவி செய்கின்றன. ஒரு பொருளுக்கு ஒரே சீரான விலை ஒரு நகர் எல்லைக்குள்ளேயே கூட இருப்பதில்லை. நாடு முழுவதும் ஒரே சீரான விலை என்பது எப்படி எப்போது சாத்தியமாகுமோ தெரியவில்லை. மண்ணெண்ணெய் கிடைக்காததை ஒட்டி விறகு விலை ஏறுகிறது. கரி மூட்டை கிடைப்பது கூடச் சிரமமாகி வருகிறது. இதே நிலைமை நீடித்தால் ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பில் பூனை உறங்கும்படி ஆகிவிடும். காப்பிக் கொட்டைக்கு ஒரு கியூ, சர்க்கரைக்கு ஒரு கியூ, மண்ணெண்ணெய் வாங்க ஒரு கியூ என்று ஒரு கியூவுக்கு மூன்று மணி நேரம் நிற்க வேண்டுமானால் மற்ற வேலைகளை ஒருவர் எப்போது செய்வது?

வார்டனை அடித்த மாணவர்

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவர் (தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவரின் மகன்) குடியரசு தினத்தன்று இரவில் குடித்துவிட்டு வந்து விடுதிக்குள் குழப்பம் செய்திருக்கிறார். கடந்த இரண்டாண்டுகளாக எம்.எல்.ஏ.யின் மகன் என்ற ஒரே பாதுகாப்பை வைத்துக் கொண்டு இவர் பல அட்டகாசங்களைச் செய்திருக்கிறாராம். 'ராகிங்' போன்ற தீமைகளையும் அளவற்றுச் செய்திருக்கிறாராம்.

குடியரசு தினத்தன்று இரவு குடிவெறியிலிருந்த இவரால் தாக்கப்பட்ட மாணவர் ஒருவர் புகார் செய்ததன் பேரில் ஸ்டான்லி விடுதி வார்டன் இந்த மாணவரைக் கூப்பிட்டு அறிவுரை கூறியிருக்கிறார்.

ஆனால் வார்டனின் அறிவுரையைப் பொருட்படுத்தாமல் அவரையே தரக் குறைவாகப் பேசியிருக்கிறார் மாணவர். வார்டன் மாணவரின் தந்தையான சட்டமன்ற உறுப்பினருக்கு டெலிபோன் செய்ய முயன்ற போதும் மாணவர் அவரைத் தடுத்துவிட்டாராம். ஆனால் வார்டனைத் தந்தையோடு பேச விடாமல் தடுத்த மாணவர் தாமே தந்தையிடம் சென்று வேறுவிதமாகக் கோள் சொல்லியிருக்கிறார். அதன் விளைவாக வார்டன் டெலிபோனில் மிரட்டப்பட்டாராம். தொடர்ந்து மறுநாள் இரவு ஒரு மணி அளவில் பத்துப் பதினைந்து குண்டர்கள் வார்டனின் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டி அவரை வெளியே வரவழைத்து இருட்டில் உதைத்துத் தாக்கியிருக்கிறார்கள். வார்டனுக்குத் தலையிலும், கையிலும் பலமான காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

காயமடைந்த வார்டனுக்கு ஆறுதலும் அனுதாபமும் கூறுவதற்குப் பதில் அமைச்சர் ஒருவரின் அந்தரங்கச் செயலாளர் வார்டனுக்கு ஃபோன் செய்து, ''நடந்ததைப் பெரிது படுத்தாதீர்கள்! அப்படியே விட்டுவிடுங்கள்'' என்று எச்சரித்திருக்கிறார். வார்டன் நடந்த விவரங்களை அவரிடம் கூறுமுன் அவர் ஃபோனையே வைத்து விட்டதாகத் தெரிகிறது.

இந்தக் கொடுமையை எதிர்த்து வார்டனுக்கு ஆதரவாகவும், தவறு செய்த மாணவரை நீக்கக் கோரியும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர் 1400 பேரும் கிளர்ந்தெழுந்திருக்கின்றனர். இது தொடர்பாக அந்த மாணவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். நடந்தவற்றை விசாரிக்க மூன்று பேராசிரியர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.


தி.மு.க. எம்.எல். ஏ. மகன் என்றால் யாரை வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமை என்றுதான் மாறுமோ தெரியவில்லை.

இந்த அநாகரிகமான சம்பவம் பற்றிச் சட்டசபையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கூட்டாகக் கொணர்ந்தனர். மூன்று பேராசிரியர்கள் அடங்கிய குழு விசாரித்துத் தெரிவிக்கும் முடிவுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்ததன் பேரில் ஒத்திவைப்புத் தீர்மானத்தைச் சபாநாயகர் தள்ளுபடி செய்திருக்கிறார்.

அதிகார பலம் பின்னணியில் இருப்பதால் அநாகரிகமாக நடந்து கொள்ளும் துணிவு பெற்றதாக நம்ப இடமிருப்பது ஒருபுறமிருக்க, குடிப்பழக்கம் சில மாணவர்களிடையே அறிவு மழுங்கும் அளவுக்கு அதிகரித்து விட்டிருக்கிறது என்று எண்ண இடமிருப்பதானது அச்சமளிப்பதாய், வேதனைக்குரியதாய் இருக்கிறது. மதுவிலக்கை ரத்து செய்தவர்கள் தங்கள் செயலின் விளைவுகளை எண்ணிப் பார்ப்பார்களா ?



கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!



பழமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக் கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும்போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய் நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி நவீன பராமரிப்பு முறையில், உங்கள் பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்கிறது; மற்றும் வாய் நாற்றத்தையும் உடனே நிறுத்துகிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

உங்கள் குடும்பத்திற்கு எகானமி சைஸ் கால்கேட் பற்பொடியை இன்றே வாங்குங்கள்! ஒரு டப்பா மாதக் கணக்கில் வரும்!



...பூரணமான பல் பராமரிப்-
பிற்கு விஞ்ஞான முறையில்
உருவாக்கப்பட்ட கால்கேட்
டூத் ப்ரஷ் உபயோகியுங்கள்.

TP.G.21 TM



குடும்பம்

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமையுடையது இந்த உலகம் என்றார் திருவள்ளுவர்.

உங்கள் மனைவி மக்களின் நலனைப் பாதுகாக்க இன்று நீங்கள் இருக்கிறீர்கள். எதிர்பாராத விதமாக உங்களுக்கு ஏதாவது நேர்ந்து, நீங்கள் இல்லாது போனால் என்ன ஆவது? எனவே உங்களது மகனின் உயர் கல்வி, மகளின் திருமணம், குடும்ப நலன் ஆகியவற்றிற்கு நீங்கள் இருந்தாலும், இல்லாது போக நேர்ந்தாலும் உதவ எல். ஐ. சியின் பல நோக்கப் பாலிசி (மல்ட்டி பர்ப்பஸ் பாலிசி) மூலம் வகை செய்யுங்கள். இப் பாலிசி பற்றிய விவரங்களறிய இன்றே ஒரு எல். ஐ. சி. முகவரை அல்லது அருகிலுள்ள எல். ஐ. சி. அலுவலகத்தை நாடுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை.

EP LIC-9-73

காமாக்ஷியின் சரிதை 5

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

அநேக சிவஸ்தலங்களில் உள்ள அம்பாள் சந்நிதிக்குக் 'காமகோட்டம்' என்றே பெயர் இருப்பதாக அந்தந்த சந்நிதிகளில் உள்ள கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. சோழர் காலத்திலிருந்து பல அரசர்கள் இந்த சந்நிதிகளுக்குத் திருப்பணி செய்ததை சிலா சாஸனமாகப் பொறித்து வைத்திருக்கிறார்கள். அவிநாசி, விஜயமங்கலம், திருவொற்றியூர், திருக்காட்டுப்பள்ளி, வல்லம், திருப்பழனம், கோயிலாடி, இது மாதிரி பல க்ஷேத்திரங்களில் உள்ள அம்பாள் சந்நிதி கல்வெட்டுக்களில் அந்தந்த அம்பாளைப் பற்றிச் சொல்லும்போது, ''திருக்காமக் கொட்டத்து நாச்சியார்'', ''திருக்காமக் கொட்டமுடைய அழகமர் மங்கையார்'', ''திருக் காமக் கொட்டமுடைய அகில நாயகியார்'' என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் குறிலைக் குறிக்கும் ஒற்றைக்கொம்பு (ெ), நெடிலைக் குறிக்கும் இரட்டைக் கொம்பு (ே) என்ற வித்தியாசம் கிடையாது. இதனால்தான் 'காமகோட்டம்' என்பது 'காம கொட்டம்' என்று இருக்கிறது. சிதம்பரத்திலும் இப்படி ஒரு தமிழ் கல்வெட்டு இருக்கிறது. அதோடு ஸம்ஸ்கிருதத்திலும், ''காமகோஷ்டஸ்திதாயா:'' என்று அங்குள்ள அம்பிகையைச் சொல்லும் சாஸனம் இருக்கிறது.

எல்லாச் சக்திக் கோட்டங்களிலும் இருந்த ஜீவகலை காஞ்சீபுரத்துக்கு இழுக்கப்பட்டு மறுபடியும் அங்கிருந்து அந்தந்த க்ஷேத்திரத்துக்கு அனுப்பப்பட்டதாகப் புராணம் சொல்கிறதல்லவா? அதாவது இப்போது நாம் எந்த க்ஷேத்திரத்து அம்பாள் சந்நிதியிலும் அநுபவிக்கிற சாந்நித்தியமானது ஒரு காலத்தில் கஞ்சி காமாக்ஷியின் சந்நிதிக்கு இழுக்கப்பட்டு, பிறகு அங்கிருந்தே இந்த க்ஷேத்திரத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாகும். காமகோட்டத்திலிருந்தே எல்லா ஸ்தலங்களுக்கும் ஜீவகலை வந்ததால், ஸ்தலங்களிலுள்ள அம்பாள் சந்நிதிகளையும் ''காம கோட்டம்'' என்றே குறிப்பிடுகிற வழக்கம் வந்திருக்க வேண்டும்.

இன்று ஆலங்குடி எனப்படும் பழங்காலத் திருஇரும்பூளையில் ஞானசம்பந்தர் பாடியுள்ள தேவாரத்தில், ''கச்சிப் பொலி காமக் கொடியுடன் கூடி'' என்கிறார். முன்பே சொன்னது போல் குறில் — நெடில் கொம்பு வித்தியாசத்தை நினைத்தால் இங்கே 'காமக் கொடி' என்பது 'காமக்கோடி' அல்லது 'காம கோடி' என்றே யிருக்கலாம். அப்பர் ஸ்வாமிகள் திருவதிகைத் திருத் தாண்டகத்தில் ''கொழும் பவளச் செங்கனி வாய்க் காமக் கோட்டி'' என்கிறார். இதிலிருந்தும், மற்ற க்ஷேத்திரங்களில்கூட காமாக்ஷியின் சக்தியே அருள்பாலித்தது என்று ஏற்படுகிறது. காமகோட்ட வாஸினி என்பதால் அப்பர், காமக்கோட்டி என்றார் போலிருக்கிறது. 'காமகோடி' வேறு, காமகோட்டி வேறு. காமங்கள் எல்லாம் முடிந்து போகிற கோடியாக, ஞான ஸ்வரூபமாக இருப்பவள் காமகோடி. காமாக்ஷி சந்நிதியில் காமகோடி பீடம் இருக்கிறது. பாகவதத்தில் பரசுராமரின் தீர்த்த யாத்திரையின்போது அவர் காஞ்சீபுரத்துக்கு வந்ததைக் கூறுகையில் 'காமகோடிபுரியான காஞ்சிக்கு' என்றே சொல்லியிருக்கிறது. காஞ்சிபுரத்தில் ஏராளமான சிவ, விஷ்ணு ஆலயங்கள் இருந்தாலும் அம்பாளின் காமகோடிபுரியாகவே அது ஆதி காலத்திலிருந்து விசேஷிக்கப்பட்டிருக்கிறது:

இதர க்ஷேத்திரங்களில் அம்பாள் சாந்நித்தியத்தை மறுபடியும் ஏற்படுத்திய காமாக்ஷி, மன்மதனின் வெற்றிக்குக் காஞ்சியில் மட்டும் சாசுவதமான அடையாளம் இருக்க வேண்டும் என்று கருணை கொண்டாள். அதனால் காஞ்சீபுரத்தில் மட்டும் எந்தச் சிவாலயத்திலும் அம்பாள் சந்நிதி இருக்கலாகாது என்றும், மன்மதன் சிவனை ஜயித்ததற்கு அடையாளமாகக் காஞ்சிக்கு 'சிவஜித்' க்ஷேத்திரம் என்று பெயர் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டாள். இன்றைக்குக்கூட காஞ்சியில் எத்தனையோ சிவாலயங்கள் இருந்தும், காமாக்ஷி கோவிலைத் தவிர வேறு அம்பாள் சந்நிதியே கிடையாது.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் காஞ்சீபுரத்தில் உள்ள ஓணகாந்தன் தளியில் பாடும்போது,

வாரிருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள்,
மதுவிம்மு கொன்றைத்
தாரிரும் தடமார்பு நீங்காத் தையலாள்,
உலகுய்யவைத்த
காரிரும்பொழில் கச்சிமூதூர்க் காமகோட்டம்
உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே,
ஓணகாந்தன் தளியுளீரே

என்கிறார். இந்தத் 'தளி' அல்லது கோயிலுக்குத் தனியாக அம்பாள் இல்லாததால் 'உலகுக்கெல்லாம் சோறு போடுகிற காமாக்ஷி இருக்க, நீ ஏன் பிக்ஷாடனனாகக் கப்பரையோடு திரிகிறாய்?' என்று பரமேச்வரனைக் கேட்கிறார். காமாக்ஷி ஞானப் பிரதமமான தெய்வம் மட்டுமில்லை. ஞானப்பால் தருவதோடு அன்னபூர்ணேச்வரியாக உலகுக்கெல்லாம் சோறும் போடுகிறாள். இரு நாழி நெல்லைக் கொண்டு அவள் முப்பத்திரண்டு அறங்களையும் ஆற்றினாள் என்று தமிழ் நூல்கள் சொல்லும்.

காமனுக்கு அநுக்கிரகம் செய்து பரமேச்வரனைக் காமேச்வரனாக்கிய அந்தச் சிவகாம சுந்தரியைத் தியானித்தால் நம்முடைய காமமெல்லாம் மறைந்து போகும். அவளுடைய கடாக்ஷம் கிடைத்து விட்டால் அதன் பின் எவ்வளவு ஆசையை உண்டுபண்ணக் கூடிய வஸ்துவும் நமக்கு ஆசை உண்டாக்காது. காமம், குரோதம், லோபம் (பணப்பேராசை) மோகம், மதம், மாத்சரியம் (பொறாமை) ஆகிய துர்க்குணங்களில் ஒன்றும் இல்லாமல் நம் சித்தம் பரிசுத்தம் ஆவதற்கு அவளையே பிரார்த்திக்க வேண்டும்.





விண்ணைச் சாடும் விஞ்ஞானிகள்

இருள் கவிந்து ஒன்றரை மணி நேரத்துக்கு மேலாகி விட்டது. கடலலைகள் மெல்லப் பொங்கி வந்து நிலமடந்தையை முத்தமிட்டுப் பின்வாங்கி விளையாடுகின்றன. தென்னை மரங்களின் ஓலைகள் குளிர்ந்த கடல் காற்றில் சிலிர்க்கின்றன. மணல் பரப்பில் சுமார் ஐம்பது அறுபது பேர்கள் அமர்ந்து சற்றுத் தொலைவில் வெளிச்சமாகத் தெரிகிற இடத்தை ஆர்வத்துடன் உற்று நோக்கியபடி இருக்கிறார்கள்.

''டென் ஸெகண்ட்ஸ் டு ஸீரோ'' என்று ஒலி பெருக்கியில் அறிவிக்கும் குரல், தொடர்ந்து, ''நைன், எய்ட், ஸெவன்'' என்று எண்ணிக் கொண்டு வருகிறது. ''ஸீரோ'' என்று அக்குரல் கூறும் போதே எல்லாருடைய பார்வையும் நிலைக்குத்தி யிருக்கும் இடத்தில் பத்து மின்னல்களின் பிரகாசம் தெரிகிறது. அசுரன் ஒருவன் ஆத்திரத்துடன் பல்லைக் கடிப்பது போன்ற சத்தம்! ஆகாயத்தை நோக்கி ராக்கெட் பாய்கிறது! அடிவாரத்தில் நெருப்பைக் கக்கிக் கொண்டு விண்ணை நோக்கி விரையும் அதனை அண்ணாந்து நோக்குகின்றன நம் கண்கள். சில விநாடிகளில் இன்னொரு சத்தம். ராக்கெட்டின் முதல் பகுதி எரி பொருள் தீர்ந்து சக்தி இழந்து விட்டதால் அதிலிருந்து விடுபட்டு இரண்டாவது கட்ட ராக்கெட் நெருப்பைக் கக்கிக் கொண்டும் புவி ஈர்ப்புச் சக்தியை எதிர்த்துக் கொண்டும் வானில் ஏறத்தாழ செங்குத்தாகவே பயணத்தைத் தொடர்கிறது. இன்னும் சில வினாடிகளில் அதன் எரி பொருளும் தீர்ந்து விட்டதால் வானில் நெருப்புப் பந்தத்தைப் பார்க்க முடியவில்லை. நட்சத்திரங்களும் அரை வட்ட நிலாவும் மட்டுமே காணப்படுகின்றன.

ராக்கெட் கிளம்புவதை வேடிக்கை பார்க்க வந்தவர்களுக்கு இந்தச் சில வினாடிப் போது வியப்பையும் திகைப்பையும் அளிப்பதாய் இருக்கிறது.

அவரவரும் உற்சாகமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு அபாயம் ஏதும் இனி இல்லை என்பதாக 'ஸைரன்' ஒலித்ததும் காரிலோ பஸ்ஸிலோ ஏறி வீடு திரும்புகின்றனர்.

ஆனால் ராக்கெட்டை அனுப்பிய விஞ்ஞானிகளின் பணி இன்னும் முடியவில்லை. அவர்கள் நிர்ணயித்துள்ள உயரத்தில் ராக்கெட்டின் இரண்டாம் பகுதியின் மேல்புறம் திறந்து கொள்ள, அதனுள்ளிருந்து விஞ்ஞான உபகரணங்கள் அடங்கிய ஒரு கலம் வெளியேறுகிறது. அக்கலம் ராக்கெட்டின் வேகத்தோடு பயணப்பட்டு வந்ததால் மேலும் சிறிது தூரம் உயரே சென்று பின்னர், இனி புவி ஈர்ப்புச் சக்தியை எதிர்க்க முடியாது என்ற கட்டத்தில் கீழ் நோக்கி





விழத் தொடங்குகிறது. அது விழும் வேகத்தை மட்டுப்படுத்த பாராசூட் ஒன்று விரிந்து கொள்கிறது.


வானில் அந்த உயரத்தில் காற்றின் வேகம், அழுத்தம் போன்ற மேலும் பலப்பல விஷயங்களை விஞ்ஞான உபகரணங்கள் கணக்கிட்டுத் தகவல்களைக் கீழே கண்ட்ரோல் அறையில் உள்ளவர்களுக்கு அனுப்பி வைக்கிறது. அவை சங்கேதக் குறிகளாக 'பிப், பிப்' என்று ஒலி எழுப்பிக் கொண்டே திரையில் தெளிகின்றன. இந்தச் சமிக்ஞைகளை ஒரு திரைப்படக் காமிரா இயங்கிப் பதிவு செய்து கொள்கிறது. பின்னால் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் பிலிமைத் திரையிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

ரேடார் அறையில் ராக்கெட் கிளம்புமுன்னும் கிளம்பிய பின்னும் நிறைய வேலை இருக்கிறது. ராக்கெட் கிளம்பும் தேதி, நேரம் பற்றிப் பல நாட்கள் முன்னதாகவே அப்பகுதி கப்பல்கள், படகுகள் முதலானவற்றுக்கு எச்சரிக்கை அனுப்பப்பட்டிருந்த போதிலும் மீனவர்கள் சிலர் அறியாமையாலோ அல்லது பிடிவாதத்தாலோ சுற்றறிக்கையை அலட்சியம் செய்யலாம். அப்படி யாரும் துணிந்திருந்தால் அவர்களுக்கு ஆபத்து நேராதிருக்கப் பரிசோதனையை ஒத்திப் போட நேரிடும். இதற்காக ரேடார் அறையின் மேலுள்ள பிரும்மாண்டமான வட்டத் தட்டின் உதவியுடன் மின்காந்த அலைகள் அனுப்பப்பட்டு அவற்றின் எதிரொலிகள் பெறப்படுகின்றன. ரேடார் அறையின் டெலிவிஷன் திரை போன்ற அமைப்பில் தெரிய வரும் சங்கேதக் குறிகள் கப்பலோ, படகோ, விமானமோ இருப்பதையும் இல்லாததையும் தெரியப்படுத்தி விடுகின்றன.

ராக்கெட் கிளம்பிய கணத்திலிருந்து ஒவ்வொரு வினாடியும் அது எந்த உயரத்தில் இருக்கிறது என்பதை ரேடார் கணித்து, அதை வரைபடமாகவும் வரைந்து தந்து விடுகிறது. ராக்கெட்டின் இரண்டாம் கட்டம் இயங்கத் தொடங்கிய தருணம், விஞ்ஞான உபகரணங்கள் அடங்கிய கலம் பிரிந்த கட்டம், அது மேலும் சற்று உயரே பயணப்பட்டுப் பின்னர் கீழிறங்கி வரும் நிலைகள் எல்லாம் வினாடிக்கு வினாடி பதிவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு புதன்கிழமையையும் வானிலை ஆராய்ச்சிக்கென்று (Meteorological day) ஒதுக்குவது என்று சர்வதேச நாடுகள் கொண்ட உடன்படிக்கையின்படி நடக்கும் பரிசோதனை இது. இந்த ராக்கெட்டின் பாகங்கள், எரிபொருள் முதலியன ருஷ்யாவிலிருந்து தனித்தனி பாகங்களாகத் தும்பாவுக்கு வந்து சேர்ந்து இங்கே விஞ்ஞானிகளால் இணைக்கப்பட்டு உயரே அனுப்பப்படுகின்றன. தும்பாவில் மட்டுமின்றி வேறு பல நாடுகளிலும் விஞ்ஞானிகள் இதே நாளில், நேரத்தில் ராக்கெட்டை அனுப்பி இதே போன்ற பரிசோதனைகளை நிகழ்த்துகின்றனர். முடிவுகளை ஒப்புநோக்கிப் பார்த்துப் பயனடைகின்றனர்.

திருவனந்தபுரத்திலிருந்து பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் தும்பாவில் உள்ள விக்ரம் ஸாராபாய் விண்வெளி நிறுவனத்தில் நடைபெறும் மிக எளிய ஓர் ஆராய்ச்சி இது! இந்த மிக எளிய ஆராய்ச்சிக்கே மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுகள் பிரமிக்க வைப்பன. ஆயின் இதை விடக்கூட சிக்கலான ஆராய்ச்சிகளைத் தும்பா நிறுவனம் மூன்று கட்ட ராக்கெட்டுகளையும் பயன்படுத்தி நடத்துகிறது. கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வரும் இந்நிலையம், இதுவரை அறுநூறுக்கு மேற்பட்ட ராக்கெட்டுகளை விஞ்ஞானப் பரிசோதனைகளுக்காகவும் ராக்கெட்டுகளின் இயக்கத் திறனை ஆராய்வதற்காகவும் அனுப்பியிருக்கிறது: வெளிநாட்டவரின் ஒத்துழைப்பின்றி நாமாகவே இந்த ஆராய்ச்சிகளை நடத்தும் திறமையையும் பெற்றுள்ளோம். மூன்று கட்ட ராக்கெட்டுகளை உருவாக்குதல், எரிபொருள் உற்பத்தி, விஞ்ஞான உபகரணங்கள் அடங்கிய கலத்தினைத் தயாரித்தல், இவற்றை இணைத்தல், ராக்கெட் புறப்பட வேண்டிய இடத்துக்குப் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லுதல், அங்கே படுத்த வாட்டில் இருக்கும் ராக்கெட்டைக் கிட்டத்



1. இந்தியாவில் விண்வெளித்துறை வளம் பெற அஸ்திவாரமிட்ட மேதைகள் ஹோமி பாபா, விக்ரம் ஸாராபாய்.
2. அனலைக் கக்கிக் கொண்டு விண்ணை நோக்கித் தாவும் ராக்கெட்.
3. ரேடார் நிலையங்கள்.
4. கடைசி கட்ட ராக்கெட்டில் இடம் பெற்று வானில் வெளியேற்றப்பட வேண்டிய விஞ்ஞான உபகரணங்கள் பூர்வாங்கச் சோதனைகளுக்கு உள்ளாகின்றன.

தட்ட செங்குத்தான நிலைக்குக் கொணருதல், பிறகு பாதுகாப்பான 'பிளாக் ஹவுஸ்' எனப்படும் அரண் அமைப்புக்குள் இருந்து கொண்டு எரிபொருளைப் பற்றச் செய்து ராக்கெட்டுக்கு விசையூட்டி உயரே கிளம்பச் செய்தல், விஞ்ஞான உபகரணங்களிலிருந்து சங்கேதக்குறிகளைப் பெற்று அதன் தொடர்பான விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடத்துதல் போன்ற எல்லாக் காரியங்களையும் நமது விஞ்ஞானிகள், பொறி இயல் நிபுணர்கள் தும்பாவில் மிகுந்த சிரத்தையுடன் நடத்தி வருகிறார்கள்.

வானில் சிறிது தூரம் ஊடுருவி அங்குள்ள நிலைகளை ஆராய்வதே இத்தனை சிரம சாத்தியமான காரியமென்றால் ஒரு செயற்கைச் சந்திரனைத் தயாரித்துப் பூமியைச் சுற்றிவருமாறு அதை அனுப்புவது எவ்வளவு கடினமான விஷயம்! ஆனால் அதையும் நமது விஞ்ஞானிகள் ஆண்டவன் அருள் இருப்பின் அண்மைக் காலத்தில் சாதிக்கத்தான் போகிறார்கள்! 1978-ல் இதைச் செய்து காட்டுவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தும்பாவின் கதையை அறிய முற்படும் எவரும் தங்கள் நன்றிக்கு உரியவர்களான இரண்டு மேதைகளை எண்ணிப் பார்க்கவேண்டும். ஒருவர் பாபா. மற்றொருவர் விக்ரம் ஸாரரபாய். பாபா என்றதுமே நமக்கு ஞாபகம் வருவது அணு ஆராய்ச்சிதான். ஆனால் பாபாவின் அறிவுத் திறனுக்குள் அடங்கியது அணு ஆராய்ச்சி மட்டுமல்ல. தாவர இயல் ஆகட்டும், விண்வெளித் துறையாகட்டும், கம்ப்யூட்டர் புரட்சியாகட்டும், வேறு எந்தத் துறை தானாகட்டும் அனைத்திலும் அவருக்கு அபார ஞானம் உண்டு. அவருடைய காலத்திலே விக்ரம் ஸாராபாயின் யோசனைப்படி விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தும்பாவில் உருவாகத் தொடங்கியது. பாபாவுக்குப் பின்னால் அவரைப் போலவே ஸாராபாயும் அணு ஆராய்ச்சித் துறை, விண்வெளித்துறை இரண்டுக்கும் முழுப் பொறுப்பு ஏற்றிருந்தார். ஆனால் பாரதத்தின் துரதிருஷ்ட வசமாக ஸாராபாயும் காலமாகி விட்ட பின்னர் இத்துறைகள் பிரிந்து தனித்தனி அமைப்புக்களாக இயங்கி வருகின்றன.

விண்வெளி ஆராய்ச்சியின் அளப்பரிய பயன்களைத் தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்து. இந்தியா இவ்விஷயத்தில் பின்தங்கி விடக்கூடாது என்று கவலையுடன் கருதி, தும்பாவில் பலமான அஸ்திவாரமிட்டுச் சென்றார் விக்ரம். இன்று நமது விஞ்ஞானிகள் அந்த அஸ்திவாரத்தின் மீது பல அடுக்கு மாளிகை எழுப்பி வருகிறார்கள். இந் நிலையத்தை உருவாக்கத் தொடக்கத்தில் பாரத அரசுக்கு பிரான்ஸ் அமெரிக்கா, ருஷ்யா ஆகிய நாடுகள் பெரிதும் உதவின.

தும்பாவை ஸாராபாய் தேர்ந்தெடுத்ததற்கு முக்கிய காரணம் உண்டு. பூகோளப் படத்தில் வரும் பூமத்தியரேகை நமக்குத் தெரியும். ஆனால் காந்த பூமத்திய ரேகை (Magnetic equator) என்பதாக ஒன்றினை விஞ்ஞானிகள் அறிவர். இது இந்தியாவில் பாயும் வழியில் தும்பா இருப்பதால் இந்த விஸ்தாரமான அறுநூறு ஏக்கர் கடற்கரை நிலப்பரப்பை ராக்கெட் தளமாகத் தேர்ந்தெடுத்தார் ஸாராபாய். காந்த பூமத்திய ரேகை பாயும் பிரதேசத்துக்கு மேலாக உள்ள ஆகாயத்தில் உலக விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்குரிய சில புதிர்கள் இருக்கின்றன. உதாரணமாக நாற்றிறந்து கிலோமீட்டர் உயரத்தில் உள்ள எலெக்ட்ரோ ஜெட் எனப்படும் ஒரு மின்கற்றை அமைப்பைக் குறிப்பிடலாம். இதுபோன்ற பல விஷயங்களை ஆராய உலக விஞ்ஞானிகளுக்கு உதவும் பொருட்டுத் தும்பாவில் உள்ள ஆராய்ச்சி வசதிகளை ஐ. நா. சபைக்கே அர்ப்பணித்தார் நமது பிரதமர். ஐ. நா.விடமிருந்து பொருளாதார உதவி ஏதும் இதற்கென நமக்குக் கிடைக்காத போதிலும் இவ்வாறு நாம் நடந்து கொண்டதானது பிரான்ஸ், ஜப்பான் பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து விஞ்ஞானிகள் இங்கு வந்து ஆராய்ச்சிகளை நடத்த வழி வகுத்தது. அவர்களுடன் கலந்து உரையாடி உதவியதால் நமது விஞ்ஞானிகளும் அளப்பரிய பயன் பெற்றனர்.

சந்திரனுக்கு மனிதனை அனுப்புவது போன்ற மாபெரும் பணியை மேற்கொள்ள இந்தியாவுக்கு அவசியமோ அல்லது பொருளாதார வசதியோ இல்லை என்றாலும் ராக்கெட்டில் சில விஞ்ஞான உபகரணங்களை வைத்து அனுப்புவதுடன் நாம் திருப்தி அடைந்து விடவும் முடியாது. ஸாராபாயின் நோக்கம் இந்தியா செயற்கைச் சந்திரனை உலகைச் சுற்றி வரும் வகையில் தயாரித்து அனுப்பும் தகுதி பெற வேண்டும் என்பது தான்.

செயற்கைச் சந்திரனால் ஏற்படக் கூடிய நன்மைகள் ஏராளம் என்பதை ஸாராபாய் உணர்ந்திருந்ததால்தான் நமது முதல் செயற்கைச் சந்திரன் 1974-ல் உலகைச் சுற்றி வர வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்தார். ஆனால் இது 1978-க்கு முன் நடப்பது சாத்தியமில்லை என்று இப்போது கருதப்படுகிறது. அவ்வாறானால் ஸாராபாயின் கணக்குப் பிசகு என்று அர்த்தமா? அப்படிக் கூறுவதற்கில்லை. பிற நாடுகளில் விண்வெளி விஞ்ஞானம் வளர்ந்து வரும் வேகத்தை அவர் உணர்ந்திருந்தபடியால் நமது ஒவ்வொரு நாள் தாமதமும் இத்துறையில் நமக்குள்ள ஞானக் குறைவை அதிகரித்துக் கொண்டே போகும் என்பதை அறிந்திருந்தார். இந்த ஞான இடைவெளியை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு மட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே துரித முன்னேற்றம் காண 1974 என்று இலக்கு நிர்ணயித்தார். இப்படி ஒரு குறுகிய கால இலக்கு நிர்ணயிக்காது போனால் மனிதனின் முழு ஆற்றலும் வெளிப்படாது என்றும் அவர் கருதியிருக்கலாம். தாமதத்துக்கு மற்றொரு பிரதான காரணமும் உள்ளது. இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தை – பங்களா தேச விடுதலைப்போரை ஸாராபாய் எதிர்பார்த்திருக்க முடியாது. அதன் பின் விளைவாக அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நிலவிய நட்புறவு சோதனைக்குள்ளானது. இதனால் விண்வெளித் துறையில் அமெரிக்க ஒத்துழைப்பு முக்கியமான சில அம்சங்களில் கிடைக்காது போய்

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைடமின்களும், தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை:

அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?



வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்துப்போதல், சரும உபாதைகள், மற்றும் பல் உபாதைகள் - இவற்றிற்கு மூலகாரணம் சாதாரணமாக, இன்றியமையாத வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறைதான். இருப்பினும், வைடமின்களும், தாதுப் பொருள்களும் பெரும்பாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன. மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட உணவில் கூட இவற்றின் பற்றுக்குறை காணப்படுகிறது. வளமான உணவு எல்லாம் சரிவிகித உணவாக இருப்பதில்லை; விதவிதமான உணவுகளிலும், வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை இருக்கக் கூடும். அப்படியானல், அத்தியாவசியமான வைடமின்களும், தாதுப் பொருள்களும் - அதுவும் சரியான விகிதங்களில் - உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்?

உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும், தேவையான அளவுகளில் இந்த இன்றியமையாத போஷாக்குச் சத்துக்கள் கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விம்க்ரான் - ஸ்க்விப் பல்வேறு வைட்டமின், தாதுச் சத்து மாத்திரைகள் - கொடுங்கள், தினம் ஒரு மாத்திரை வீதம். இந்த ஆரோக்கியமான வழக்கத்தை இன்றே ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

விம்க்ரானில் 11 முக்கியமான வைடமின்களும், 8 தாதுப் பொருள்களும் சரியான அளவுகளில் அடங்கியிருக்கின்றன. இரத்தச் சிவப்பு உயிரணுக்களை வளர்க்கவும், சக்தியை மீண்டும் பெற உதவவும் இரும்புச் சத்து - எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைத்திருக்க கால்ஷியம் - ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்க வைடமின் ஸி - சிறந்த கண் பார்வைக்கும், ஆரோக்கியமான சருமத்திற்கும் வைடமின் ஏ - பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் வைடமின் பி-12 - இவற்றுடன், உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்குத் தேவையான, இதர போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்

11 வைட்டமின்களும் 8 தாதுப் பொருள்களும் அடங்கியது.


ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது.

Squibb SARABHAI CHEMICALS

Shilpi HPMA-25A/71 Tam

வயிற்றுக் கோளாறு?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை மெல்லுங்கள்...
விரைவிலேயே நிவாரணம் பெற

பெப்பர்மின்ட் சுவையுள்ள ரென்னியை கைவசம் வைத்திருங்கள்.

நிக்கோலஸ் (N) தயாரிப்பு

mcm/ni/4 tam

விட்டது. அமெரிக்கா ஏன் பின் வாங்கியது? செயற்கைச் சந்திரனை அனுப்புமளவுக்கு ராக்கெட் விஞ்ஞானம் இங்கே வளர்ச்சியுற்று விட்டது என்றால், ராணுவ ரீதியில் நாம், நாடு விட்டு நாடு சென்று குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்கக்கூடிய பெரிய ஏவுகணைகளைத் தயாரிக்கும் வல்லமை பெற்று விட்டோம் என்பதாகவும் அர்த்தம்செய்து கொள்ளலாம். விமானியின் உதவியின்றித் தானியங்கு முறையில் பறக்கும் ஏவுகணைகளை உருவாக்கி ராணுவ ரீதியில் நாம் பயன்படுத்தலாம் என்ற எண்ணத்தாலேயே அமெரிக்க உதவி நமது விண்வெளித் துறைக்குச் சில பல அம்சங்களில் இன்றைக்கு இல்லாது போய் விட்டது. அமெரிக்கா மட்டுமென்ன, வேறு எந்த நாடுமே நமக்கு உதவும் என எதிர்பார்க்க முடியாத குறிப்பிட்ட அந்த அம்சங்கள் யாவை?

செயற்கைச் சந்திரனை அதனுள் பொருத்தப்பட வேண்டிய உபகரணங்களுடன் தயாரிப்பது ஒருபுறமிருக்க அதனைக் குறிப்பிட்ட உயரத்தில், குறிப்பிட்ட வேகத்தில், குறிப்பிட்ட பாதையில், உலகைச் சுற்றி வருமாறு அனுப்புவது என்பது ராக்கெட் விஞ்ஞானத் துறையில் சிக்கலான பிரச்னையாகும். இத்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற, விஞ்ஞானப் பரிசோதனைக்கான உபகரணங்கள் அடங்கிய கலனை ஏந்தி, காற்றைக் கிழித்துக் கொண்டு மேலே செல்லும் ராக்கெட்டுகளைத் திசை திருப்பவோ, குறிப்பிட்ட பாதையில் செல்லுமாறு திருத்தவோ, கட்டுப்படுத்தவோ தேவையில்லை. ஆனால் செயற்கைச் சந்திரனை ஏந்திச் செல்லும் நாலு கட்ட ராக்கெட்டின் அளவும் சக்தியும் மிக அதிகமாகும் என்பதுடன் அந்த ராட்சத வடிவ ராக்கெட்டைக் கட்டுப்படுத்தவும் வேண்டும். அதன் வேகம், பாதை, திசை முதலியன நிர்ணயித்த அளவில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட செங்குத்தாகவே செல்லும் ராக்கெட்டின் கடைசிக் கட்டம், குறிப்பிட்ட உயரத்தில் செங்குத்தான நிலையிலிருந்து இலேசாகத் திசை மாறி, ஏறத்தாழ பூமி மட்டத்துக்கு இணையான வட்ட வடிவ விண்வெளிப் பாதையில் செயற்கைச் சந்திரனை நிர்ணயித்த வேகத்தில் வெளிப்படுத்தவேண்டும். இல்லாத போனால் செயற்கைச் சந்திரன் பூமியைச் சுற்றி வருவதற்குப் பதில் எல்லையற்ற விண்வெளியில் பாய்ந்து எங்கேயாவது சென்று விடக் கூடும். இவ்வாறு ராக்கெட்டின் திசை, வேகம் முதலியவற்றைக் கட்டுப்படுத்தும் உபகரணங்கள் ராக்கெட்டில் பொருத்தப்பட்டு அவை தானியங்கு முறையில் செயல்படுமாறு கம்ப்யூட்டர்கள் கவனித்துக் கொள்கின்றன. ஒருவேளை கம்ப்யூட்டர்கள் ஆற்றல் இழந்தால் பூமியில் உள்ள விஞ்ஞானிகள் ரேடியோத் தொடர்பு கொண்டு ராக்கெட்டின் திசை திருப்பும், கட்டுப்படுத்தும் சாதனங்களை இங்கிருந்தபடியே இயக்குவர்.

இவ்விதமாக ராக்கெட்டைக் கட்டுப்பாட்டுடன் செயல்படச் செய்யும் ஆற்றலைத் தான் நமது விஞ்ஞானிகள் இன்னும் முழுமையாகப் பெறவில்லை. ஆராய்ச்சிகள் தீவிரமாய் நடைபெற்று வருகின்றன. ராக்கெட் தயாரிப்பு, எரிபொருள் தயாரிப்பு ஆகியவற்றில் துரித முன்னேற்றம் ஏற்படுவதில் அதிகம் சிரமம் இல்லை. ஏனெனில் அயல்நாடுகளில் தயாரான ராக்கெட்டுகள் இங்கே நம் பார்வைக்கும் பரிசோதனைக்கும் வந்தன. அவற்றை ஆராய்ந்தும் விண்வெளிக்கு அனுப்பியும் நமது விஞ்ஞானிகள் பயனடைந்தனர். எனவே செயற்கைச் சந்திரனைச் சுமந்து செல்லப் போகிற ராக்கெட்டையும் அதற்குரிய எரிபொருளையும் பிறர் உதவியின்றித் தயாரிக்கும் ஆற்றல் நமக்கு இருப்பதாக நம்பிக்கையுடன் விஞ்ஞானிகள் உள்ளனர், செயலாற்றி வருகின்றனர். ஆனால் ராக்கெட்டைத் திசை திருப்பிக் கட்டுப்படுத்தும் விஞ்ஞான நுணுக்கங்களைத் தற்போது நமது விஞ்ஞானிகள் அயல் நாட்டவரின் ஒத்துழைப்பு இன்றித் தாமாகவே ஆய்ந்து தேர்ந்து, தவறுகளைத் திருத்திக் கொண்டு படிப்படியாக முன்னேறி வருகின்றனர். அயல்நாட்டு விஞ்ஞானிகளின் பூரண ஒத்துழைப்பு இருந்தாலே இந்தச் சிக்கலான பிரச்னைகளைப் புரிந்து கொண்டு செயலாற்றி வெற்றி காண ஆண்டுகள் பல பிடிக்கும் என்றால் நாமாகவே ஆராய்ந்து தெரிந்து கொள்வதில் உள்ள சிரமங்களை ஊகிக்கலாம்.

எப்படியானாலும் நமது விஞ்ஞானிகள் வேறு எந்த நாட்டவருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்றும் மிக சீக்கிரமே சிக்கல்களை விடுவித்து நமது செயற்கைச் சந்திரனை விண்வெளிக்கு அனுப்புவதில் தங்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள் என்றும் கருதி ''ஜெயவிஜயீபவ'' என்று வாழ்த்துவோம்!

—வி. ராஜேந்திரன்

[அடுத்த இதழில்: இயற்கையை வெல்லும் செயற்கைச் சந்திரன்]

ஜனக்புரியில் ஒரு தமிழ்ப்பள்ளி


தாய்மொழியின் பெருமையே தனி. எனவேதான், தமிழர்கள் தில்லி சென்றாலும், திரைகடல் கடந்து சென்றாலும், தமிழுக்கென்று ஒரு மன்றம் நிறுவித் தாங்களும் பயனுற்றும் பிறரையும் பயனுறச் செய்து வருகிறார்கள்.

தில்லி, ஜனக்புரியில் ஏறக்குறைய நானூறு தமிழ்க் குடும்பங்கள் குடியிருப்பு நிறுவிக் குடியேறியுள்ளன. அதனைத் தொடர்ந்து தமிழ்ப்பணி புரிய ஒரு சங்கமும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சிறுவர்களுக்குத் தமிழ்ப்பள்ளி ஒன்றை இம்மன்றம் நடத்த முயற்சி செய்து வருகிறது.

வடநாட்டிலும் தமிழ் ஒலிக்கச் செய்யும் இந்த நன்முயற்சி நிறைவேற, உதவ விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

Janakpuri Tamil Association, C 2D/16 C, Janakpuri, New Delhi - 110 018

இலவசம்!



புத்தம் புதிய போர்ஹென்ஸ் புத்தகம்—‘பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை’.

இந்த விவரமான வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெறுங்கள்! இன்றே இக் கூப்பனை அனுப்புங்கள்.

மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை எண் 10031, பம்பாய் 1.

“பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை” என்னும் போர்ஹென்ஸ் புத்தகத்தின்* ஒரு பிரதியை இலவசமாக எனக்கு அனுப்பவும். தபால் செலவுக்காக 20 காசு தபால் தலை அனுப்பியுள்ளேன். K.6.B.A

பெயர் ____________________ வயது __________

முகவரி ____________________

____

*எந்த மொழியில் புத்தகம் வேண்டுமோ, அதன் கீழ் கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, அஸ்ஸாமி, தமிழ், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.

போர்ஹென்ஸ் பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

100F-152 TAMR


பதினோராம் அத்தியாயம்

"பயங்கொள்ளிப் பல்லவன்"

சிவகாமி நிருத்தம் ஆடியபோது சுய உணர்வுடன் இருந்தவர் ஒருவர் நல்ல வேளையாக அங்கே இருந்தார். அவர் பிக்ஷு நாகநந்திதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

''போதும் ஆயனரே! ஆட்டத்தை நிறுத்துங்கள். இனிமேல் ஆடினால் சிவகாமியும் தாங்க மாட்டாள். உலகமும் தாங்காது'' என்ற நாகநந்தியின் வார்த்தைகளைக் கேட்டு, ஆயனர் சுயப்ரக்ஞை அடைந்து, தாளம் போடுவதை நிறுத்த, சிவகாமியும் ஆட்டத்தை நிறுத்தினாள்.

புத்த பிக்ஷு கூறினார்: ''ஆயனரே! நீர் எத்தகைய துரோகம் செய்து கொண்டிருக்கிறீர்? இப்படிப்பட்ட தெய்விகமான கலையை இந்த நடுக் காட்டிலே ஒளித்து வைத்துக் கொண்டிருக்கலாமா? லோபி ஒருவன் தனக்குக் கிடைத்த மதிப்பில்லாத ரத்தினத்தைப் பெட்டிக்குள்ளே பூட்டி வைத்திருப்பது போல் அல்லவா இருக்கிறது நீர் செய்யும் காரியம்? தீபத்தை ஏற்றி நடுக் கூடத்தில் வைக்க வேண்டும். அப்படிக்கின்றி, மூலை முடுக்கிலே வைத்துத் துணியைப் போட்டு மூடினால், தீபம் அணைந்து போவதுடன் துணியும் அல்லவா எரிந்து போகும்? உலகம் பார்த்துப் பிரமிக்கும்படியான கலைச் செல்வம் உமது குமாரியிடம் இருக்கிறது. அதைப் பார்த்து ஆனந்திக்க உலகமும் காத்திருக்கிறது. நான் சொல்கிறதைச் சற்றுச் செவி கொடுத்துக் கேளுங்கள். என்னுடன் கிளம்பி வாருங்கள். தில்லைப்



பதிக்குப் போவோம். அங்கே பரம சிவனுக்குப் போட்டியாகப் பார்வதி ஆடியதுபோல் சிவகாமியும் ஆடட்டும். ஆனால், பார்வதியைப் போல் சிவகாமி நடனப் போட்டியில் தோற்க மாட்டாள். எடுத்த எடுப்பிலேயே நடராஜா தோற்றுப் போவார். அவருடைய தூக்கிய திருவடியைப் பூமியின் மேல் வைத்து இளைப்பாறுவார். தில்லையிலிருந்து நாகப்பட்டினத்துக்குப் போகலாம். நாகப்பட்டினத்திலே புத்த பிக்ஷுக்களின் மகா சங்கம் கூடப்போகிறது. இந்தக் கூட்டத்துக்காகக் கன்யாகுப்ஜத்திலிருந்தும், காசியிலிருந்தும், கயையிலிருந்தும், கடல்களுக்கு அப்பாலுள்ள சாவகத் தீவிலிருந்தும் சீனத் தேசத்திலிருந்தும் பௌத்தர்கள் வருகிறார்கள். உலகத்தின் நாற் பக்கங்களிலிருந்தும் சிற்பக் கலைஞர்களும், இசை வல்லார்களும் நடன சாஸ்திர மேதைகளும் நாகைப்பட்டினத்தில் கூடுகிறார்கள். அந்த மகா சங்கத்திலே உங்கள் புதல்வி நடனம் ஆடட்டும்; அவளுடைய புகழும், அவளைப் பெற்ற உம்முடைய புகழும் உலகமெல்லாம் பரவட்டும்; நாகைப்பட்டினத்திலிருந்து உறையூருக்குப் போவோம். உறையூர்ச் சோழர்கள் இன்று தாழ்வடைந்து பல்லவர்களுக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும் பூர்வீகப் பெருமை உடையவர்கள். கலைகளில் அபாரப் பற்று உடையவர்கள். பார்த்திபன் என்னும் சோழ இராஜ குமாரன் அங்கே இருக்கிறான். சித்திரக் கலையில் தேர்ந்தவன். சிவகாமியின் நடனத்தைப் பார்த்தால் அவனுடைய ஆனந்தத்துக்கு அளவே இராது. பின்னர் அங்கிருந்து கிளம்புவோம். சித்தர் வாச மலையின் சித்திர விசித்திரங்களைச் சிவகாமிக்குக் காட்டிவிட்டு மதுரை மாநகருக்குச் செல்வோம். அங்கே மாறவர்ம பாண்டியன் சமீபத்திலே தான் காலமாகி, அவன் மகன் சடையவர்மன் பட்டத்துக்கு வந்திருக்கிறான். சடைய வர்மன் மகா ரஸிகன். ஆஹா! சடைய வர்ம பாண்டியன் மட்டும் சிவகாமியின் நடனத்தைப் பார்த்துவிட்டால், உங்களை இந்த அரண்ய வீட்டிலே இப்படி நிர்க்கதியாக விட்டிருப்பானா? மதுரை நகரிலுள்ள மாடமாளிகைக்குள்ளே மிக உன்னதமான மாளிகை எதுவோ, அதிலே அல்லவா உங்கள் இருவரையும் வைத்துப் போற்றுவான்?...''

இவ்விதமாக நாகநந்தி பேசி வருகையில் ஆயனரும் சிவகாமியும் பாம்பாட்டியின் மகுடி வாத்தியத்தில் மயங்கிப் படமெடுத்தாடும் சர்ப்பத்தைப் போல் அவருடைய மொழிகளைக் கேட்டு வந்தார்கள்.

கடைசியில், ''என்ன சொல்கிறீர், ஆயனரே?'' என்று நாகநந்தி கூறி நிறுத்தியபோது, ஆயனருக்கு உண்மையில் இன்னது சொல்வதென்றே தோன்றவில்லை. அவருடைய மனத்தில், சக்கரவர்த்தியின் கட்டளைக்கும் நாகநந்தியின் யோசனைக்கும் வெகு பொருத்தமா யிருக்கிறதே?' என்ற எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது. இருந்தாலும் காரணம் தெரியாத ஒரு விதத் தயக்கமும் உண்டாயிற்று. எனவே, ''நான் என்ன சொல்வது? சிவகாமியைத்தான் கேட்க வேண்டும்'' என்று சொல்லி, சிவகாமியை நோக்கினார்.



சிவகாமிக்கோ, சிதம்பரத்தையும் நாகைப்பட்டினத்தையும் உறையூரையும் பற்றிக் கேட்கும்போது அங்கெல்லாம் அவள் போவது போலவும், பல்லாயிரக் கணக்கான மக்களின் முன்னே ஆடுவது போலவும், அவர்களுடைய பாராட்டுதலைப் பெற்று மகிழ்வதுபோலவும் மனக் கண் முன்னால் தோன்றிக் கொண்டே வந்தது. ஆனால், அவள் மனத்திலும் ஒரு தடை, இன்னதென்று விளங்காத ஏதோ ஒரு சந்தேகம் குறுக்கிட்டுக் கொண்டே யிருந்தது.

எனவே, ஆயனர் மேற்கண்டவாறு கேட்டதும், சிவகாமி சற்று யோசித்து, ''எனக்கு என்ன தெரியும் அப்பா! உங்களுக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ, அப்படிச் செய்யுங்கள்!'' என்றாள்.

அப்போது நாகநந்தி, ''ஆமாம், ஆயனரே! உம்முடைய காலம் எவ்விதம் போய்க் கொண்டிருக்கிறது? இங்கே புதிய நடனச்சிலை எதையும் காணேமே? நான் கடைசி முறையாக வந்து போன பிறகு, புதிதாக ஒரு சிலைகூட அமைக்கவில்லையா?'' என்றார்.

ஆயனர் ஏக்கம் நிறைந்த குரலில், ''இல்லை; கல்லுளியைக் கையினல் தொட்டு வெகு காலமாயிற்று'' என்றார்.

''ஏன் அப்படி? சிற்பக் கலை என்ன பாவத்தைச் செய்தது? தென் தேசத்தின் ஒப்பற்ற மகா சிற்பி எதற்காகக் கல்லுளியைக் கையினல் தொடாமலிருக்க வேண்டும்?'' என்று பிக்ஷு கேட்டார்.



சிவகாமி அப்போது குறுக்கிட்டு, ''எல்லாம் உங்களால் வந்த வினைதான், அடிகளே! அஜந்தா வர்ண இரகசியத்தைக் கண்டுபிடிப்பதில் அப்பா முனைந்திருக்கிறார். தினம் தினம் வித விதமான பச்சிலைகளைத் தேடிக்கொண்டு வருவதும் அரைப்பதும்தான் ஏழு மாதமாய் அப்பா செய்யும் வேலை'' என்றாள்.

''ஆகா! வீண் வேலை! நான்தான் எப்படியும் உங்களுக்கு அதை அறிந்து சொல்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறேனே!''

ஆயனர் சிறிது பரபரப்புடன், ''வாக்குக் கொடுத்தது உண்மைதான். ஆனால் அதை நிறைவேற்றுவதாகக் காணோமே. நீங்கள் ஓலை கொடுத்து அனுப்பியதுதான் உபயோகப்படவில்



லையே! அந்தப் பிள்ளையாண்டான் இப்போது சைன்யத்தில் சேர்ந்து பெரிய தளபதியாகி விட்டான்; தெரியுமோ இல்லையோ?'' என்றார்.

''அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். நேற்றைக்குத்தான் அவன் காஞ்சிக்கு வந்தானாமே?''

''ஆம்! இன்று காலை அந்தப் பிள்ளையே இங்கே வந்திருந்தான். காஞ்சிக் கோட்டைக் காவலுக்காக அவனைச் சக்கரவர்த்தி அனுப்பி வைத்திருக்கிறாராம். அடே அப்பா! எட்டு மாதங்களுக்குள் அவனிடம் எவ்வளவு வித்தியாசம்? அடக்க ஒடுக்கத்துடனும் நாணம் அச்சத்துடனும் அன்றைக்கு உங்களுடன் வந்தானே, அந்தப் பரஞ்சோதி எங்கே? இன்று காலை காஞ்சித் தளபதியாக வந்த பரஞ்சோதி எங்கே? என்ன அகம்பாவம்! என்ன கர்வம்!''

''அப்பா! அவரிடம் அகம்பாவம் ஒன்றும் இல்லையே! தங்களிடம் எவ்வளவோ பய பக்தியுடன்தான் நடந்து கொண்டார். சக்கரவர்த்தியின் கட்டளையைக் கூட எவ்வளவு தயக்கத்துடன் கூறினார்?'' என்று சிவகாமி குறுக்கிட்டுச் சொன்னாள்.

''ஆயனரே! சக்கரவர்த்தியின் கட்டளை என்ன? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று புத்த பிக்ஷு கேட்டார்.

''எங்களை இந்த வீட்டை விட்டுப் போகச் சொல்லிக் கட்டளை! எப்படியிருக்கிறது கதை? இந்த மகேந்திர பல்லவர் ஒரு காலத்தில் சிற்பக் கலையில் எவ்வளவு பற்று உடையவராயிருந்தார்? அவரைப் பற்றி நான் என்னவெல்லாம் எண்ணியிருந்தேன்?'' என்று ஆயனர் எதையோ பறிகொடுத்து விட்ட குரலில் கூறினார்.

''நானும் உங்கள் சக்கரவர்த்தியைப் பற்றி என்னவெல்லாமோ எண்ணியிருந்தேன். அவருடைய சாமர்த்தியம் இப்போதுதான் தெரிகிறது. உங்கள் சக்கரவர்த்தி எப்பேர்ப்பட்ட காரியத்தைச் சாதித்திருக்கிறார், தெரியுமா ஆயனரே? பல்லவ சைனியத்தில் ஐம்பதாயிரம் வீரர்களுக்கு மேலே இருக்க மாட்டார்கள். அந்த அற்பச் சைனியத்தை வைத்துக் கொண்டு கடல் போன்ற வாதாபி சைனியத்தை எட்டு மாதங்களுக்கு மேல் வட பெண்ணைக் கரையிலேயே நிறுத்தி வைத்திருந்தார்! மகேந்திர பல்லவர் வெகு கெட்டிக்காரர் ஆயனரே! வெகு கெட்டிக்காரர்! இருக்கட்டும்; பரஞ்சோதி தான் போன காரியத்தைப் பற்றி என்ன சொன்னான்? ஓலையை என்ன செய்தானாம்? அதைப் பற்றி நீங்கள் ஒன்றும் கேட்கவில்லையா?'' என்று புத்தபிக்ஷு வினவினார்.

''கேட்காமல் என்ன? பாவம்! அந்தப் பிள்ளைக்கு வழியிலே பெரிய விபத்து நேர்ந்து விட்டதாம். சளுக்க வீரர்கள் அவனைப் பிடித்துக் கொண்டு விட்டார்களாம். எப்படியோ பையன் சளுக்க வீரர்களிடமிருந்து தப்பித்து வந்து விட்டானாம். நல்ல வேளையாகச் சிறை பிடிக்கப்பட்டதும் ஓலையை மலைப் பள்ளத்தாக்கில் ஓடிய அருவியிலே எறிந்து விட்டானாம்! புத்திசாலிப் பையன்!''

''புத்திசாலி! அதோடு அதிர்ஷ்டசாலி! முதன் முதலில் சாலை ஓரத்தில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தபோது பார்த்தவுடனேயே இவன் மிக அதிர்ஷ்டசாலியாவான் என்று எனக்குத் தெரிந்து போயிற்று. ஆனால், நான் அவனுக்கு எதிர்பார்த்த அதிர்ஷ்டம் வேறு! ஆஹா! என்ன தவறு செய்து விட்டேன்!'' என்று நாகநந்தி கூறி, இலேசாக ஒரு பெருமூச்சு விட்டார்.



போற்றத்தக்க
பெருமை உடையது
உங்கள் அழகு...
அணியத்தக்க
பெருமை உடையது
சாரதாஸின்
பட்டுப் புடவைகள்.


சாரதாஸின்
பட்டுப் புடவைகளை
அணிந்து
லட்சுமிகரமாக
விளங்குங்கள்.

சாரதா'ஸ்


பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான பெயர்

தன் பில்டிங், 175/1, மவுண்ட்ரோடு,
சென்னை-2. போன்: 87177

32, N.S.B. ரோடு, திருச்சி-2.
போன்: 7077



அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!



பியர்ஸ் சருமக் களை ...
கன்னிப் பருவக் களை

பியர்ஸ் —
அசல்
கிளிசரின் சோப்

''அடிகளே! பரஞ்சோதிக்கு இப்போது அதிர்ஷ்டம் ஒன்றும் குறைவாகப் போய்விடவில்லையே?''

''உங்களுக்குத் தெரியாது, ஆயனரே! இன்னும் எவ்வளவோ பெரிய அதிர்ஷ்டம் அவனுக்கு வருவதற்கு இருந்தது. ஏதோ ஒரு கிரகம் வந்து குறுக்கிட்டிருக்கிறது!''

''நல்லவேளை; இவ்வளவு அதிர்ஷ்டத்தோடேயே நிற்கட்டும். இன்னும் அதிகமானால், பையனுக்குத் தலைகால் தெரியாமல் போய் விடும்!'' என்றார் ஆயனர். அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து கொள்ளாமல் வந்ததில் பரஞ்சோதியின் மேல் அவருக்கு மிக்க வெறுப்பு உண்டாகியிருந்தது.

சிவகாமி குறுக்கிட்டு, ''அப்பா! அப்பா! ஒரு செய்தி கேட்டீர்களா? மகேந்திர சக்கரவர்த்தி ஒருவேளை பல்லவ இராஜ்யம் மாமல்லருக்கு இல்லையென்று சொல்லிவிட்டுப் பரஞ்சோதிக்குக் கொடுத்தாலும் கொடுத்து விடுவாராம். ஜனங்கள் அப்படிப் பேசிக் கொள்வதாகச் சாரதி கண்ணபிரான் சொன்னார்'' என்று கூறிவிட்டுக் கன்னங்கள் குழியக் 'கலகல'வென்று சிரித்தாள்.

''யார், கண்ணபிரானா? அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்! இப்படித்தான் ஏதாவது உளறுவான்'' என்றார் ஆயனர்.

அப்போது நாகநந்தி, ''இல்லை, ஆயனரே, இல்லை! சாரதி கண்ணபிரான் சொன்னது அப்படி ஒன்றும் உளறல் இல்லை. அவன் சொன்னபடி நடந்தால், அதில் எனக்கு வியப்பு இராது. காஞ்சி சிங்காதனத்தில் பயங்கொள்ளிப் பல்லவனை வைத்துப் பட்டம் கட்டுவதைக் காட்டிலும் பரஞ்சோதிக்கு இராஜ்யத்தைக் கொடுப்பதே வீர மகேந்திர பல்லவருக்கு உகப்பாயிருக்கும்'' என்றார்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

உள்ளப் புயல்

எதிர்பாராத நேரத்தில் வானத்திலிருந்து ஒரு மின்னல் பாய்ந்து வந்து மண்டையைப் பீறிக் கொண்டு தேகத்துக்குள் பாய்வது போன்ற உணர்ச்சி, 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்ற சொற்களைக் கேட்டதும் சிவகாமிக்கு ஏற்பட்டது.

ஆயனரும் திடுக்கிட்டவராய், ''அடிகளே! என்ன சொல்கிறீர்! பயங்கொள்ளிப் பல்லவன் யார்?'' என்று கேட்டார்.

''பயங்கொள்ளிப் பல்லவனைப் பற்றி உலகமெல்லாம் அறியுமே? நாடு நகரமெல்லாம் பேச்சாயிருக்கிறதே? உங்களுக்குத் தெரியாதா? ஆனால், நீங்கள் காட்டுக்குள்ளே இருக்கிறீர்கள்; உங்களுக்குத் தெரியாதுதான்!'' என்றார் பிக்ஷு.

''என்ன தெரியாது? யாரைப் பற்றி உலகம் என்ன சொல்கிறது? ஒரே மர்மமாயிருக்கிறதே!'' என்றார் ஆயனர்.

''ஒரு மர்மமும் இல்லை. உலகமெல்லாம் தெரிந்த விஷயத்தை உங்களுக்கு நான் சொன்னால் தான் என்ன? மாமல்லன் என்று பட்டப் பெயர் பெற்ற குமார சக்கரவர்த்தி நரசிம்ம பல்லவனைப் பற்றித்தான் சொல்கிறேன்.



அவன் பெரிய கோழை, பயங்கொள்ளி என்பது உலகப் பிரசித்தமாயிற்றே? முதன் முதலில் வாதாபி சைனியம் படையெடுத்து விட்டது என்று கேள்விப்பட்டதுமே மாமல்லனுக்கு உடம்பெல்லாம் நடுக்கமடைந்து மயங்கி விழுந்து விட்டானாம். அதுவும் அந்தச் சமயத்தில் அவன் அரண்மனை அந்தப்புரத்து மாதர்களுக்கு மத்தியில் இருந்தானாம். சக்கரவர்த்திக்கு மானமே போய் விட்டதாம். ஆயனரே! மாமல்லனை ஏன் சக்கரவர்த்தி யுத்தகளத்துக்கு அழைத்துப் போகவில்லை என்று நீர் கேள்விப்படவில்லையா? ஏன் காஞ்சிக் கோட்டைக்கு வெளியிலே மாமல்லன் வரக்கூடாது என்று திட்டம் செய்துவிட்டு மகேந்திர பல்லவர் போர்க்களம் போனார் என்று நீர் கேள்விப்படவில்லையா?''

''ஓ பொல்லாத பிக்ஷுவே! எப்பேர்ப்பட்ட அவதூறு சொல்கிறீர்? எம்மாதிரி அபசாரம் பேசுகிறீர்? பதினெட்டு வயதுக்குள் தென்னாட்டிலுள்ள பிரசித்த மல்லர்களையெல்லாம் வென்று 'மகாமல்லன்' என்று பட்டம் பெற்ற மகாவீரனைப்பற்றி இவ்விதம் சொல்ல உமது நாக்குக் கூசவில்லையா?'' என்று ஆயனர் சற்று ஆத்திரத்துடனேயே கேட்டார்.

''மகா சிற்பியே! தங்களுக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாதென்பது

எனக்குத் தெரியாது. பெரிய இடத்துச் சமாசாரம்; நமக்கு என்ன கவலை? ஆனாலும், என் வார்த்தையில் நீங்கள் அவநம்பிக்கை கொள்வதால் சொல்கிறேன். அந்த 'மகா மல்லன்' பட்டமெல்லாம் வெறுங் கதை. நரசிம்ம வர்மனோடு போரிட்ட மல்லர்களுக்கெல்லாம் முன்னாலேயே கட்டளை யிடப்பட்டிருந்தது, சீக்கிரத்தில் தோற்றுப் போய் விடவேண்டுமென்று. இப்படியெல்லாம் செய்தாலாவது பிள்ளைக்கு வீரமும் தைரியமும் வராதா என்று சக்கரவர்த்தி பார்த்தார். பாவம், பலிக்கவில்லை! யுத்தம் என்று வந்ததும் நடுங்கிப் போய் விட்டான். சாட்சாத் உத்தர குமாரனுடைய அவதாரம்தானாக்கும் நரசிம்ம வர்மன். ஊர் ஊராகப் பாரத மண்டபம் கட்டிப் பாரதம் படிக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி ஏற்பாடு



செய்திருக்கிறாரே, எதற்காகத் தெரியுமா, முக்கியமாக அவருடைய திருக்குமாரனை உத்தேசித்துத்தான்...''

''அடிகளே! நிறுத்துங்கள்! குமாரி சக்கரவர்த்தியைப் பற்றி இப்படியெல்லாம் கேட்க என் மனம் சகிக்கவில்லை'' என்றார் ஆயனர்.

''இன்னும் மிச்சமுள்ள உண்மையையும் கேட்டால் என்ன செய்வீர்களோ, தெரியவில்லை. ஆனால் உங்கள் குமாரி சிவகாமி இருக்கும்போது சொல்லக் கூடாது...'' என்று கூறி நாகநந்தி சிவகாமி இருந்த இடத்தை நோக்கினார்.

சிவகாமி ஏழெட்டு வயதுச் சிறுமியாயிருந்தபோது ஒரு சமயம் ஒரு தேன் கூட்டில் கையை வைத்து விட்டாள். கையிலும் உடம்பிலும் தேனீக்கள் கொட்டி விட்டன. ஒரு நாளெல்லாம் நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு வேதனையை நாகநந்தி நரசிம்ம வர்மரைப் பற்றிச் சொல்லி வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தபோது சிவகாமி அநுபவித்தாள். பிக்ஷுவின் வார்த்தை ஒவ்வொன்றும் பழுக்கக் காய்ச்சிய ஈயத் துளியைப் போல் அவள் காதில் விழுந்து கொண்டேயிருந்தது.

பிக்ஷு, ''உங்கள் குமாரி இருக்கும்போது சொல்லக் கூடாத விஷயங்கள்'' என்று கூறியதும், இதுதான் சமயம் என்று சிவகாமி சட்டென்று எழுந்திருந்தாள். அவர்கள் பக்கமே பாராமல் நடந்து வீட்டின் இரண்டாங்கட்டுக்குள் பிரவேசித்தாள்.

சிவகாமியின் செம்பஞ்சு ஊட்டிய பாதங்களைக் கதவின் அடியில் இருந்த இடைவெளியிலே புத்த பிக்ஷு பார்த்து விட்டுக் கொஞ்சம் உரத்த குரலில் சொன்னார்:

''ஆயனரே! உமது குமாரி சிறந்த கலைவாணி மட்டுமல்ல; ரொம்பவும் இங்கிதம் தெரிந்தவள். எப்படிச் சட்டென்று எழுந்து போனாள், பாரும்!... நான் என்ன சொல்ல வந்தேனென்றால் சக்கரவர்த்திக்குத் தம் புத்திரன் விஷயத்தில் இன்னொரு பெரிய கவலையாம். பல்லவ குலத்தில் இவ்வளவு இளம் வயதில் இவனைப் போல் ஸ்திரீலோலன் ஆனவனே கிடையாதாம். ஒரு சமயம் மாமல்ல பல்லவன் ஒரு பெண்ணுக்கு எழுதிய காம விகாரம் ததும்பிய ஓலை சக்கரவர்த்தியிடம் அகப்பட்டு விட்டதாம். இதையெல்லாம் உத்தேசித்துத்தான், மாமல்லனைக் காஞ்சியிலேயே இருக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி திட்டம் செய்திருக்கிறாராம்....''

இப்படி நாகநந்தி சொல்லிக் கொண்டிருந்தபோது கதவின் அடியில் தெரிந்த பாதங்கள் மறைந்தன. நாகநந்தியும் பிறகு தமது குரலைத் தாழ்த்திக்கொண்டு பேசலானார்.

*　　*　　*

ஆயிரம் பேய்களினால் துரத்தப்பட்டவளைப் போல் சிவகாமி வீட்டின் பின்கட்டுகளைத் தாண்டிக் கொல்லைப் பக்கம் ஓடினாள். காட்டுக்குள்ளே எங்கே போகிறோம் என்ற உத்தேசமில்லாமல் ஓடினாள். ஓடி ஓடிக் களைத்துக் கடைசியில் ஒரு மரத்தடியில் வேரின் மீது உட்கார்ந்தாள்.

சிவகாமியைப் பின் தொடர்ந்து மானும் கிளியும் பின்னால் வந்து கொண்டிருந்தன. அவற்றை அவள் கவனிக்கவேயில்லை. மரத்தடியில் உட்கார்ந்த சிறிது நேரத்துக்குப் பிறகு

ரதி அருகில் வந்து மெதுவாகத் தன் முகத்தை அவள் கரத்தின் மீது வைத்தது. சிவகாமி அதை ஒரு தள்ளுத் தள்ளி, ''சீ, தரித்திரமே! பீடை! ஒழிந்து போ!'' என்று கத்தினாள்.

சந்தர்ப்பம் தெரியாத அசட்டுச் சுகரிஷி, 'மாமல்லா! மாமல்லா!' என்றது. சிவகாமி கையை ஓங்கி, 'சனியனே! மூதேவி!' என்று அதை அடிக்கப் போனாள். கிளி இறகுகளை அடித்துக் கொண்டு அவளிடம் அகப்படாமல் தப்பிச் சென்றது.

திடீரென்று தாமரைக் குளக்கரையில் மகிழ மரப் பொந்தில் இருந்த ஓலைகளின் நினைவு வந்தது. அந்த ஓலைகளை உடனே எடுத்து நெருப்பிலே போட்டு எரித்துச் சாம்பராக்கிவிட வேண்டுமென்று நினைத்துத் தாமரைக் குளத்தை நோக்கி ஓடினாள். அதி சீக்கிரத்தில் குளக்கரையை அடைந்து, உட்காரும் பலகையின் மீது காலை வைத்து ஏறி, மரப் பொந்திலே கையை விட்டாள்.


ஐயோ! அந்தப் பொந்திலே ஏதாவது நாக சர்ப்பம் இருந்து அவள் கரத்தைத் தீண்டிவிட்டதா என்ன? அவள் முகத்திலே ஏன் அவ்வளவு பயங்கரம்? கையை ஏன் அவ்வளவு அவசரமாய் வெளியில் எடுத்தாள்? இன்னும் கொஞ்சம் மேலே கிளம்பிப் பொந்துக்குள்ளே உற்றுப் பார்க்கிறாளே, என்னத்திற்கு? மறுபடியும் கையை விட்டுத் துழாவுகிறாளே, ஏன்?

அந்தப் பொந்து • வெறுமையாய், சூனியமாய் இருந்ததுதான் காரணம். எவ்வளவு துழாவியும் ஓலைகள் அகப்படாததுதான் காரணம்.

காலையில் அந்தப் பொந்தில் இருந்த ஓலைகள் எங்கே போயிருக்கும்?

* * *

சிவகாமி அந்த மகிழ மரத்தை ஓடி அடைந்த அதே சமயத்தில் தாமரைக் குளத்தின் எதிர்க் கரையில் இருந்த காட்டில் புத்த பிக்ஷு விரைந்து கொண்டிருந்தார். மரப் பொந்தில் அவள் கையை விட்டு வெறுங் கையை வெளியில் எடுத்ததை அவர் பார்த்தார். அப்போது சிவகாமியின் முகத்தில் தோன்றிய வியப்பும் பயமும், பிக்ஷுவுக்கு எல்லையற்ற ஆச்சரியத்தை உண்டாக்கின என்பது அவருடைய முகக் குறியினால் தெரிய வந்தது. (தொடரும்)



படத்தில் காணப்படுவது ஜோத்பூர் அரண்மனை. அதில் இன்று அரச குடும்பத்தின் சம்மதத்துடன் ஸ்ரீ ஒபராய் ஓட்டல் நடத்துகிறார்! பணத்தைத் தண்ணீராகக் கரைக்கக் கூடியவர்களே தங்க முடியும் இங்கே!

ஹோட்டல் மன்னர் எம். எஸ். ஒபராய் நாற்பத்திநாலு ரூபாய் சம்பளத்தில் ஸிம்லாவிலுள்ள ஸிஸில் ஹோட்டலில் ஒரு கிளார்க்காகப் பணிபுரியத் தொடங்கியவர். இருபதாம் நூற்றாண்டு பிறந்த சமயம் இவரும் பிறந்தார், பான் என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில். (இப்போது பாகிஸ்தானில் உள்ளது). ஏழைமையினால் இண்டர்மீடியட்டுக்கு மேல் படிப்பைத் தொடர முடியவில்லை! வேலையும் கிடைக்கவில்லை. கல்யாணமானால் அதிர்ஷ்டம் அடிக்குமோ என்று ஓர் ஆசை. பிரதம குமாஸ்தா உத்தியோகம் பார்க்கும் ஒருவரின் பெண் இஷ்ரான்தேவியை மணம் புரிந்து கொண்டார்! ஒபராயின் அழகைக் கண்டு மயங்கியே அந்த மனிதர் பெண்ணைக் கொடுத்து விட்டார்!

பான் கிராமத்தில் இவர்கள் மணம் முடித்த தருணத்தில் பிளேக் வியாதி பரவத் தொடங்கி ஒபிராயைத் துரத்தியடித்தது. வேலை தேடி மனைவியுடன் சிம்லாவுக்கு வந்தார்! அங்கே ஒரு ஹோட்டலில் ஒபராய் குமாஸ்தா வேலை பார்த்தார். 1930ம் ஆண்டில் ஒபராய் கடன் வாங்கிய தொகையுடன் தம் சேமிப்பையும் மனைவியின் நகைகளை விற்றுக் கிடைத்த பணத்தையும் சேர்த்துத் தாம் வேலை பார்த்த ஹோட்டலையே விலைக்கு வாங்கித் தொழிலைத் தொடங்கினார். இன்று ஒபராய் இந்தியாவிலேயே தலைசிறந்த ஹோட்டல் அதிபர்களில் ஒருவர். இவரது பிரம்மாண்டமான ஹோட்டல்கள் இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, கோபால்பூர், ஜோத்பூர், சண்டிகர், டார்ஜீலிங், டில்லி, ஸ்ரீநகர் ஆகிய நகரங்களில் உள்ளன. அயல்நாடுகளிலும் அஸ்வான், கெய்ரோ ஆகிய நகரங்களில் இடம் பெற்றுள்ளன. எதிர்காலத்தில் சென்னை, ஆக்ரா, கோவாவிலும், மிரீத் தீவிலும் ஹோட்டல்கள் அமையப் போகின்றன.

' சுற்றுலா கண்காட்சி அரங்குத் தகவல்
-பி. எஸ். எம்.

'டியூஸ்...'

இரண்டாவது முறை.

மிஸ். நாயரின் ஸர்வீஸ் எளிதில் ரிடர்ன் செய்யலாம். வெற்றி வாய்ப்பு மிஸ் மாதவிக்கும் இணையான நாகநாதனுக்கும்தான். மிஸ் நாயர்' வீசிய முதல் பந்து சீறிப் பாய்ந்து, வலையை மோதி வெட்கத்தால் மிஸ் நாயரிடமே ஓடி வந்து விட்டது. இரண்டாவது பந்து வீச்சு அவுட். வான் அவுட். மிஸ் நாயருக்கு நம்பிக்கை போய் விட்டது. அடுத்த 'சர்வ்' செய்தது எடுபடவில்லை. கேம் அண்ட் செட் 1–6, 5–7, 7–5, 6–1, 6–4. நவநீதன் ஓடிச் சென்று நாகநாதனைப் பாராட்டினான். மிஸ் நாயர் மிஸ் மாதவியைக் கைகுலுக்கினாள். கிளப் செயலாளரும் தலைவரும் மாதவியை மனமாரப் பாராட்டினார்கள்.

''மிஸ் மாதவி! உங்க ஆட்டத்தில் ரொம்ப இம்ப்ரூவ்மெண்ட்! சிங்கிள்ஸ் சாம்பியன்ஷிப் இனி உங்களுக்குத்தான்!'' என்றார் தலைவர்.

''மிக்ஸட் டபிள்ஸ் மட்டுமென்ன! மிஸ் மாதவியும் நாகநாதனும் பார்ட்னர்ஸ் ஆனால் வெற்றி வேறு யாருக்கு வரும்?'' என்றார் செயலாளர்.

நவநீதனுக்கு எரிச்சலான எரிச்சல். மாதவியிடம் அவன் முகம் கொடுத்துப் பேசவில்லை. பெருகி வரும் அருவியாய் வழிந்த வியர்வையைத் துடைக்கும் சாக்கில் டென்னிஸ் கோர்ட்டிலிருந்து நழுவினான். மாதவியின் போக்கே சரியில்லை. கடந்த ஒரு மாத காலமாக அவன் புதுப் பணக்காரனான நாகநாதனுடனே சேர்ந்து 'மிக்சட் டபிள்ஸ்' ஆடுவதை விரும்புகிறாள். இத்தனைக்கும் நாகநாதன் பெரிய ஆட்டக்காரன் இல்லை. நவநீதனே நம்பர் 'ஒன் சீடட்'. மாதவிக்கு டென்னிஸ் கற்றுத்தந்தவனே நவநீதன்தான்!

இன்று டென்னிஸ் ஆட வருமாறு டெலிபோனில் குழைந்து குழைந்து பேசி நவநீதனை வரவழைத்தவளே மாதவிதான். நவநீதன் நான்கு நாட்களாகக் கிளப்புக்கு வர நேரமில்லை. 'இன்வென்ட்டரி கண்ட்ரோல் கோர்ஸ்' அடுத்த வாரம் ஆரம்பிக்கிறது. அதற்காக விழுந்து விழுந்து படித்து வருகையில் விளையாட்டுக்கு நேரம் எங்கே? மாதவி அவனை அழைத்து 'இன்று மாலை உங்களிடம் மிக முக்கியமான — அவசரமான செய்தி சொல்ல வேண்டும்' என்று சொன்னாள். காதலி மாதவியைக் கண்டு பேசி எத்தனை யுகமாயிற்று என்று அவன் இதயம் விம்மிற்று. 'போன வாரம்தானே பார்த்துப் பேசினோம்' என அவனுடைய நினைவு கூறியது.

அவளுடைய சொற்களைக் கேட்டுக் கிளப்புக்கு வந்தால், அவள் நவநீதனுடன் சேராமல் நாகநாதனுடன் இணைந்து டென்னிஸ் ஆடினாள். மாதவி வழி வேறு. இவன் வேறு வழியில்தான் செல்ல வேண்டும். இனியும் பொறுமை இல்லை.

கிளப்பின் ஒரு மூலையில் 'ரம்மி'யில் மூழ்கிய ஏழெட்டுப் பேர். கறுப்புப் பணம் கரைவதில் அவர்களுக்கு அக்கறை இல்லை. இன்னொரு புறம் கேரம். பக்கத்தில் செஸ். ஹாலில் டேபிள் டென்னிஸ். இளம் பெண்கள் ஏழெட்டுப் பேர். ஆடவர்கள் பத்துப் பேர் அவர்களைச் சுற்றி அடித்த அரட்டை! நவநீதன் கலந்தும் கலவாமலும் ஒதுங்கியே யிருந்தான். இன்னும் ஐந்து நிமிடங்களில் புறப்பட வேண்டும்.

''லேடிஸ் அண்ட் ஜென்டில்மென்!'' என்றபடி செயலாளர் அங்கே வந்தார். ''நாளை ஞாயிற்றுக்கிழமை ஒரு புதுமையான டூர்னமென்ட்! மின்னல் வேக ஷட்டில்காக் டூர்னமென்ட்! காலை ஏழு மணி முதல் பத்து மணிவரை. மதியம் மூன்று முதல் முடியும் வரை. நான்கு கோர்ட்டுகள் உள்ளன. மென் சிங்கிள்ஸ், மென் டபிள்ஸ், லேடிஸ் சிங்கிள்ஸ், லேடிஸ் டபிள்ஸ் — இத்தனை போட்டிகள். இப்போதே டிரா போடப் போகிறோம். நல்ல வேளையாக ஆடத் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் இங்கே வந்திருக்கிறீர்கள்'' என்றார்.

கிளப் உறுப்பினர்களுக்கிடையே எழுந்த மகிழ்ச்சி ஆரவாரம், ரம்மியில் மூழ்கியவர்களையும் கவர்ந்தது.

''நோ சீடிங்க்ஸ்'' என்றான் நாகநாதன்.

என்றைக்கும்

''ஆமாம்'' என்றான் சிவசங்கரன்.

''ஆனால் மிக்சட் டபிள்ஸ் பற்றி மட்டும் விதிவிலக்கு. தங்கள் பார்ட்னர்கள் யார் என்று பெண்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தலைவர் இசைந்திருக்கிறார்'' என்றார் செயலாளர்.

''அதெப்படி?'' என்றாள் மிஸ் நாயர்.

''பெண்மணிகளிலே யார் யார் எந்த வரிசையிலே பார்ட்னர் கேட்கணும்னு டிரா போடலாம்.''

''ஹாய்யா!'' என்றாள் மிஸஸ் திருநாராயணன்.

ஆண்கள் ஒற்றையர் ஆட்டம் முதல் பெண்கள் இரட்டையர் ஆட்டம் வரை டிரா முடிந்தது. இனி மிகுந்திருப்பது மிக்சட் டபிள்ஸ். பெண்களின் பெயர்களைச் சிறுசிறு காகிதத் துண்டுகளில் எழுதிக் குலுக்கி எடுத்தார் செயலாளர்.

''மிஸ் மாதவி'' என்றார்.

''யு ஆர். லக்கி'' என்றாள் மிஸ் மாலதி.

''யார் உன் பார்ட்னர்?'' என்றாள் அல்லி.

நவநீதத்தின் நெஞ்சம் படபடத்தது. தன் பெயரைத்தான் மாதவி சொல்வாள் என்பதில் அவனுக்கு ஐயமில்லை.

''மிஸ்டர்!...'' என்று தயங்கிய மாதவி ''இளங்கோ!'' என்று முடித்தாள். இளங்கோ தான் அந்தக் கிளப்பில் 'தி மோஸ்ட் எலிஜிபிள் பேச்சலர்' எனப்பட்ட ஆணழகன்.

நவநீதனின் முதுகுத்தண்டு சில்லிட்டது.

'மாதவி! நீ மாறிவிட்டாய்.! எனக்கு நீ துரோகம் செய்து வருகிறாயா? நீ என்னிடமிருந்து வெகு தூரம் விலகிச் சென்று விட்டாய்... இனி உன் வழி வேறு என் வழி வேறு...' என்று அவன் உள்ளம் குமுறியது. மிஸஸ் பொன்னுதுரை நவநீதனைத் தன் இணை

யாக்கினான். மாதவி அவனை இணையாகக் கொண்டு இப்போது எந்த ஆட்டத்திலும் பங்கு பெறுவதில்லை. வாய்ப்புக்களை அலட்சியம் செய்கிறாள் என்று எண்ணி எரிச்சலுடன் நொந்த மனத்துடன் நவநீதன் கிளப்பிலிருந்து புறப்பட்டான். கிளப் வாசலைத் தாண்டு முன்பே மாதவி அவனைப் பிடித்து விட்டாள். கடந்த இரண்டு மணி நேரமாக அவளிடம் பழகாது நழுவி நழுவிச் சென்ற நவநீதன் இப்போது தப்ப முடியவில்லை.

''ஒரு பத்து நிமிஷம் நவநீத்!'' என்றாள் மாதவி கெஞ்சலாக.

''இப்பவே மணி ஒன்பது. எனக்கு நேரமாகிறது'' என்று அலட்சியமாகச் சொன்னான் நவநீதன்.

''உங்களிடம் மிக முக்கியமான செய்தி..''

''என்னிடமா?''

''வேறு யாரிடம்?''

''சொல். கேட்கிறேன்.''

''எனக்குத் திருமணம் செய்ய அப்பாவுக்கு எண்ணம் வந்துவிட்டது. நான் அம்மாவிடம் எல்லாம் சொல்லிவிட்டேன். நல்ல நாள் பார்த்து உங்கள் வீட்டில் பெரியவர்கள் வந்து பெண் கேட்டால் அடுத்த மாதமே நம் திருமணம் நடந்துவிடும்...''என்றாள் மாதவி.

''நானு! நான் இன்னுமுமா உன் இதயத்தில் இருக்கிறேன்?

பார்ட்னர்!

தேவேந்திரி

எனக்குத்தான் விடை கொடுத்து அனுப்பிவிட்டாயே!'' என்றான்.

''உங்களுக்கு விடை கொடுத்து விட்டு...''


''அங்கே நாகநாதனைக் காண்கிறேன்; இளங்கோவைக் காண்கிறேன்'' என்றான் நவநீதன் குத்தலாக.

''வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங்? ஓகோ பொறாமையா? மிஸ்டர் நவநீத்! டென்னிஸ் நாகநாதனுடன் ஆடினால் தான் என்னுடைய 'ஈகோ' திருப்தியடைகிறது. நீங்க பெரிய ஆட்டக்காரர். உங்களோட நான் ஆடும்போது நீங்க என்னைக் கவர் பண்ணி ஆடறீங்க! நான் எடுக்க வேண்டிய பந்துகளையும் நீங்க எடுக்கறீங்க! என் ஆட்டம் முன்னேறுவதே இல்லே. நாகநாதனோடு ஆடும்போது என்னுடைய ஆட்டத்தை நான் ஆட அவர் இடம் தருகிறார். ஷட்டில் காக்கிலே இளங்கோவும் அப்படித்தான். உங்களோட எந்த ஆட்டம் ஆடினாலும் எனக்குரிய ஆட்டத்தை நான் ஆட முடிகிறதில்லே! இது புரியலேயா? டென்னிஸ்லே இன்னிக்கு நாகநாதன் பார்ட்னர். நாளைக்கு யாரோ? நாளை மறுநாள் யாரோ. ஷட்டில்காக்கில் இன்னிக்கு இளங்கோ? நாளைக்கு யார்? நாளை மறுநாள் யார்? ஆனால் வாழ்க்கையிலே உங்களைத்தானே நிரந்தரப் பார்ட்னராகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்!'' என்று விசும்பினாள் மாதவி.

''ஐ ஆம் சாரி பார்ட்னர்.... லைஃப் பார்ட்னர்'' என்றான் நவநீதன்.



ஏசிசி ஹாட்-ஃபேஸ் வெப்பத்தடை ஃபயர்பிரிக்குகளை அறிமுகப்படுத்துகிறது.



ஹாட்-ஃபேஸ் வெப்பத்தடை ஃபயர்பிரிக்குகள் பொருத்தப்பட்ட அனீலிங் உலைகள்.

உருக்கப்பட்ட உலோகத் தாதுக்கள், உலோகங்கள், கண்ணாடி, எனமல் முதலியவற்றுடன் தொடர்பற்ற திறந்த உலைபகுதிகளுக்கு உபயோகிக்கலாம். வெப்ப வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் உலைகள், வெப்பம் மற்றும் குளிர்சாதன உலைகள், மலியபின் அனீலிங் அடுப்புகள், ஸ்ட்ரெஸ் ரிலீவிங் அடுப்புகள் மற்றும் மட்பாண்ட சூளைகள் இவைகளுக்கு ஏற்றவை.

ஏசிசியின் வெப்பத்தடை ஃபயர்பிரிக்குகள்

- எரிப்பொருள் செலவு மிச்சம்
- உலையினுள் சீரான வெப்பம்
- விரைவில் சூடு பெறுவதால் அதிக உற்பத்தி
- உலையினுள் வைக்கப்படும் பொருள்களுக்கு சீரான சூட்டு வினியோகம்.

ஏசிசி
தரமான தயாரிப்புகளுக்கு நம்பகமான உத்தரவாதம்

தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனிஸ் லிமிடெட்

உடலில் ஊனம் உள்ளத்தில் ஊக்கம்

குறைகளுடன் பிறந்தவருக்குக் குடியரசின் பரிசு!

சென்ற ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஒரு நாள்.

பளபளப்பான பெரிய எனமல் டின்னுடன் தொழிற்சாலைக்குள் நுழைந்தார் அந்த வாலிபர்.

தொழிலகத்தின் மிகப் பெரிய அதிகாரி முதல், வாயிற்காப்போர் வரையில் அனைவரிடமும் டின்னைக் காட்டிச் சாக்லேட் எடுத்துக் கொள்ளச் சொன்னார். பாரதக் குடியரசுத் தலைவர் தம்மை வாழ்த்திப் பாராட்டிதழும் வழங்கி யிருப்பது பற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார், அனைவரிடமும்.

அவர்தான் திரு பி. எஸ். அனந்தநாராயணன்.

உடலில் ஊனமுற்றோரில் அவ்வாண்டின் மிகவும் சிறந்த ஊழியராகக் குடியரசுத் தலைவரின் தேசிய விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அனந்த நாராயணன். தென்னாட்டில் ஒருவர் இதைப் பெறுவது இதுவே முதல் தடவை.

புது தில்லிக்குச் சென்று, ஜனாதிபதி திரு வி. வி. கிரி அவர்களின் கையால் பாராட்டிதழும் பரிசுப் பணம் ரூபாய் ஐந்நூறும் பெற்று, அவர் கை குலுக்கிவிட்டுத் திரும்பியவர் — இந்த அனந்த நாராயணன்.

பிறவியிலேயே செவிடும் ஊமையுமாகப் பிறந்தவர்.

கோகோ கோலா, பாண்டா பானங்களைத் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை சென்னை, கிண்டியில் அமைந்துள்ளது. 'சதர்ன் பாட்லர்ஸ் பிரைவேட் லிமிடெட்' என்ற பெயர் கொண்டது. இந்தத் தொழிற்சாலையில் பாட்டில்களில் பானங்களை நிரப்பும் பகுதியில் அனந்த நாராயணன் பணி புரிகிறார்.

அவரைச் சந்திக்கத் தொழிற் கூடத்துக்கே சென்றேன்.

தொழிலாளர்களுக்காகத் தரப்பட்டுள்ள வெள்ளை யூனிபாரம் அணிந்து அனந்த நாராயணன் வந்தார்.

திரு எஸ். கிருஷ்ணசாமி (அந்த நிறுவனத்தின் டைம் ஆபீஸ் அதிகாரி) அன்புடன் அனந்த நாராயணனை உடன் வைத்துக் கொண்டு என் கேள்விகளை எழுதிக் கொடுத்து, எழுத்து மூலமே பதில்களையும் பெற்று அளித்தார்.

ஊனமுள்ள ஊழியர்களிடம் எவ்விதம் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அந்த அதிகாரி உதாரணமாக விளங்கினார்.

கேள்வி: நீங்கள் எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்? எதுவரையிலும் படித்திருக்கிறீர்கள்?

பதில்: நான் கேரளாவைச் சேர்ந்தவன். பாலக்காட்டுக்கு அருகேயுள்ள பராகுளம் கிராமம். அப்பா ஓர் ஓட்டலில் உணவு வகை தயாரிக்கும் வேலை பார்த்தவர். நான் கேரள அரசு நடத்தும் ஊமையர்-செவிடு பள்ளியில் படித்தேன். இப்பள்ளி ஒட்டப்பாளத்தில் இருக்கிறது.

கேள்வி: பள்ளிக்கூடத்தை விட்டதும் வேறு வேலைக்குப் போனீர்களா?

பதில்: திருச்சூரில் உள்ள அரசாங்கத் தொழிற் பயிற்சிக் கூடத்தில் தையல், பிரம்பு வேலை, தச்சு வேலை, நெசவு ஆகியவற்றைக் கற்றுக் கொண்டிருக்கிறேன். மாதம் முப்பது ரூபாய் உபகாரச் சம்பளம், மூன்றாண்டுகளுக்குக் கிடைத்தது. நண்பர்களின் உதவியால் அந்தக் குறைந்த மாத வருவாயில் தொழிற் கல்விப் பயிற்சியில் தேர்வு பெற்றேன்.

திரு அனந்த நாராயணன் தொழிற் கல்வி பயின்றபிறகு எங்குமே வேலை கிடைக்காமல் திண்டாடினார். அந்த நிலையிலும் தளராத முயற்சியுடன் ஒரு தையற் கூடத்தில் தினசரி சம்பளத்துக்கு உடைகளைத் தைத்து அந்த வருமானத்தில் சில காலம் கழித்தார்.


தம் சகோதரர் சென்னையில் வேலைக்குச் சேர்ந்தவுடன், அனந்த நாராயணனும் சென்னை வந்து சேர்ந்தார். நந்தனம் வேலை தேடித் தரும் நிலையத்தில், உடல் ஊனமுற்றோருக்கு உதவி அளிக்கும் பகுதியில் தம் பெயரைப் பதிவுசெய்து கொண்டார். சதர்ன் பாட்லர்ஸ் தொழிற்சாலைக்கு வேலைக்கு வரும்படி சிறிது காலத்தில் அழைப்பு வந்தது. இவருடன் ஐந்து பேர்கள் (அவர்களும் உடல் ஊனமுற்றோரே) அந்தத் தொழிற் கூடத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

தேர்வு தினத்தன்று மற்றவர்களை விட அதிக நுட்பமுடன் திறமையாக, குறித்த நேரத்தில் கொடுத்த பணிகளைச் செய்து காட்டினார். உடனேயே வேலையில் அமர்த்தப்பட்டார். ஆரம்பத்தில் மாதம் எண்பது ரூபாய் சம்பளம்.

கேள்வி: இன்று உங்கள் மாத வருவாய் என்ன?

பதில்: ரூ. 247.

• இந்த மாத வருமானத்தில் தம் சகோதரர் வீட்டில்



பீ. எஸ். அனந்தநாராயணன் கோகோ கோலா தொழிற் கூடத்தில் பணியாற்றுகிறார்.

தங்கித் தம் செலவினங்களுக்குப் போக, மீதம், மாதம் நூறு ரூபாய் தவறாமல் மணியார்டர் மூலம் பெற்றோருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்! மேலும் தமக்குக் கிடைக்கும் போனஸ் பணத்தில் அவ்வப்போது பவுன் நகைகளை வாங்கிக் குடும்பத்துக்கு அனுப்புகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஜனாதிபதியின் பரிசு பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவை:

அனந்த நாராயணன் ஒரு நாள் கூட நேரம் தவறாமல் அலுவலகம் வந்தது; வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைத் துப்புரவாக நிறைவேற்றியது; பணியில் கடினமாக உழைத்தது; குற்றம் சொல்ல இடம் இல்லாமல் நடந்து கொண்டது; மேலதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தது; எல்லாவற்றுக்கும் மேலாக ஒருமித்த சிந்தனையுடன் செயலாற்றியது — இவைகளே.

கேள்வி: கடின உழைப்புக்குப் பிறகு மனம் விரும்பி எந்த விளையாட்டில் ஈடுபடுவீர்கள்?

பதில்: காரம், கால்பந்து, பாட்மின்டன் முதலிய விளையாட்டுக்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவேன். எப்போதாவது திரைப் படம் செல்வேன். அடிக்கடி சென்னை நகரில் உள்ள முக்கிய கோயில்களுக்குச் சென்று வழிபடுவேன்.

முப்பது வயது நிரம்பிய அனந்தநாராயணன் பிரம்மச்சாரியாகத்தான் இருக்கிறார். திருமணம் சம்பந்தமாக வந்த பெண்கள் சிலர் படிப்பில்லாதவர்களாக இருந்ததால் மறுத்து விட்டாராம்!

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**

நீல நண்டு

நமது தமிழ்நாட்டுக் கடற்கரைப் பகுதிகளிலெல்லாம் சிறிதளவே நீருடன் கூடிய மணற்பாங்கான இடங்களில் இவை வாழ்க்கையை நடத்துகின்றன. காலையில் கடற்கரை ஓரங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு கடல் நீர் வற்றி விடுவது இயற்கை. இச் சமயத்தில் இந்நண்டுகள் அங்குமிங்கும் சுமார் ஓர் அடி ஆழத்திற்குள்ளாகவே சுறுசுறுப்பாக நீந்தித் திரிவதைக் காணலாம். இதன் பத்து கால்களும் சாம்பல் கலந்த நீல நிறத்துடன் ஆங்காங்கே வெள்ளை நிறத் திட்டுகளைக் கொண்டு அழகுடன்காட்சி யளிக்கும். இதன் கடைசிக் கால்கள் இரண்டும் நீந்துவதற்கேற்பத் துடுப்பு போன்ற அமைப்புடன் கூடியவை. இக்கால்களின் உதவியால் நெடுந்தூரத்தை வெகு வேகமாக இலகுவில் நீந்திக்கடந்து விடும் இயல்புடையன. இதன் முன்னங்கால்கள் இரண்டும் மற்றக் கால்களை விடப்




பெரியதாகக் காட்சி அளித்து இடுக்கி போன்றஅமைப்பையும் கொண்டுள்ளன. இத்தகைய அமைப்புடைய கால்களால் நீல நண்டு தன் உணவை வேட்டையாடுவதோடு மட்டுமல்லாமல் தனது பாதுகாப்பு உறுப்பாகவும் இவற்றை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறது. இந்த இடுக்கி போன்ற கால்களின் இடையே அகப்பட்ட எவ்வித கடல் பிராணியும் எளிதில் தப்பிக்க இயலாது. இந் நண்டை நாம் பிடிக்கச் சென்றால் ஆபத்து ஏற்படப் போகிறது என்று அறிந்தவுடன் அதன் இரண்டு முன்னங்கால்களையும் நீளவாக்கில் ஈட்டி போன்று நேராக வைத்துக் கொண்டு நம்மை எதிர்த்துத் தாக்க வருவது போல் பாசாங்கு செய்த வண்ணமே நீந்திச் செல்லும். நம்மை விட்டுச் சிறிது தூரம் சென்றவுடன் இமைக்கும் நேரத்தில் பக்கத்திலுள்ள சிறு பாறைகளினூடேயோ, தாவரங்களினிடையேயோ அல்லது மணலுக்குள்ளேயோ அதன் உடலை நுழைத்துக் கொண்டு நம் பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்ளும். அப்போதும் விடாமல் மறைந்திருக்கும் அந்நண்டைப் பிடிக்க நாம் யத்தனித்தால் இரண்டு முன்னங்கால்களில் உள்ள இடுக்கி போன்ற அமைப்பால் நம் விரல்களின் சதைப் பகுதியை நன்கு அழுத்திப் பிடித்துக் கொள்ளும். மரண வேதனை போன்று மிகுந்த வலியை உண்டுபண்ணும் இந் நண்டுப்பிடியை உடும்புப் பிடிக்கு ஒப்பிடலாம். சில சமயம் நம் விரல்களில் ஆழமான காயத்தை உண்டுபண்ணித் தப்பித்துச் சென்று விடும். வேறு சில தருணங்களில் நாம் நம் கைவிரல்களை உதறினாலும் கூடத் தன் பிடியைத் தளர விடாது விரலிலிருந்து தொங்கும். நண்டின் காலை உடைத்தெறிந்தாலொழிய இந்தப் பிடியிலிருந்து தப்ப இயலாது.

சுமார் 180 மி. மீட்டர் நீளம்வரை வளரக்கூடிய இதன் உடலானது பாதுகாப்பாக ஓர் ஓட்டினால் போர்த்தப்பட்டுள்ளது. பொதுவாக நண்டு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை தன் உடலைப் போர்த்தியிருக்கும் மேல் ஓட்டை உரிக்கும். உரித்த மாத்திரத்தில் இதன் உடலின் மேல் பகுதியும் கால்களும் மிக மென்மையாக இருக்கும். மீண்டும் இதன் ஓட்டுப் பகுதி ஓரளவு கடினமாகும் வரையுள்ள இடைப்பட்ட நாட்களில் இன விருத்திச் செயலுக்குப் பெண் நண்டை ஆண் நண்டு நாடும்.

பெண்ணினால் இடப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை நண்டின் உருவ அளவுக்கேற்ப அமையும். அதிகபட்சம் சுமார் இரண்டு மில்லியன் வரைகூட முட்டைகள் இடும். இவை பெண்ணின் உடலின் அடிப்பகுதியில் திருப்பு போன்ற பகுதியில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன! இம் முட்டைகளை சுமார் பத்து நாட்கள் வரை அடைகாக்கும். இந்த இடைப்பட்ட காலத்தில் பெண் நண்டு தன் பகைவிலங்குகளிடமிருந்து இம் முட்டைகளைக் காக்கும் பொருட்டு உணவே உட்கொள்ளாமல் மண்ணினுள் அல்லது பாதுகாப்பான இடத்தில் மறைந்து வாழும். இளம் குஞ்சுகள் நண்டின் உருவத்தை ஒத்துக் காணப்படாமல் பல வளர் மாற்றங்கள் அடைந்து சுமார் மூன்று வாரங்களுக்குப் பின்னர் தான் நண்டைப் போன்று உருவமைப்பு பெறுகின்றன. இந்த நண்டுகள் ருசிமிக்க மாமிசத்துக்காகக் கடற்கரைப் பகுதிகளில் மிகுந்த அளவில் கொல்லப்படுகின்றன.

-அந்தோணி பேசில்


SUPER
Surf
washes whitest of all
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப், வேறெந்த
சலவைப் பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும்
அகற்றிவிடும். காண்போர் பொறாமைப்படும்
கற்பனைகடந்த வெண்மை. கேட்பானேன்,
இந்தியாவின் தலைசிறந்த ரகம்:
ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்.



உலகப் புகழ்பெற்ற பழனி வைத்திய திலகம்

'வைத்தியராஜ்

டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (IND) V. V. C., A. M. I. H.

அவர்களால் தயாரிக்கப்படுகிறது

வாலிப—வயோதிக, அன்பர்களே!

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து, உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில், நிம்மதியில்லாமல் வயோதிகரைப்போல் களைப்பு மேலிட்டு, வேலைகளைச் சரிவர செய்ய இயலாமை—இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலஹீனமடைந்து ரத்தக்குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலஹீனம், உடல் வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாய் தந்தையரிடமும், மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மன வேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்படவேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் அனுபவம் பெற்ற நமது சாஸ்த்ரீய முறையான மருந்து சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று, நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி.பி.பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி. பி. பி. தபால் செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பயன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாத சிகிச்சை மருந்துகள்

ஸ்பெஷல் லேகியம், பஸ்பம் 6 பாட்டில் அடங்கிய செட்	ரூ. 90.00
ஸ்பெஷல் லேகியம், பஸ்பம் 2 பாட்டில் அடங்கிய செட்	ரூ. 42.00
தங்கபஸ்பம், சிட்டுக்குருவி லேகியம் - 60 வேளை	ரூ. 120.00
தங்கபஸ்பம், சிட்டுக்குருவி லேகியம் - 30 வேளை	ரூ. 60.00

கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்டு T. M. No. 204841

தந்தி : சித்தர், போன்: 316, 316-A, வீடு: 420

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) (KI) பழனி-624601

(தியேட்டர் ஸ்ரீ ரெங்கராஜாவிற்கு சமீபம்) இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்

11. பிள்ளையாரிடம் பிரார்த்தனை

ஓரிரு நாட்களுக்குப் பிறகு மாலை நேரத்தில் அனுபமாவும் தனஞ்செயனும் நியூயார்க்கில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விநாயகர் கோயில் அருகே நின்றார்கள். தமிழ் நாட்டிலிருந்து வந்த ஸ்தபதிகளும் அமெரிக்கப் பொறி இயலாளர்களுமாகச் சேர்ந்து ஒத்துழைத்துப் பிரணவ ஸ்வரூபிக்கு எழுப்பி வந்த அந்தக் கோயில் இன்னும் முற்றுப் பெறாத நிலையிலேயே மெய் சிலிர்ப்பை உண்டாக்குவதாய்த்தான் இருந்தது.

ஆயின், அதே சமயம் ஸூட்டும் டையுமாகத் தானும், ஸ்கர்ட், புல்ஓவர், நைலான் ஸ்டாக்கிங்ஸ், ஹை ஹீல் ஷூ சகிதம் அனுபமாவும் ஒரு பிள்ளையார் கோயில் அருகே பய பக்தியுடன் நிற்பது சற்று விநோதமான உணர்வையும் தனஞ்செயனிடம் ஏற்படுத்தியது. சிரித்தான்.

கேள்விக் குறியுடன் அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''மடிசார் உடுத்தி, கையில் அர்ச்சனைத் தட்டுடன் நீ இந்தக் கோயிலுக்குள் நுழையப் போகும் நாளை நினைத்துப் பார்த்தேன்!''

''அமெரிக்காவில் அதுவும் சாத்தியம்தான். கையில் ஜால்ரா ஏந்தி 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா' பஜனை செய்யும் அமெரிக்கர்கள் அடுத்து என்னதான் செய்ய மாட்டார்கள்?''

''மாமல்லபுரம் எங்கே? நியூயார்க் எங்கே? பண்டைக் காலத்தில் ஜாவா, ஸுமத்ரா போன்ற தீவுகளுக்குத் தமிழ் நாகரிகம் படையெடுத்ததாய்ப் படித்திருக்கிறேன். இன்று அமெரிக்காவையே ஆன்மிகத் துறையில் அடிமைப்படுத்தப் பார்க்கிறானே இந்தியன்!''

''உலகம் மிகவும் சிறுத்துவிட்டதைத்தான் இது காட்டுகிறது'' என்

விண்ணும்



மண்ணும்

கி.ராஜேந்திரன்

றாள் அனுபமா. ''சந்திரனை வெற்றி கண்ட பிறகு பிற கிரகங்களை நோக்கித் தன் பயணத்தைத் தொடங்க மனிதன் நினைத்திருக்கும் இந்தக் காலத்தில் தமிழகத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கலாசார, ஆன்மிகப் பாலம் அமைப்பது ஒன்றும் அதிசயமான காரியம் இல்லை. விண்ணை வெற்றி கொண்டு அபார சாதனைகளைப் புரியும் மனிதன் இன்னமும் இங்கே மண்ணாசை பிடித்து அலைவதுதான் ஆச்சரியம்!''

''நீ ஆச்சரியப்படும்விதமான அல்ப புத்தியுடன் நடந்து கொள்வோரிடமிருந்து நம் நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். அதற்கு உன் உதவி வேண்டும்.''

''இந்தியாவுக்கு உங்களுடன் நான் வரவேண்டும் என்கிறீர்களா? உங்களை எப்படி நம்புவது? நேரடியாகவே கேட்கிறேன். நீங்கள் டி. எம். ஐ. நிறுவனத்தைச் சேர்ந்தவர் என்பதற்கும், இந்தியஅரசின் உத்தரவுக்கு இணங்கி வந்தவர் என்பதற்கும் என்ன அத்தாட்சி?''

''நீ என்ன எதிர்பார்க்கிறாய்? இந்திரா காந்தியிடமிருந்து நான் கடிதம் கொண்டு வரவேண்டுமென்றா? அது கைப்பற்றப்பட்டால் ஏற்படக் கூடிய விளைவுகளை யோசித்துப் பார்த்தாயா? அனுபமா! நான் உன்னைத் திருடிக் கொண்டு போக வந்த கள்வன். சாட்சியம் வைத்துக் கொண்டா காரியத்தில் இறங்குவேன்?''

''இந்திராவின் பெயரை எதற்கு இழுக்கிறீர்கள்? அவருக்கு இதில் சம்பந்தம் உண்டா?''

''சுற்றி வளைத்துப் பார்த்தால் தொடர்பு உண்டுதான். பாகிஸ்தானிலும் சீனாவிலும் சமீப காலமாக ஏற்பட்டு வரும் ஆயுதக் குவிப்பு கவலைக்கிடமானது. நாம் போரை விரும்பவில்லை. ஆனால் யுத்தம் என்று வந்து விடுமானால் நாம் அதற்குத் தயாராய் இருக்க வேண்டும். அதை விடச் சிலாக்கியம் யுத்தம் வராமலே தடுப்பது. இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று சமாதான முயற்சிகளை இடைவிடாமல் தொடர்வது...''

''இரண்டாவது எதிரியை விட நாம் சக்தி வாய்ந்தவர் என்பதை உணர்த்துவது!''


''கரெக்ட்! இந்திய மந்திரி சபை இதை விவாதித்தது. அணுகுண்டு தயாரிப்பது இந்தியாவுக்குச் சாத்தியமானதே. அதனைப் பரிசோதிப்பது அந்நியர் படையெடுப்பைத் தவிர்க்கக் கூடிய திறன் வாய்ந்த சாதனமாகவே விளங்கும். ஆனால்...''

''இந்தியா, அணுசக்தியை ஆக்கபூர்வமாக அன்றி வேறு விதத்தில் பயன்படுத்துவதில்லை என்று உலகுக்கு வாக்களித்திருக்கிறது. அணு ஆயுதச்சோதனைகளைக் கைவிடுமாறு வல்லரசுகளுக்கு அறிவுரை வழங்கி வருகிறது. ராஜாஜி தலைமையில் ஒரு தூதுகோஷ்டியைக் கூட இதன் பொருட்டு அனுப்பியிருக்கிறது....''

''எனவே அணு ஆயுத சோதனை யோசனையை மந்திரி சபை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்து விட்டது. அதை அடுத்துச் செயற்கைச் சந்திரனை இந்தியா விண்ணுக்கு அனுப்பும் முயற்சி துரிதப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தினைப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். யுத்த காலத்தில் செயற்கைச் சந்திரனை ராணுவ ரீதியாகவும் பயன்படுத்தலாம், அல்லது எதிரிகளின் ஆயுதக் குவிப்பு, துருப்பு நடமாட்டங்கள் போன்றவை பற்றித் துப்பு அறியவும் உபயோகிக்கலாம். ஆனால் இத்தகைய ஆற்றல் மிக்க செயற்கைச் சந்திரன்களை நாம் தயாரித்து விண்வெளிக்கு அனுப்ப நீண்ட காலமாகும். இப்போதைக்கு முதல்படியாக விஞ்ஞான உபகரணங்கள் அடங்கிய ஒரு செயற்கைச் சந்திரனை அனுப்ப முயற்சிகள் நடக்கின்றன.''

''இந்த முதற்படியில் வெற்றி கண்டா அதுவே ராணுவ ரீதியான முக்கியத்துவம் பெற்று விடுமே!'' என்றாள் அனுபமா.

''ரொம்ப சரி; அந்த அளவுக்கு இந்தியாவில் ராக்கெட் விஞ்ஞானம் வளர்ச்சியுற்று விட்டதென்றால், தானியங்குமுறையில் நாடு விட்டு நாடு பாய்ந்து குறித்த இலக்குகளைத் தாக்கும் பெரிய ஏவுகணைகளைத் தயாரிக்கும் ஆற்றலை இந்தியா பெற்று விட்டதாக அர்த்தமாகும். இது பாகிஸ்தானை அசட்டுத் துணிச்சலுடன் போரில் இறங்காமல் கட்டுப்படுத்தும் என நம்பலாம். பாதுகாப்பு அமைச்சரின் இந்தக்




கருத்தை ஏற்று இந்திரா மௌனமாகத் தலையசைத்தார். சம்மதம் தெரிவித்த இந்தச் சமிக்ஞை சங்கிலித் தொடராகப் பல காரியங்கள் நடக்கக் காரணமாயிற்று. இதோ நான் இங்கே உன் முன்னால் நிற்கிறேன்.''

''இந்தியாவின் ராக்கெட்விஞ்ஞானத் துறை இன்று எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது?''

''கேப் கென்னடியில் நிர்மாணிக்கப்படும் ஸாட்டர்னு ன் தூப்பாவில் தயாராகும் ராக்கெட்டை ஒப்பிட்டால் தீபாவளிதான் ஞாபகம் வரும்.''

''அப்படிக் குறைவாகப் பேசாதீர்கள். அமெரிக்காவிலும் ராக்கெட்விஞ்ஞானம் அந்த நிலையிலிருந்துதான் ஆரம்பமாகியது. பொருளாதாரச் செழிப்பும், அறிஞர் கூட்டம் அளவற்று இருந்ததும் ஆராய்ச்சிக்குரிய வசதிகளைக் குறையின்றி அரசு செய்து கொடுத்ததும் துரித





உதவியா? உஷார்!

''நேற்று பஸ்ஸில் என் குழந்தையோடு ஏறினேன். உட்கார இடமில்லை. ஒருவர் குழந்தையை வாங்கிக் கொண்டார். இறங்கும்போது நன்றி கூறிவிட்டுக் குழந்தையை வாங்கிக் கொண்டேன். இறங்கியவுடன் பார்த்தால் குழந்தையின் கழுத்தில் இருந்த செயினைக் காணவில்லை!

ஸ்டேட்ஸ்மன் கடிதம் - பாபு

வளர்ச்சிக்கு உதவியுள்ளன. காலதாமதமானாலும் இந்தியாவும் ஒரு நாளைக்கு இந்தச் சாதனைகளை நிச்சயம் புரியத்தான் போகிறது.''

''அதுபற்றி எனக்கும் சந்தேகமில்லை, அனு. நமது விஞ்ஞானிகளை நான் குறைத்து மதிப்பிடவுமில்லை. ஆனால் அதிகமாகக் காலதாமதமாவதற்கில்லை. இப்போதுள்ள திட்டப்படி இன்னும் மூன்று வருஷங்களில் அதாவது 1978ல் முதல் செயற்கைச் சந்திரன் அனுப்பப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள்.''

'' 'இந்தியாவின் செயற்கைச் சந்திரனை விண்ணுக்கு அனுப்ப ருஷ்யா உதவும்' என்று பிரஷ்நேவ் இந்திய விஜயத்தின் போது கூறியதாக நினைவிருக்கிறதே?''

''ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கிறாயே அனு. பிரஷ்நேவ் விஜயத்துக்கு முன் ருஷ்யா சென்ற நமது விஞ்ஞானிகள் அவர்களுடைய நவீன ராக்கெட்டுகளை அறுபது கஜ தூரத்திலிருந்து பார்த்தார்கள் என்றால் இனி ஒரு வேளை ஐம்பது கஜதூரத்திலிருந்து பார்க்க அனுமதிக்கப்படலாம்! ரொம்ப வற்புறுத்தினால், 'உங்கள் செயற்கைச் சந்திரனை எங்களிடம் தாருங்கள்; உங்களுக்காக அதனை நாங்கள் உலகைச்சுற்றி வருமாறு எங்கள் ராக்கெட்டில் வைத்து அனுப்புகிறோம்' என்பார்கள்!''

அனுபமா புன்னகை புரிந்தாள். ''அவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. அவர்களுடைய அரசியல் போக்கே அப்படி.''

''உண்மை. இதற்கு அதிகமாக நாம் எதிர்பார்த்தால் அது நம் தவறுதான். ராக்கெட்டுகளைத் திசை திருப்பவும் கட்டுப்படுத்தவும் தேவையான அறிவாற்றல் தான் நமக்குக் குறைவாக இருக்கிறது. ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இந்த இரகசியங்களை ருஷ்யா என்ன, விஷயமறிந்த வேறு எந்த நாடுதான் நமக்கு வெளியிட்டு உதவும்? சர்வதேசப் பாதிப்பு இன்றி இது நிகழ்வது எப்படி சாத்தியம்? இதை நாம் எதிர்பார்க்கப் போனால் நமது கூட்டுச்சேராக் கொள்கைதான் என்ன ஆவது? மேலும் நமது தளபதிகளில் பெரும்பாலோர் ஸாண்ட்ஹர்ஸ்ட் அல்லது வெஸ்ட் பாயிண்ட் பாணியில் உருவானவர்கள். மேற்கத்திய விஞ்ஞான முன்னேற்றத்தில் அவர்கள் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதில் வியப்பில்லை. அமெரிக்காவில் நமக்கு உதவக் கூடியவர்கள் யார் என்று நோட்டம் பார்க்கச் செய்தார்கள்.''

''நான் அகப்பட்டுக் கொண்டேனுக்கும்?''

''உனது இந்தக் கேள்வியே 'நான் அகப்பட்டுக் கொள்ளவில்லை' என்று அடித்துச் சொல்வது போல் தொனிக்கிறதே, அதுதான் என் கவலை. நான் மேற்கொண்ட பணி வெற்றிகரமாய் முடிய வேண்டும் என்று பிரார்த்திக்கத் தான் உன்னையும் அழைத்துக் கொண்டு ஆனைமுகத்தானிடம் வந்தேன்!''

''என்னை அழைத்துக்கொண்டு இந்தியா திரும்புவதுதான் உங்கள் லட்சியம் என்றால் அது மிகச் சுலபமாக நிறைவேறி விடும். துப்பாக்கி முனையில் என்னை மிரட்டியோ, அல்லது என் அன்பை அபரிமிதமாகப் பெற்றிருக்கும் என் தந்தைக்கு ஏதாவது தீங்கு நேரும் என்று பயமுறுத்தியோ என்னைச் சிரமமின்றி நாடு கடத்திச் சென்று விடலாம். அமெரிக்காவுக்குத் துரோகம் இழைத்து விட்டுக் கிளம்புவதை விட இப்படிப் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்படுவதையே நானும் விரும்புகிறேன். மனச்சாட்சியின் உறுத்தலாவது இல்லாதிருக்கும்.''

''சாகஸங்கள் நிரம்பிய சினிமாக் கதையையா நான் உனக்குக் கூறிக் கொண்டிருப்பதாய் நினைக்கிறாய்? துப்பாக்கி முனையில் காரியங்களைச் சாதிப்பது என்பது நீ எண்ணுவது போல் அப்படியொன்றும் சுலபமான காரியமல்ல. அதற்கு நான் அதிகாரமும் பெற்றிருக்கவில்லை. ஆயுதங்களை விட அதிகமாக எனது வாக்கு வன்மையிலும் தோற்றத்திலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன் நான்! என்னிடமுள்ள கவர்ச்சிக்குக் கட்டுப்படாமல் இருக்க யாரால் முடியும்? இன்னும் ஓரிரு நாட்களில் பார், என்னுடன் ஸஹாரா பாலைவனத்துக்கு வேண்டுமானாலும் புறப்பட்டு வரத் தயாராகி விடுவாய்!''

''ஸாரி! ராங் நம்பர்!'' என்றாள் அனுபமா சிரித்துக் கொண்டே. கடுமையாகவும் பின்னர் அதனைத் தணிக்கக்

கிண்டலாகவும் அவன் பேசியதைக் கேட்டு அவளும் விட்டுக் கொடுக்காமல் பதிலளித்து விட்டாள். தனஞ்செயன் அவளுடன் சேர்ந்து வெளிப்படையாகச் சிரித்தான். ஆனால் அவன் உள்ளத்தில் சோர்வு தலைகாட்டத் தொடங்கி விட்டது. 'இவளை இன்னும் என்னவெல்லாம் சொல்லி நம் வசப் படுத்துவது?' என்ற கவலையில் ஆழ்ந்தான்.

12. தோல்வியின் விளிம்பில்...

நெடிதுயர்ந்த நியூயார்க் கட்டிடங்கள் மானுடத்தின் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாக இருந்தாலும் மானுடத் தன்மைகளை உணர்த்துவதாயில்லை என்பதால்தானோ என்னவோ அந்நகரின் ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் ப்ரூக்லின் பூந்தோட்டம் உருவாகியிருந்தது. கடுமையான சிமிண்ட் காங்கிரீட்டைப் பார்த்துப் பார்த்து அலுத்து வரும் கண்களுக்கும் வாடி வரும் மனத்துக்கும் மென்மையான மலர்களும் பசுமையான மரங்களும் குளிர்ச்சியும் புத்துயிரும் அளிப்பனவா யிருந்தன. இங்கே ரோஜாத் தோட்டம் உண்டு, பாறைகளிலும் பாலைவனங்களிலும் வளரும் செடிகளுக்கென ஒதுக்கப்பட்ட தனி இடமும் உண்டு. ஜப்பானியப் பாணி பூங்கா உண்டு, மூலிகைகளுக்கெனத் தனியே ஒரு பகுதி உண்டு. காட்டுப் பூக்களைக் கொண்டதும், குருடர்களுக்கென மணம் மிக்க மலர்களை உடையதுமான தனித் தனித் தோட்டங்கள் உண்டு.

இவற்றையும் இவை போன்ற வேறு பல சிறப்புக்களையும் உடைய தோட்டத்தின் கண்கொள்ளா அழகுகளைத் தனஞ்செயன் மனம் கொள்ளாத அதிசயத்துடன் பார்த்தபடியே அனுபமாவுடன் காலாற நடந்து கொண்டிருந்தான்.

''இதை யெல்லாம் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்று கேட்டாள் அனுபமா.

''ரோஜாக்களை உன் கன்னங்களுக்கும், டாஃபிடல்களை உன் எடுப்பான மூக்குக்கும் ஒப்பிடலாம் என்றும் தோன்றுகிறது. அகன்று விரிந்த ஒளி பொருந்திய கிரிஸாந்திமக் கண்கள் உன்னுடையவை என்று வர்ணிக்கத் தோன்றுகிறது. டியூலிப் மொட்டுக்களை எதற்கு உவமையாகச் சொல்லலாம் என்று கூறமாட்டேன். அளவுக்கு மீறிய உரிமைகளை நான் எடுத்துக்கொள்வதாக நீ கருதலாம்!'' இவ்வாறு கூறும்போதே தெளிவாகத் தன் கருத்தை வெளியிட்டு விட்ட தனஞ்செயன், ''உனக்கு நான் கோபமூட்டக் கூடாது. உன் தயவு எனக்கு இப்போது தேவை'' என்றும் சேர்த்துக் கொண்டான்.

அவனது புகழுரைகள் எதுவும் காதிலேயே விழாதது போல் ஒதுக்கிவிட்ட அனுபமா கூறினாள்: ''பிராங்க்ஸ் மிருகக் காட்சி சாலையில் ஒரு நிலைக் கண்ணாடியின் அகன்ற சட்டத்தில் 'உலகிலேயே மிகவும் கொடியதான மிருகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்று எழுதி வைத்திருந்ததே நினைவிருக்கிறதா? இந்தத் தோட்டத்தில் உலவி வரும்போது எனக்கு அதுதான் ஞாபகம் வருகிறது. பாரினில் இத்தனை அழகுகள் இருக்கும் போது பிரபஞ்சத்தில் மனிதன் கண்டு களிக்க வேண்டிய அற்புதங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கும்போது மனிதன் ஏன் யுத்தத்தைப் பற்றி நினைக்க வேண்டும்? அழிவைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்? மனித மனத்தில் உள்ள இந்த முரண்பாட்டினை எவ்வளவு யோசித்தாலும் என்னால் இன்னமும் புரிந்து கொள்ளவே முடியவில்லை.''

''உன் பேச்சு எனக்குத் தெம்பு தருகிறது அனு! என் கோரிக்கையை நீ அடியோடு புறக்கணித்து விடவில்லை என்றும், இன்னும் அது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாய் என்றும் உணர்த்துகிறது.''

''உங்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இல்லாமல் இருந்திருந்தால் உங்களை மீண்டும் சந்திக்கவே சம்மதித்திருக்க மாட்டேனே?''

''எனக்குத் தெரியும், நியூயார்க் பிள்ளையார் என்னைக் கைவிட மாட்டார் என்று. இனி என்ன காரியமாக வேண்டுமானாலும் அமெரிக்க விநாயகருக்குத்தான் பிரார்த்தித்துக் கொள்ளப் போகிறேன். தேங்காய் வாங்கி விமான பார்சலில் உன் அப்பா பெயருக்கு அனுப்பி விடுகிறேன். உடைத்து விடுவார்!''

''விக்னேசுவரர் உங்களுக்கு உதவுவதானால் மைக்கேல் ரூபத்தில்தான் அவர் அதைச் செய்ய முடியும்.''

''அப்படியா? அவன் பிள்ளையாரிடம் பவர் ஆஃப் அட்டர்னி வாங்கிக் கொண்டு எத்தனை நாட்களாயிற்று?''


இதைக் கேட்டதும் எதிரே தென்பட்ட செர்ரி மரம் புஷ்பித்தது போல் அவள் முகமலர்ச்சியுற்றுச் சிரித்தாள். புன்னகை மாறாமலே பேசினாள்: ''விக்னேச்வரர் மைக்கேல் மூலமாக உங்களுக்கு எப்படி உதவ முடியும் என்பதைப் புரிய வைப்பதற்கு முன்னால் இதற்குத் தொடர்பான வேறு சில அம்சங்களை நாம் கவனிக்க வேண்டும். இவற்றில் பல விஷயங்களை ஏற்கெனவே நீங்கள் அறிந்திருக்கலாம். என்றாலும் பின்னால் நான் வெளியிடப் போகிற சில அந்தரங்கங்களின் முக்கியத்துவத்தை நீங்கள் சரியானபடி உணர நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ள செய்திகளையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.''

தனஞ்செயன் அடக்க மாட்டாமல் நாலு பேர் திரும்பிப் பார்க்கிற அளவுக்குச் சிரித்தான். ''மூன்று நாட்களுக்கு முன்னால் நான் போட்ட பூர்வ பீடிகையின் கார்பன் காப்பி இது! இருக்கட்டும். இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் என்பார்கள். நான் ஆயிரம் செவிகளுடன் காத்திருக்கிறேன்; சொல்லு!''

''அமெரிக்காவின் தேசிய விண்வெளி நிறுவனம் ஒரு மகா சமுத்திரம் போன்றது. மேற்கே பஸிபிக் கடற்கரையோரத்திலிருந்து கிழக்கே அட்லாண்டிக் கடற்கரை வரையில் இந்தக் கடலும் விரிந்திருக்கிறது. பரவலாக ஆங்காங்கே பல்வேறு காரியாலயங்கள், விஞ்ஞானக் கூடங்கள் உள்ளன. ஆயிரக் கணக்கான விஞ்ஞானிகள் தனித் தனியே பல்வேறு துறைகளில் சிரமசாத்தியமான ஆராய்ச்சிகளில் மாதக் கணக்கில், ஏன் வருஷக் கணக்கில் கூட ஈடுபட்டிருப்பார்கள். இவர்கள் தனித் தனியே அமைதியாக அரும்பாடு பட்டுச் செய்கிற காரியங்களில் உலகத்தைப் பரபரப்பில் ஆழ்த்துகிற விஷயமாக ஏதும் இராது. ஆனால் இவர்களின் உழைப்பெல்லாம் கேப் கென்னடியில் ஒன்று சேர்ந்து மனிதனின் சந்திர மண்டலப் பயணமாகவும் அதற்கும் மேலே விண்ணை ஊடுருவி ஏனைய கிரகங்களை நோக்கிச் செல்லும் ஆராய்ச்சிச் சாலைகளை உடைய வாகனங்களாகவும் உருமாறும்போது உலகமே உற்சாகத்தில் துள்ளிக் குதிக்கிறது. சாட்டர்ன் ராக்கெட் அல்லது அப்போலோ விண்கலம் என்றால் அதில் எத்தனை விதமான விஞ்ஞானத் துறைகள் உள்ளடங்கியுள்ளன தெரியுமா? பௌதிகம், ரசாயனம்,எலெக்ட்ரானிக்ஸ்,உலோக இயல், தாவர, மிருக இயல், 'மினியேசரைஸேஷன்' எனப்படும் எதையும் வாமன உருக்கொள்ளச் செய்யும் ஆய்வு, உணவூட்டச் சக்திகளின் ஆய்வு, பூமி சாஸ்திரம், புகைப்பட, டெலிவிஷன் துறைகள், வான சாஸ்திரம், மருத்துவம், மனோதத்துவம், உடற்பயிற்சி, ஆரோக்கியம் என்று இப்படிப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்... போர் அடிக்கிறேனா?'' — புன்முறுவலுடன் அவனது பழைய கேள்வியைத் திருப்பிப் போட்டாள் அவள்.

''சொல்லு! உன் சிந்தனைப் போக்கு எனக்குப் புரிகிறது. நீயும் மைக்கேலும்

அதுவும் ஒரு சட்டம்!



பழைய காலத்தில், கிரீஸ் தேசத்தில், யாராவது பொதுச் சபையில் புதிய சட்டம் கொண்டு வர விரும்பினால் அவர் ஒரு தூக்குக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு, ஒரு மேஜை மீது நின்றுகொண்டு சட்டத்தை விவரிக்க வேண்டும். மக்களுக்கு அச் சட்டம் பிடித்திருந்தால் தூக்குக் கயிறு அகற்றப்படும்; இல்லையேல் மேஜை அகற்றப்படும்!


ஆதாரம்: கர்டில் பாக் என்பவர் எழுதிய நூல்.

உதவி: நாடோடி

அதிலும் சலுகை!

போன மாதம் எங்கள் அலுவலகத்தில் நடந்த ஆண்டு விழாவின் பொழுது பல பந்தயப் போட்டிகள் நடைபெற்றன. அதில் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் நானும் கலந்து கொண்டேன். மொத்தம் ஐந்து பேர்களே கலந்து கொண்டோம். திடீரென்று பந்தய அறிவிப்பாளர் எங்களுள் ஒருவரை நோக்கி ''தாங்கள் 30 மீட்டர் முன்னே நின்று கொள்ளுங்கள்'' என்றார். அதாவது அவர் 70 மீட்டர் தூரத்தைக் கடந்தால் போதுமானது. அறிவிப்பாளரை நோக்கி ''அவருக்கு மட்டும் எதற்காக இந்தச் சலுகை?'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''சார்! அவர் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர். அதற்காக அவருக்கு இந்தச் சலுகை'' என்றார். பிரமித்துப் போய் நின்றேன், பந்தயத்தில் ஓட வேண்டியதைக் கூட மறந்து!

ஆதாரம்: ''காரவான்'' — தகவல்: கே. மோகன்



அவ்வளவுதானா?
அவ்வளவேதான்!

புகழ் பெற்ற எழுத்தாளர் ஸ்டீபன் லீகாக்கிடம் ஓர் இளம் எழுத்தாளர் வந்தார். ''ஸார்! நீங்கள் இவ்வளவு அருமையாக எழுதுவதற்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''ஒன்றும் பிரமாதமில்லை. ஒரு பேனா, கொஞ்சம் மை, சில தாள்கள் எடுத்துக் கொண்டு, உட்கார்ந்து, மனத்தில் தோன்றுவதை யெல்லாம் எழுதிக் கொண்டே போக வேண்டியதுதான்'' என்றார் லீகாக்.

''அவ்வளவுதானா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார் புதிய எழுத்தாளர்.

''ஆமாம். ரொம்பச் சுலபம்தான். ஆனால் மனத்தில் தோன்றுவதுதான் ரொம்பக் கஷ்டம்'' என்று முடித்தார் லீகாக்.

-'அவதா'

ஸ்விஸ் பண்பு



ஸ்விட்சர்லாந்திலிருந்து வந்த கடிதம் ஒன்று அந்த நாட்டுத் தபாலாபீஸில் போட்ட முத்திரையில் கொஞ்சம் கிழிந்துவிட்டது. அதனால், ''தவறுதலாகக் கிழிந்துவிட்டது. மன்னிக்கக் கோருகிறோம்'' என்று எழுதி அந்தக் கவர் மீது ஒட்டியிருந்தார்கள்.

— ஹிம்மத்

குபேர நாடு



நியூயார்க் நகருக்கும் சிகாகோ நகருக்கும் இடையே தினமும் எழுபது விமான சர்விஸ்கள் உள்ளன.

- டைம் - 'பாலி'

இருவருமே நாஸாவுடன் தொடர்பு கொண்டவர்களானாலும் வெவ்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து வருகிறீர்கள் என்றும், இந்தியாவின் இன்றையத் தேவைக்கு உன்னைக் காட்டிலும் மைக்கேலே அதிகமாக உதவ முடியும் என்றும் கூறுகிறாய். அப்படித்தானே?''

''ஆமாம்....''

''நீ என்னிடமிருந்து நழுவுவதற்காக ஏதேதோ அளக்கிறாய். வழக்கமாக விஞ்ஞானிகள் தங்களுக்குப் பணத்தாசை இல்லையென்றும், தாய்நாட்டுப் பற்று இல்லாமல் போகவில்லை என்றும் இந்தியாவில் ஆராய்ச்சிக்குரிய வசதிகள் தேவையான அளவு இல்லாததுதான் அமெரிக்காவில் தாங்கள் குடியேறக் காரணம் என்றும் சாக்குச் சொல்லுவார்கள். இது கேட்டுக் கேட்டு அலுத்துப்போன விஷயம். நல்ல வேளை! நீ என்னைத் தட்டிக் கழிக்கப் புதிய கற்பனைகளில் இறங்கி யிருக்கிறாய். ரசிக்க முடிகிறது!''

கிண்டலும் கடுமையுமாக அவன் பேசியது அவளுக்கும் கோபத்தைக் கிளப்பியது. ''தேசபக்தி பற்றி எனக்கு உபதேசிக்காதீர்கள்'' என்று சூடாகச் சொல்லிவிட்டு அவள் தொடர்ந்தாள்: ''விஞ்ஞான உலகு குறுகிய தேச எல்லைகளைக் கடந்து நிற்பது. அது அறிஞர் உலகு. பணமோ, பற்றோ, பாசமோ அங்கே முக்கியமில்லை. அறிவுத் தேட்டத்துக்கான வசதிகள், அறிவாற்றலுக்குக் கிடைக்கும் வரவேற்பு, மதிப்பு மரியாதை, அதைப் பயன்படுத்திக் கொள்வதில் காண்பிக்கப்படும் ஆர்வம் இவைதாம் விஞ்ஞானிகளுக்கு முக்கியம். துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் இவை அரிதாயுள்ளன.''

''உன் திறமைக்கு மதிப்பளிக்காமலா வர்த்தகத் துறையில் ஈடுபட்டவன் போல் நடித்துக் கொண்டு இவ்வளவு தூரம் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்?''

''நான் தனியொருவரைப் பற்றிப் பேசும்போது நீங்கள் பொதுப்படையான வாதத்தில் இறங்குகிறீர்கள். அந்தப் பொதுப்படையான குற்றச்சாட்டுக்கு நான் பதில் அளிக்கும்போது நீங்கள் மீண்டும் தனி நபரிடம் தாவுகிறீர்கள். இது நியாயமான தர்க்க வாதமல்ல.''

தோல்வியின் விளிம்பில் தான் நிற்பதைப் புரிந்து கொண்டான் தனஞ்செயன். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''முடிவாக நீ என்னதான் சொல்லுகிறாய்?''

''வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசக் கூடிய விஷயமா இது? பொறுமை இழக்காமல் புரிந்துகொள்ள முயலுங்கள். நீங்கள் எந்த நோக்கத்துடன் ஒரு விஞ்ஞானியை இங்கிருந்து கடத்திக் கொண்டு போகத் தீர்மானித்தீர்களோ, அந்த நோக்கம் என்னால் நிறைவேற முடியாது. ராக்கெட்டுகளைக் கட்டுப்படுத்தித் திசை திருப்பும் Guidance and Control துறையில் அறிவாற்றலை இந்தியாவுக்கு நீங்கள் இறக்குமதி செய்ய வேணுமானால் அதற்கு நீங்கள் அணுக வேண்டிய மனிதர் மைக்கேல்தான். ஆனால் அவர் உங்களுக்கு உதவச் சம்மதிக்க மாட்டார்!''

''இரண்டாவது ரவுண்டிலேயே நீ என்னை வீழ்த்தி விட்டாய். ஒன்று, இரண்டு, மூன்று என்று நீ எண்ண ஆரம்பிக்கலாம்.'' குஸ்திச் சண்டை பரிபாஷையில் பேசிய தனஞ்செயன் மிகுந்த மனச்சோர்வுடன் அருகிலிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தான்.

அவன் அருகில் அவள் உட்கார்ந்து கொண்டாள். மெதுவாக அவனது ஒரு கன்னத்தில் தனது வலது உள்ளங்கையைப் பதித்தாள். ''உங்களுக்கு உதவ முடியாத நிலையில் இருப்பதற்காக நான் மனப்பூர்வமாக வருத்தப் படுகிறேன். என்னை நம்புங்கள்'' என்றாள்.

அவளது மென்மையான விரல்களின் வெம்மையான ஸ்பரிசமோ, அல்லது அகன்ற கண்களின் அனுதாபம் மிகுந்த பார்வையோ எதுவுமே இடிந்துபோய் அமர்ந்திருந்த அவனை நிமிரச் செய்ய முடியவில்லை.

(தொடரும்)

உங்கள் குழந்தை ஆரோக்கியமாக வளர



குழந்தை ஓயாது அழுதால் வயிற்றுக் கோளாறாய் இருக்கலாம். அவனுக்கு அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர் கொடுங்கள். வயிற்றுவலி, வாயு, அஜீரணம், பல் முளைப்பு உபாதை இவைகளை உடனே குணப்படுத்தி அவனை ஆரோக்கியமாக வளரச் செய்கிறது.

அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்

கொடுங்கள்

அமிர்தாஞ்சன் லிட்.

OBM 2640 TM

அறுவை சிகிச்சை இன்றியே மூலநோயைக் குணப்படுத்த அபூர்வ மருந்து!



பிரிபரேஷன் எச்*

அமெரிக்க டாக்டர்களால் பரீட்சிக்கப்பட்டது.

- நிமிடங்களில் எரிச்சலை நிறுத்துகிறது.
- வலியிலிருந்து உடனே நிவாரணமளிக்கிறது.
- மூலநோய் கடுமையாக இல்லாவிட்டால், அறுவை சிகிச்சை இன்றியே மூலத்தைச் சுருக்க உதவுகிறது.
- இதனால் எண்ணெய்ப்பசை கிடைக்கிறது: மலம்போக்கு வலியின்றி எளிதாகிறது.

இலவசம்! மூலநோய் பற்றிய விளக்கப் புத்தகமொன்றை இலவசமாகப் பெற (20 பைசா தபால் தலையுடன்) இன்றே எழுதுக. இம் முகவரிக்கு: டிபார்ட்மெண்ட் PH-66, த.பெ.எண். 10133, பம்பாய்-400 001.

* Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd.

743 PH-92 Tam


ஆசைகள் மடிவதில்லை
6
கதை: கௌசிகன்
சித்திரம்: சூர்யா..
துப்பாக்கி முனையிலும் சற்றும் பதற்றமடையாத சதீஷ் நிமிர்ந்து பார்த்தான். தேடி வந்தவன் நின்று கொண்டிருந்தான் – வியப்பு, சந்தேகம், கொதிப்பு ஆகிய உணர்ச்சிகள் வழியும் முகத்துடன் – சோமசுந்தரம்.
உன்னை இங்கு இப்படிச் சந்திப்பது விநோதமாக இருக்கிறதே!
இது என்ன காரியம்? மோசடியா...?
மோசக்காரன் யார்? இப்படியே உன் மீது பாய்ந்து என் வெறும் கைகளாலேயே உன்னைக் கொன்று பழி வாங்கும்படி என் கொதிக்கும் ரத்தம் கூறுகிறதடா பாவி...
மோசடியா? ஏன் அப்படி நினைக்கிறாய்? அந்தக் கலையில் வல்லவனான உனக்கு இப்படி நினைக்க உரிமை உண்டு தான். பதவிக்காகப் பணத்துக்காக நீ எதையும் செய்யக்கூடியவனாயிற்றே...
கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மல்லிகாவிற்கு நீதி வாங்கித் தருவதாக வழக்கில் போனாய். ஆனால் நீ வாதாடிய விதம் எங்களில் பலருக்கு வியப்பை அளிக்கிறது!
அது மட்டுமா? தர்மராஜனின் பல கோடி ரூபாய் சொத்துக்கு அவர் விதவை மனைவி வாரிசு என்பதை அறியும் போது அந்த வியப்புப் பன்மடங்காகியது.



இந்த உயிலைப் பற்றி என்ன சொல்லுகிறாய்? இது உலகத்துக்குத் தெரியுமானால் எப்படி வியக்கும்? யார் மோசக்காரன், எது மோசடி என்பதையும் இனம் பிரித்துக் காட்டுமே இது....
தர்மராஜனின் கொலை வழக்கையும், அறக்கட்டளை அமைப்பில் உனக்குக் கிடைத்துள்ள பதவி பற்றியும் ஆராய்ந்தால் மறைக்கப்பட்டுள்ள உண்மைகள் விசுவரூபமெடுத்து வெளிவரும்... வெளிப்படுத்தத்தான் போகிறேன்.
இத்தனையையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சோமசுந்தரம் குபீரென்று குனிந்து மேஜை மீதிருந்த சதீஷின் கைத்துப்பாக்கியையும், உயிலையும் எடுத்துக் கொள்ளுகிறான்.
முனுசாமி... வா இங்கே...
சோமுவின் அடியாள் உள்ளே வந்தான்.
என் விஷயங்களில் தலையிடுபவர்களை நான் எப்படி நடத்துவேன் என்பது உனக்குத் தெரியாது சதீஷ். என்னைக் குற்றவாளியாக்க முற்படுவாயானால்...? அது சரி! இங்கு உன்னை அனுப்பியது யார்?
முனுசாமி பீரோவில் மணிக்கயிறு இருக்கிறது. அதை எடு... சதீஷ்! மௌனம் உன்னைக் காப்பாற்றாது. நீ பேசாவிட்டால் பேச வைக்க எனக்குத் தெரியும். உன்னை இங்கு அனுப்பியது யார், சொல்? நந்தகோபாலா?
கொலைக்கு அஞ்சாதவன் இவன். தர்மராஜன், முரளி, அடுத்து நான்— சில நாளில் மல்லிகா. இறப்பின் எண்ணிக்கை உயரும். மரணத்தின் பிடியிலிருந்து அந்தப் பெண் விடுபடும் வரையிலாவது நான் வாழ்ந்தாக வேண்டும், சாகக்கூடாது.
உன்னை இங்கு யார் அனுப்பியது, எதற்காக? பேசு..பேசு... பேசமாட்டாய்..?
ஆ... ஓ...!
தொடரும்

ஆரோக்கியம் அழைக்கிறது



கிளியோபாட்ராவுக்குக் கவர்ச்சி; சூர்ப்பனகைக்கு இகழ்ச்சி!

"கிளியோபாட்ராவின் மூக்கு காலே அரைக்கால் அங்குலம் அதிகமாகவோ குறைவாகவோ இருந்திருந்தால் சரித்திரமே வேறு மாதிரியாகி விட்டிருக்கும்'' என்று சொல்வதுண்டு. அவள் கவர்ச்சியே அவள் மூக்கு அழகில்தான் இருந்ததாம்!

முகத்திலே நீட்டிக் கொண்டிருக்கும் மூக்குப் பகுதியில் கீழ்ப்பாதியில் எலும்பே இல்லை. உறுதியான தசைத் திசு அமைப்பே அது. வேறு பிராணிகளுக்கு இப்படி மூக்கு துருத்திக் கொண்டு இருப்பதில்லை. ஆதி மனிதனுக்கும் மூக்கு வளர்ச்சி இருந்ததில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

நெற்றிக்கு நட்ட நடுவே இருக்கிறது மூக்கு என நினைக்கிறோம். ஆனால் பத்தில் நாலு பேருக்கு அது வெகு நுட்பமாக இடமோ வலமோ தள்ளி இருப்பது சாதாரணம்.

உடலியக்கத்தின் உயிர் மூச்சை வாங்கி விடும் முக்கிய உறுப்பு மூக்கு. இதற்கு இரண்டு வழிகள் — நாசித் துவாரங்கள். இவை முறை போட்டுப் பணியாற்றுவது போலத் தோன்றுகின்றன. பணி புரியும் பக்கம் வெதவெத வென்று இருக்கும். அதனால்தான் முயற்சியுடன் பிராணயாமம் செய்யும் போது ஒரு நாசியிலே இழுக்கும் காற்று குளிர்ச்சியாயும், மற்றொன்றில் உறிஞ்சும் காற்று வெப்பமானதாகவும் தோன்றுகிறது.

வெளிக் காற்று மூக்கு வழி நுழையும்போது 'ஏர்-கண்டிஷன்' ஆகிவிடுகிறது. பாலைவனத்தின் உஷ்ணக் காற்றானாலும் சரி, பனிமலையின் குளிர் காற்றானாலும் சரி, மூக்கு வழியே சென்றவுடன் அந்தக் காற்றை உடல் சூட்டுக்கு ஏற்பப் பக்குவப் படுத்தியே உள்ளே அனுப்புகிறது மூக்கு.

இதற்கு முன்பே உட்கொள்ளும் காற்றில் உள்ள தூசுகளை நீக்கி விடுகிறது மூக்கு, நுண் மயிர்களைக் கொண்டு.

மூக்கின் உள்ளே புகும் காற்று மேலண்ணத்துக்கு மேல் செல்லும்போது இரண்டு மூன்று குகைக் குழல்கள் வழியே நுழைந்து போகிறது. அங்கே சிலியா என்னும் மென்மையான பகுதியில் உடல் வெப்பத்துக்கு ஏற்பப் பதப்படுகிறது. சிலியாத் திசுக்கள் அலை அலையாக அசைந்தபடி இருக்கும். அறுவடைக்குத் தயாரான கதிர்கள் நிறைந்த வயலில் மெல்லிய பூங்காற்றில் ஓர் அசைவு தெரியுமே, அப்படிப்பட்ட அசைவு. இதன் காரணமாகவே மூச்சுக் காற்று உடலுக்கு ஏற்பப் பக்குவமாகிறது. வெப்பமான நாட்களில் வறண்ட காற்றைச் சுவாசிக்கும்போது காற்றிலே சற்று ஈரம் சேர்க்கிறது மூக்கு; குளிர்ந்த நாட்களில் ஈரமான காற்று மூக்கு வழியே போகும் போதே, ஈரத்தை வாங்கிக் கொண்டு வெதவெத வென்ற காற்றை நுரையீரலுக்கு அனுப்புகிறது மூக்கு.

முகத்துக்கு வெளியே துருத்திக்கொண்டிருக்கும் சதையை விட மிக ஆழமானது, அகலமானது மூக்கு என்னும் உறுப்பு. அது கபால எலும்புகளின் சில குகைகள் வரையில் பரந்தது. தொண்டையுடனும் காதுகளுடனும் தொடர்புடையது.

கண்ணீர்த் திரவம் மூக்கின் உள்ளே வழியும், ஆனால் மூக்கின் உள் சவ்வு வெப்பத்தில் அது ஆவியாகி விடும்.

மூக்கின் முக்கிய பணி மூச்சு விடுவது என்றால் அதன் துணைப் பணி முகர்வதேயாகும். மூக்கில் மூன்றிலொரு பங்கு மேல் பாக நரம்புகளின் பொறுப்பு, முகர்வது. இவை நுட்பமான நரம்புகள். நெடியும் தூசும் தாங்காதவை. அதன் எதிர்ப்பு அறிகுறியே தும்மல்.

மூக்கைச் சூழ்ந்து நெற்றியின் பின்னேயும், கன்னங்களுக்குள்ளேயும் சில கபால எலும்புக் குகைகள் இருக்கின்றன. சைனஸ் என்னும் இந்தப் பகுதிகளின் உள்ளே சவ்வு இருக்கிறது. குகை போன்ற இந்த அமைப்புக்களாலும், மூக்கின் சுவாச நிதானத்தாலும் தான் குரல் அழகும் வலுவும் பெறுகிறது. ஓயாத தலைவலியா? காரணம் என்னவாக இருக்கும் என்று ஆராயும் வைத்திய நிபுணர்கள்முதலில் மூக்கு உறுப்புக்களைப் பரிசோதனை செய்துபார்ப்பார்கள். அதற்குப் பிறகே கண் காரணமாக இருக்குமோ என்று சந்தேகப்படுவார்கள். அப்படியும் பார்த்தபிறகுதான் நரம்புச் சிகிச்சை நிபுணரிடம் அனுப்புவார்கள். மூக்கு உறுப்புக்கள் ஆரோக்கியமாக இராததே முக்கால்வாசி தலைவலிக்குக் காரணம்.

மூக்கு ஒழுகுதல் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சாதாரணம். இதற்குப் பல காரணங்கள்.

'ஜலதோஷம்' என்ற சாதாரண மூக்குக் கொட்டுதலுக்கும் இன்புளுவன்சா விஷகரத்துக்கும் தொடர்பு உள்ளது. இங்கிலாந்தில் சாதாரண ஜலதோஷத்தைப் பற்றி ஆராயும் ஓர் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஐம்பது ரக ஜலதோஷத்தை வகைப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜலதோஷத்துக்கு உறுதியான சிகிச்சை எதுவும் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. வைரஸ் கிருமிகள் இதற்குக் காரணம் என்பதும், தும்முவதால் பரவும் இது தொற்றக் கூடிய தொந்தரவு என்



நேவனின் துப்பறியும் சாம்பு எவ்வளவு பிரசித்தமோ அவ்வளவு பிரசித்தம் சாம்புவின் மூக்கு! படத்தில் சாம்புவின் வேஷம் தரித்திருப்பவர் திரு. என். எஸ். நடராஜன்.

பதும் தெரிகிறது. ஆகவே, 'துணிக் கைக்குட்டையால் மூக்கைச் சிந்தாதீர்கள். கிடைத்தால் காகித நாப்கின்களால் மூக்கைச் சிந்தி எறிந்து விடுங்கள்!' என்று யோசனை கூறப்படுகிறது.

ஜலதோஷத்துடன் தொடர்ந்து வேலைசெய்வது சரியல்ல. சாதாரண ஜலதோஷத்துக்கு மருந்தைவிடத் தேவையானது ஒய்வுதான். ஒய்வே ஔடதம். ஒய்வும் வைட்டமின் சி மாத்திரையும் விரைவில் குணமாக உதவுகின்றன.

குழந்தைகளுக்கு மூக்கு ஒழுகுவது இயல்பு. அவை நீரிலே விளையாடுவதும் சுரத்திலே இருப்பதும் காரணம். வைரஸ் கிருமிகள் எளிதில் குழந்தைகளைத் தாக்கி விடுகின்றன.

சில குழந்தைகளுக்கு ஒரே ஒரு மூக்கு நாள் கணக்கில் ஒழுகி வந்தால் குறை வேறு எங்கோ இருக்கிறது என்று ஊகிக்க வேண்டும். சிறு பொத்தான், புளியங்கொட்டை எதையாவது குழந்தை மூக்கிலே அடைத்துக்கொண்டிருக்கும். வைத்தியர் அதைக் கவனித்து எடுத்து விடுவார்.

போதிய அளவு புரதமும் வைட்டமின்களும் தின்று வரும் குழந்தைகளுக்குத் தாங்கு சக்தி இருக்கும். நோய் எளிதில் பாதிக்காது. போஷாக்குக் குறைந்த குழந்தைகளே மூக்கு ஒழுகும் குழந்தைகளாக இருக்கக் காண்கிறோம்.

குழந்தைகளுக்கு ஓயாமல் மூக்கு ஒழுகியபடி இருப்பது. ஒரு மூக்கில் மட்டும் தொடர்ந்து ஒழுகுவது. எப்போதாவது சீழ் அல்லது ரத்தம் வருவது, சகிக்க முடியாத நாற்றம் வருவது என்ற குறைகள் நேர்ந்தால் விரைவிலேயே வைத்திய உதவி நாட வேண்டும். இவை யெல்லாம் நோய் இருப்பதற்கு அடையாளங்கள்.

குழந்தைகள் வாயினுல் மூச்சு விடுவதும் மூக்கு நோயுற்றிருப்பதற்கு அடையாளமே. மூக்கினுல் சுவாசிக்க முடியாமல்தானே வாயால் மூச்சு விடுகிறது குழந்தை? வாயால் மூச்சு விடும்போது காற்றின் தூசு வடி கட்டப்படுமா? காற்று உடலின் சூட்டுக்கு ஏற்ப 'ஏர்க் கண்டிஷன்' பெறுமா? வாயால் மூச்சு விடுவது இயற்கைக்கு முரணுனது. எனவே நுரையீரல் விரைவில் பாதிக்கப்படுகிறது.

அடிக்கடி ஜலதோஷம், தலைவலி என்று வந்தால் சைனஸ் சம்பந்தமாக ஏதாவது கெடுதல் உண்டா என்று பரிசோதிக்க வேண்டும். சைனஸ் என்னும் கபால எலும்புக் குகைப் பகுதியில் வரும் தொல்லையே, 'சைனுசைடிஸ்' நோய். இது குணப்படுத்தக் கூடியது. இந்தக் குகையில் உயிர்ச் சவ்வுகளோடு அழுக்குப் பொருள், கிருமி என்று சேர்ந்துவிடலாம். அப்போதுதான் தலை வலிக்கிறது. தொடர்ந்து இலேசான சுரம் அடிக்கிறது. பசி அற்றுப் போகிறது. சிலருக்குப் பல் வலியும் வருகிறது. ஒற்றைத்தலைவலியும் வருகிறது. சாதாரண ஜலதோஷம் என்று பல நாட்கள் கவனிக்காமலேயே இருந்தால் சைனஸ் குகைகள் எல்லாவற்றுக்கும் பரவுகிறது.

மூக்கிலே சொட்டு மருந்து கொடுத்து சைனஸ் சளியை ஓரளவு வெளியேற்றுவது ஆரம்ப சிகிச்சை; மருந்துகள் கொடுத்து மேலும் பரவாமல் செய்வார்கள். இருக்கும் அழுக்கை வெளியேற்ற, நுட்பமான கருவிகள் கொண்டு உறிஞ்சி எடுத்து விடுவார்கள். சைனுசைடிஸ் நோயாளிகள் மூக்கைச் சிந்தவே கூடாது; சிந்திஞலும் வாயைத் திறந்துகொண்டு



மூக்கு, தொண்டை, காது ஆகிய உறுப்புக்களில் வரும் நோய்களை ஆராய்ந்து குணப்படுத்துவதில் விசேஷத் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர் சில டாக்டர்கள். படத்தில் அத்தகைய ஒரு ஈ. என். டி. ஸ்பெஷலிஸ்ட் நோயாளியின் மூக்கைப் பரிசோதிக்கிறர்.

ஒரு மூக்கை மூடிக்கொண்டு மற்ற மூக்கை மட்டும்தான் சிந்த வேண்டும் என்கிறர்கள்.

சாதாரண சிகிச்சையால் குணமடையாவிட்டால், எஞ்சியிருக்கும் அழுக்குப் பொருள்களை எடுத்துவிட ரண சிகிச்சை செய்வதும் உண்டு. கபால எலும்பில் துளையிட்டு, சைனஸ் குகையில் உள்ள அழுக்கை ஒட்ட எடுப்பதே சிகிச்சை.

'ஒஸினு' என்பது மூக்கைப் பற்றும் மற்றொரு நோய். சகிக்க முடியாத நாற்றத்துடன் மூக்கு ஒழுகும். ஆனல் பாவம், நோயாளிக்கு முகரும் சக்தி அறவே இருக்காது. ஆதலால்

வேதனை மற்றவர்களுக்குத்தான். இது பெண்களுக்கு வருவதுண்டு. இந்த நோய்க் கொடுமையால் விவாகரத்துக் கோரிய கணவன்மார்களும் உண்டு! இது கட்டுப்படுத்தக் கூடிய நோய்தான்.

பொடி போடுவது நல்லதா? சந்தேகமில்லாமல் கெடுதல்தான். மூக்கின் மென்மையும் அதன் பணியின் மேன்மையும் மூக்குப் பொடியால் பாழாகின்றன. அதனால் கிறுகிறுப்பு சொற்ப நேர சுகமே. நிலையானதல்ல.

மூக்கு சுத்தமாக இருக்கும் வரையில் ஆரோக்கியத்துக்கு நல்லது. அடி நாக்கு என்னும் டான்சில்ஸ் சதை வீங்கினால் அடினொய்ட் என்னும் மூக்கடிச் சதை நோய் வரும். இதனால் தொண்டை விழுங்குவதற்குச் சிரமப்படும். எளிதாக மூச்சு விடுவது இயலாது; குரல் இயல்பாக இராது. தொண்டை வலிக்கும்.

கவனத்துடனும் சுத்தமாகவும் இருந்தால் மூக்கு வழியே வந்து சேரும் பல நோய்களைத் தடுக்க முடியும். மேலும் பரவாது பார்த்துக் கொள்ளலாம். பல குழந்தைகளை ஆரோக்கியமான இளைஞராக வளர்க்கலாம்.

மூக்கு அழகின் சின்னம் என்றால், இயற்கையின் கவனக் குறைவால் பாதிக்கப்பட்டவருக்கு என்ன மாற்று? இருக்கவே இருக்கிறது பிளாஸ்டிக் ரண சிகிச்சை. நெற்றியிலிருந்து தசைத் திசுக்களை இழுத்து மூக்கிலே ஒட்டவைத்துச் செப்பனிட்டாராம் சிஷ்ருதா என்ற பண்டைய இந்திய வைத்திய முனிவர். இன்றும் இதே வகைச் சிகிச்சைதான் நடைபெறுகிறது.

விபத்திலோ பிறப்பிலோ மூக்குக்கு நேரும் ஊனங்களுக்கு இன்று மாற்று உண்டு. அமைப்புப் பிழைகளைச் சீராக்க முடிகிறது. லட்சுமணனால் பங்கப்பட்ட காமவல்லி சூர்ப்பனகைக்கு, முன்னிலும் அழகிய மூக்கைப் பொருத்தலாம், இன்று.


ஆலோசனை: **டாக்டர் சி. கோவிந்தசாமி**

கட்டுரை: **தம்பி சீனிவாசன்**

பொங்கல் திருநாளுக்காக ஜல்லிக் கட்டு விளையாட்டை ஏற்பாடு செய்திருந்தார்கள் தமிழக அரசினர். இதில் மக்களுக்கு மட்டுமே பங்கிருந்தது. இதில் பங்கு பெற இயலவில்லையே என்று பல மந்திரிகளும், எம். எல். ஏ., எம். பி.க்களும் கட்டாயமாக மனம் வருந்தி விருப்பார்கள். அவர்களுக்கேற்ற வகையில் இதோ சில விளையாட்டான யோசனைகள்! வரும் பொங்கலிலிருந்து இவற்றையும் முயன்று பார்க்கலாமே!

நீள்கை போட்டி

இந்தப் போட்டியில் பதவியில் இருக்கும் கட்சியைச் சேர்ந்த (கைநீண்டவர்) எவரும் போட்டியிடலாம். ஒரு மேஜையின் ஒருபுறம் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் பங்கு பெறுபவர் உட்கார்ந்து கொள்ள வேண்டும். மேஜையின் மறுபுறம் சற்றுத் தள்ளி ஒருவர் கையில் ஒரு கட்டு பணத்துடன் நின்று



கொண்டிருப்பார், ஒரு கோட்டின் பின்னால். பங்கு பெறும் அரசியல்வாதி கையை முடிந்த வரை நீட்டி அவர் கையில் இருக்கும் பணக்கட்டை பிடுங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் அவருடைய கை மேஜைக்குக் கீழ்ப்புறமாகவே நீள வேண்டும்! பரிசு? அவர் வாங்கிக் கொள்ளும் தொகைதான்!

தாவு நிபுணர் போட்டி

இதில் எம். எல். ஏ.க்களே வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளவர்கள். இப் போட்டியில் பத்து நாற்காலிகள் சுற்றி வரப் போட்டிருக்கும் ஒவ்



வொரு நாற்காலியின் மேலும் ஒவ்வொரு கட்சியின் பெயர் போட்டிருக்கும். ஐந்து நிமிட நேரத்துக்குள் யார் அதிகமான முறை ஒவ்வொரு நாற்காலியிலும் உட்கார்ந்து சுற்றிச் சுற்றி வருகிறார்களோ, அவர்களுக்கு ஒரு குரங்குக் குட்டி பரிசு!

வாக்குறுதிப் போட்டி

இதில் முக்கியமாகப் பங்கு பெறுபவர்கள் மந்திரிகளே. ஒவ்வொருவரும் 'மைக்'கின் முன்னால் நின்று கொண்டு மனத்துக்குத் தோன்றிய வாக்குறுதிகளை அள்ளி வீசலாம். 'மைக்'குடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு கம்ப்யூட்டர், அந்த வாக்குறுதி



களில் நம்ப முடியாத ஆகாசப் புளுகுகளை மட்டும் தனியாகக் கணித்துக் கொள்ளும். மிக அதிகமான வற்றை அள்ளி வீசியவருக்கு அரிச்சந்திரன் தலை பொறித்த தங்கப் பதக்கம் அளிக்கப்படலாம்!

--கே. வி. எம்


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல
மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி
அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில்
ஆழ்த்தும் அருமையான புது நறுமணம்
கொண்டது. அதுவே வெய்ல் ஆ:ப் லவ்.
ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத்
தாராளமாக மேனியெங்கும் தூவிக்
கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே
பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம்
நீண்ட நேரம் உங்களைத் தழுவி
உங்களைச் சுற்றிலும் கமகமவென
வீசிக் கொண்டிருக்கும். வெய்ல்
ஆ:ப் லவ் உங்களை அலங்கரிக்-
கட்டும். ஹேலோ மட்டுமே
அளிக்கும் வாசமுள்ள
அன்புத்திரை அது.
ஹேலோ வெய்ல் ஆ:ப்
லவ் டால்க் வாசமுள்ள
அன்புத்திரை...
அன்பைப் போல
மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வெய்ல் ஆ:ப் லவ்
டால்க்
NEW
Halo

HT.G.I.TH (R)

இதுவரை கண்டிராத உலகத்தின் வெற்றிகரமான மிகத் துரிதமான பாடி ஷேப்பர்

ஆடவர்களே! பெண்டிர்களே!

விகாரமான சதைப்பற்றை விரைவில் குறையுங்கள்.



அமெரிக்கா தரும் புதுமை

Rui Maasour*

5 Minute Body Shaper

The figure shaper that works wonders for you.

ரூயிமாஸர் உங்கள் இடுப்பு, இடைபாகம், தொடைகள்— இவைகளிலிருந்து 9-10 செண்டி மீட்டர்கள் குறைக்க உதவுகிறது. இது உத்தரவாத மிக்கது. ஏனெனில் நாள்தோறும் அதனால் உண்டாகும் மாறுதலை நீங்களே நன்ருக உணர்வீர்கள்.

விகாரமான ஊளச்சதையால் நீங்கள் முதியவராகத் தோன்றுகிறீர்கள்.

விகாரமான சதை உங்களை செயலில், உணர்வில், தோற்றத்தில் முதியவராக்குகிறது. மாடம் ரோகன்ஸ் ரூயிமாஸர் பாடி ஷேப்பர் இருபத்துஒன்றே நாட்களில் உங்களை யவ்வன, எழில் கொழிக்கும் கவர்ச்சி உருவமாக மாற்றுகிறது. உலகத்தின் தலைசிறந்த மாடல்கள் எளியதும் மிகவும் பயனுள்ளதுமான நாளுக்கு ஐந்து நிமிட எக்ஸர்ஸைஸையே சிபாரிசு செய் கிறார்கள்.

என் சதைப்பற்றைக் குறைத்து என் உடலுக்கு இளக்கவர்ச்சி தர விரும்புகிறேன்.

இரகசியம் :

RM-166 TAM

KLK—17-2

பணம் திரும்பக் கிடைக்கும் உத்தரவாதமுள்ள சலுகை

மாடம் ரோகன்,
612, சர்ச்கேட் சேம்பர்ஸ்,
நியூ மெரின் லைன்ஸ், பம்பாய் 400 020.

இரண்டு வார உத்தரவாத கெடுவின் கீழ் ரூ. 53க்கு ரூயி மாஸர் பாடி ஷேப்பரை விரைவில் எனக்கு அனுப்புங்கள்.

☐ செக் ☐ மணியார்டர் ☐ வி.பி.பி. ☑ (ஒன்றைக் குறியுங்கள்). திருப்தி இன்றேல் இரண்டு வாரத்திற்குள் முழுப் பணத்தையும் பெற (தபால், பாக்கிங் செலவு போக) திருப்பி அனுப்பிவிடுவேன், வி.பி.பி.க்கு ஆர்டர் செய்கிறேன். தபால்காரரிடம் பணத்தைக் கொடுத்துப் பெற உறுதி கூறுகிறேன். சுத்தமாக எழுதுங்கள்.

பெயர் ______________________ வயது ________

விலாசம் ______________________________

நகரம் ______________ நாடு ______________

செக்குகளோ மணியார்டர்களோ ரோஸ்-முரார்கா இன்க். (ROSS-MURARKA INC.) என்ற பெயரில் எழுதப்பட வேண்டும்.

தபாலில் அனுப்புக

தாகம்

எந்த விதப் பகட்டான உடைகளும் இல்லாமல், நடிக, நடிகையர்களுக்கு மேக்கப்கூட இல்லாமல் ஒரு தமிழ்ப் படம் வந்திருக்கிறது என்றால் அதிசயம்தானே! அது மட்டுமல்ல; எந்த விதமான செட்டுகளும் இல்லை. இது காவ்ய சித்ராவின் தயாரிப்பு.

சேகர் பிறவிக் குருடனான வாலிபன். சாரதா என்ற இளம் உபாத்தியாயினியின் மீது காதல் கொள்ளுகிறான். அவளும் அவனை விரும்பி மணந்து கொள்ளுகிறாள். 'இடைவேளை' வரையில் படம் ஒரு 'டாகுமெண்டரி' மாதிரி இருக்கிறது. அதற்குப் பிறகுதான் திரைக் கதையில் சூடு பிடிக்கிறது. ஆனால் பாழாய்ப்போன சந்தேகம் வந்து முளைக்கிறது. இறுதியில் கதாநாயகியைத் தீர்த்து விடுகிறது.

பார்வை இழந்த வாலிபன்—முத்துராமன். அவர் நடை, பேச்சு, சாயல் எல்லாம் பிறவியிலேயே பார்வை இழந்த ஒரு துர்ப்பாக்கியசாலியை நம் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்றன. சபாஷ் முத்துராமன்!

சாரதாவாக நடிப்பவர் வங்க நாட்டைச் சேர்ந்த நந்திதா போஸ். உடல் வாகும், நடிப்புத் திறனும், எளிமையான தோற்றமும் கொண்ட இவரால் தம் சொந்தக் குரலில் தமிழில் பேச முடியுமானால்...! நாமும் இவரை மனம் விட்டுப் பாராட்ட முடியும். ஆசிரமத் தலைவியாக வரும் பண்டரி பாய் சில காட்சிகளில் மட்டும்தான் வருகிறார் என்றாலும் ரசிகர்களுக்கு நிறைவைத் தர முடிகிறதே!

காந்தி கிராம ஆசிரமப் பள்ளியைச்சேர்ந்த இன்னொரு பெண் மனநிலை சரியில்லாத ஒரு வாலிபனுடன் தன் விருப்பம் இல்லாமலே உடல் உறவு கொள்ள நேருகிறது. பிறகு அவள் ஒரு வங்காளி வாலிபனை மணக்கிறாள். இது இப்படத்தில் தேவையின்றி நுழைக்கப்பட்ட இன்னொரு கதை. போதாக்குறைக்கு இன்னொரு கற்பழிக்கும் காட்சி வேறு வருகிறது. ஆனால் நல்ல வேளையாக - ரவிக்கை கிழிந்ததோடு சரி, கற்பிழக்கவில்லை.

''வானம் நமது தந்தை'' என்ற பூவை செங்குட்டுவனின் பாடல் இனிமையாயிருக்கிறது. பாரதியார் பாடல்கள் மூன்று எஸ். ஜானகி, ஜேசுதாஸ் குரலில் செவிக்கு உணவாயிருக்கின்றன. கர்நாடக இசையில் மெட்டு அமைத்திருப்பது மகிழ்ச்சிக் குரியது.

நம் தமிழ்ப் படங்களின் வழிவழி வந்த 'மரபு'களிலிருந்து மீறிப் புது நடைபோட முயன்ற வரையில் தயாரிப்பாளர்கள் பாராட்டுக் குரியவர்கள்தான். ஆனால், திரைக்கதை சரியாய் இல்லாததால் பாதிக்கிணறு தாண்டிய கதையாகி விட்டதே!

—காந்தன்



ஒரு மகாநதியின் கரையில்...

கு. வேங்கடரமணி



''கங்கையின் கரையிலே போய் நின்றால், அதன் அகலமும், அதன் மேல் பரப்பிலே பரவும் சுழிப்புக்களுந்தான் முதலில் தெரியும். அதனுடைய ஆழத்தையும் வேகத்தையும் புரிந்து கொண்டுவிட முடியாது. ஆனால், அந்த மகாநதியின் கரையிலே நின்று அதன் பிரவாகத்திலேயே மனம் முழுதும் ஒன்றிப் போனால் அந்த நதியின் ஓயாத சலனத்திலே பெரிய தத்துவங்களெல்லாம் கலந்து ஒன்றிப் போயிருக்கிறதை உணரலாம். அந்த ஒற்றுமை, போய் நிற்கிற எல்லோருக்கும் இருக்கிறதா? அதற்கு ஒரு நேரம் இருக்கிறது. சங்கரா! அப்படிப்பட்ட நேரம் வந்து வாய்த்துவிட்டால் —''

நான் கேட்டுக் கொண்டு நின்றேன். என் காதில் இந்தக் கணீரென்று ஒலிக்கும் குரல் கேட்கிறது. ஆனால் அதன் அர்த்தம் முழுவதும் மனத்திலே போய்த் தைக்கவில்லை.

நகரத்து விளிம்பில், மழை பெய்ய ஆரம்பித்தால் தெருவெல்லாம் சாக்கடை நீர்போல் பிரவாகம் எடுக்கிற ஒரு சின்னச் சந்து வீட்டில் என் அறையில் பிரமித்துப் போய் நிற்கிறேன். அறையில், கொடியிலே எப்போதும் தொங்கும் பழந் துணிகள், ஒரு மூலையில் பழைய பேப்பர், படுக்கை என்று எத்தனையோ சாமான்கள் அடைத்துக்கொண்டிருக்கின்றன. ஒரே ஜன்னல். அதன் வழியே அதிகமாய் வெளிச்சமும் வராது; காற்றும் வேகமாய் வீசாது. அந்த ஜன்னலை ஒட்டித்தான் மேஜையும் நாற்காலியும் போட்டுக் கொண்டிருக்கிறேன். அங்கே உட்கார்ந்து எப்போதாவது படிக்கிறதும், எழுதுகிறதும் என் வாழ்வில் — அதன் நித்தியப் போக்கிலிருந்து மாறுபட்ட செயல்கள். 'உங்களுக்கென்ன உங்க மேஜையடியிலே உட்கார்ந்து விட்டால் வீட்டிலே என்ன நடக்கிறது என்று தெரியவே தெரியாது' என்று ஜானகி எத்தனையோ தடவைகள் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறாள். நானும் எனக்குச் சொந்தமில்லாத வீட்டில் அந்த அறையை என்னுடையது என்று நினைத்துப் 'பிரமை' கொண்டிருக்கிறேன். கனவிலே வாழ்வைக் காணவும், கனவல்ல — வாழ்வு என்று உடனேயே புரிந்துகொள்ளவும் அந்த அறைதான் எனக்கு உதவிக் கொண்டிருக்கிறது. என், 'ஆசை, லட்சியம், வாழ்வு' எல்லாம் அங்கேயே தோன்றி அதிலேயே ஒடுங்குகின்றன.

இந்த என்னுடைய அறையில் — ஒரு பேச்சுக்காகவோ, சௌகரியத்துக்காகவோ அப்படி வைத்துக் கொள்ளலாமே — போடப்பட்டிருக்கிற அந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் ஸ்வாமி நித்தியானந்த யோகராஜ் என்னை, என் சங்கடத்தை — என் பரபரப்பைப் பார்த்துப் புன்சிரிப்புடன் தொடர்கிறார்.

''ஏன் உனக்குப் புரிகிறதா இல்லையா?''

''ம்.... ஆமாம், இது வாடகை வீடுதான். ரொம்ப அசௌகரியமானது. ஆனால் என்னாலே நாற்பத்தைந்துக்கு மேல் வாடகை தர முடியாது. அதனாலே இதிலுள்ள சௌகரியங்களே எனக்குப் போதும்.''

யோகராஜின் புன்சிரிப்பு மேலும் பரவித் தீர்க்கமாகப் பிரகாசிக்கிறது. அடடா, நான் என்னவெல்லாமோ உளறிக் கொட்டி விட்டேனே!

''இல்லை, இல்லை. இது இடக்கிறது. ரொம்பச் சின்ன வீடு; அதுவும் பழைய வீடு. நீங்கள் கங்கையைப் பற்றிச் சொன்னீர்கள். அதன் பிரவாகம்.......''

தம் முக மலர்ச்சி மாறாமலே, அதில் மேலும் கம்பீரமான (தயையா, அல்லது அரவணைப்பா?) உணர்வும் ஒன்றுகூட என்னைப் பார்த்தார்.

அவர் முகத்திலிருந்து கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்தார். காவி வஸ்திரத்தால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். பிறகு நிதானமாக நிமிர்ந்து, ''சங்கரா! பரவாயில்லை. நீ எத்தனை நேரம் இப்படியே நிற்பாய்? அந்த ஜன்னலில் உட்கார்ந்து கொள்'' என்று சொன்னார்.

ஜன்னலின் விளிம்பில் உட்கார்ந்தேன்.

''தயவுசெய்து மேலே சொல்லுங்கள். கங்கைக் கரையிலே—''

''சரி. கங்கை எங்கே இருக்கு தெரியுமா?''

''வடக்கே — ரொம்ப தூரத்தில்.''

''ஹூம்!'' அவர் பெருமூச்சுவிட்டார். ''அப்படித்தான் நீ நினைக்கிறே! நானும் நினைத்தேன், ஒரு காலத்தில். சந்தர்ப்பம் வந்தது. உடனே அதன் கரைக்கு ஓடினேன். பொங்கிப் பிரவாகம் எடுக்கும் அதன் அழகுத் தோற்றத்தைப் பார்த்துப் பார்த்துப் பார்த்துக் கொண்டே, அதன் கரையிலே நின்றேன். விநாடிக்கு விநாடி அதிலே புதுப் பிரவாகம் அலை அலையாய்ச் சுழித்துக்கொண்டு வந்தது. ஒரு மணியில், ஒரு பகலில், ஒரு நாளில் அதன் பிரவாகத்தை முழுவதும் பார்த்துவிட முடியுமா? ஒரு ஜன்மா முழுவதிலும்தான் அது முடிகிற காரியமா? எத்தனை ஆயிரம் வருஷங்களாய் அது பாய்ந்து பெருகிக் கொண்டிருக்கு? இன்னும் எத்தனை வருஷங்களாய் அது பெருகிக் கொண்டே இருக்கப் போகிறது! அதற்கு ஓய்வே இல்லை. அது ஜீவ நதி. அதனாலேதான் சங்கரர் சொன்னார்: 'உன் பிறவியிலே கொஞ்சமாவது கங்கை ஜலத்தைக் குடி.' அந்த ஒரு துளி ஜலம் ஸ்தூலமாய்ப் பார்த்தால் சாதாரணமாய் இருக்கலாம். ஆனால் —''

என் உச்சந் தலை சிலிர்த்தது. முதுகில் ஒரே குளிர்ச்சியாய்ப் பரவிற்று. கால்கள் துவண்டன, அந்தக் கங்கை வரை நடந்து போய் விட்டு வந்த மாதிரி.

''வடக்கே வெகுதூரத்தில் இருக்கு என்று சொன்னாயே — அதை இருபது வருஷங்களுக்கு முன்னால் நிடீரென்று நினைத்துக் கொண்டேன். அதாவது, கும்பகோணத்தில் பி. ஏ. படித்துவிட்டு பம்பாயில் பெரிய வேலை ஒன்று காத்துக் கொண்டிருக்கிறது என்று நம்பிக் கொண்டு போன சுந்தரேசன், அங்கே போனதும் அதிர்ச்சி அடைந்துவிட்டான். அவனைப் புறப்பட்டு வரச் சொன்னவர் முதல் நாள் இந்த உலகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார். 'நான் செத்துப் போனால் என் அஸ்தியைக் கயாவில், புனித கங்கையில் கரைக்க வேண்டும்' என்று சொல்லி யிருந்தார். சுந்தரேசன் போய்ச் சேர்ந்த வேளையில் கங்கையைப் பற்றின பேச்சு அவன் காதில் விழுந்தது. அஸ்தி அடைத்த டப்பாவுடன், போகவும் திரும்பி வரவும் தாராளமாய்ச் செலவுக்குப் பணத்தோடு, 'போனதும் அஸ்தியைக் கரைத்துவிட்டுத் தந்தி கொடு. நீ திரும்பி வந்ததும் உனக்கு நான் வேலை பார்த்துத் தரேன்' என்றான் ஒரே பிள்ளை — தகப்பனாரின் கர்மாவைச் சிரத்தையோடு செய்தான் அவன். சுந்தரேசன் கங்கைக் கரைக்குப் போனான். போனவன், தான் வந்த வேலையை முடித்துவிட்டு அந்த மகாநதியின் கரையிலே ஈரத்தோடு நின்றான். பிரவாகம் மேலே மேலே வந்து கொண்டே யிருந்தது. பார்த்துக் கொண்டே இருந்தான்.

மனித ஜீவனெல்லாம் — ஜீவன்னா இந்த உடல் இல்லை; இதிலே அடைபட்டு, இதை விட்டு விடுபட முயலும் நிலைக்கு வரும் ஒன்று— இந்தப் பிரவாகத்திலேதான் கரையணும் என்று அப்போது அவனுக்குத் தோன்றியது. கங்கையின் அர்த்தம் கொஞ்சம் அப்போ அவனுக்குப் புரிந்தது. அவன் தபாலாபீஸுக்குப் போய்த் தந்தி கொடுத்தான். கூடவே ஒரு கார்டும் எழுதினான். 'சுந்தரேசன் இனிமேல் பம்பாய்க்கு வரமாட்டான். அவன் இந்தக் கங்கைக் கரையிலே செத்துப் போயிட்டான். அதனாலே அவனுக்கு பம்பாயிலே வேலை இல்லை. இப்படிக்கு—நித்தியானந்தன்' என்று. அவனுக்கு இந்த நித்தியமான நதிக் கரையில் நிற்பதே ஆனந்தமா யிருந்தது. ஓர் அவசரத்தில், அப்பொழுது ஏற்பட்டு, நெஞ்சைத் தொட்ட உணர்ச்சியில், அவன் நித்தியானந்தத்துக்குத் தன்னை ஆக்கிக் கொண்டான். பின்னால் நடக்கப் போகிறது அப்பொழுது அவனுக்குத் தெரியாது.''

இந்த இடத்தில் அவர் சிறிது நிறுத்தினார். என்னையும் அறையையும் ஒரு முறை சுழன்ற பார்வையால் பார்த்தார். அப்பொழுது தான் எனக்கு ஞாபகம் வந்தது. வந்தது முதல் அவருக்கு ஏதாவது தேவையா என்று நான் கேட்கவே யில்லை.

''அவள் ஊரில் இல்லை. பிறந்த வீட்டுக்குப் போயிருக்கிறாள். நானே ஒருவிதமாய்ச் சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். உங்களுடைய ஆகார நியமங்கள் எப்படி என்று எனக்குத் தெரியாது. தயவு செய்து சொன்னால் என்னால் முடிந்தவரையில் —'' என்று இழுத்தேன்.

''இங்கே ஜல வசதி எப்படி?'' என்று கேட்டார் யோகராஜ்.


''குழாயிலே ஏதோ கொஞ்சம் தண்ணீர் வரும். வெந்நீர் போடுகிறேன். ஸ்நானம் பண்ணலாம்.''

''உன்னுடைய வழக்கம் எப்படியோ அதே மாதிரி செய். என்னுடைய ஆகாரம் பழங்கள்தான். அதையும் நான் கொண்டு வந்து விட்டேன். ஆகவே நீ எனக்காக எதுவும் செய்ய வேண்டாம்.''

அவர் கால்களை மடக்கி உட்கார்ந்து, கண்களை மூடிக் கொண்டார். சுவாஸம் ஒரு முறை நீர்க்கமாய் வெளிப்பட்டது. அப்புறம் எந்தச் சலனத்தையும் காணவில்லை.

★

காலையில் எதிர் வீட்டுக்குப் போய் அரட்டை அடித்து விட்டுத் திரும்பி வரும்போது



மணி எட்டு இருக்கும். பூட்டாமல் சாத்திவிட்டுப் போன கதவு திறந்திருந்தது. மனம் 'திக்'கென்றது. மெதுவாய் என் அறைப் பக்கம் எட்டிப் பார்த்தால் அங்கே காவி உடையும் கறுப்புக் கண்ணாடியுமாக இவர் உட்கார்ந்திருக்கிறார். நான் வந்து எதிரே நிற்பதைப் பார்த்ததும் இவர் அசையவில்லை. எனக்குத்தான் உடல் வெடவெடத்தது.

அப்பொழுது அந்த முகத்தில் மிகவும் மெல்லிய சிரிப்பு பரவிற்று.

''சங்கரா!'' என்றார். கணீரென்ற குரல். எதிரே நிற்கிற என்னையும், எங்கும் இருக்கிற அந்தச் சங்கரனையும் ஒரே குரலில் அழைத்த மாதிரி இருந்தது.

''ஸ்வாமி!'' என்றேன், இந்தச் சங்கரன்.

'' உன்னை எனக்குத் தெரியும். ஆனால், என்னை உனக்குப் புரியாது. ஆனால் கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பார்..... கும்பகோணத்திலே உன்னோடு சுந்தரேசன் என்று ஒருவன் படித்தான்.....''

'' ஆமாம் ! அந்தச் சுந்தரேசனா ?''

''இப்போது அந்தச் சுந்தரேசன் இல்லை. அவன் கங்கைக் கரையிலே போய்விட்டான். நித்தியானந்தன் என்கிற பெயரில் புதிதாய் அங்கே பிறந்தான்.''

'' அப்படியா ? அப்படியானால்?''

அவர் ஓர் அச்சடித்த அறிவிப்பை எடுத்துப் போட்டார்.

வாரணாசி ஜீவன்முக்தர்கள் சபையின் முக்கிய சாதகர் ஸ்வாமி நித்தியானந்த யோகராஜ் இன்று மாலை நகரில்....ல் சொற்பொழிவாற்றுவார் என்று அறிவித்தது அது.

''ஸ்வாமி தாங்களா ?'' என்றேன்.

அவரது முக மலர்ச்சி 'ஆமாம்' என்றது.

இந்த இருபது வருஷங்களுக்குப் பிறகு, நான் கும்பகோணத்தைவிட்டு வந்து இந்தப் பட்டணத்துக் கோடியில் குடியிருப்பது, அவருக்கு எப்படித் தெரிந்தது? ஒரே பிரமிப்பாக இருந்தது. மனம் பரபரப்பும் அதிசயமுமாய் நிரம்பி வழியத் தொடங்கியது. விநாடிக்கு விநாடி அந்தப் பிரமிப்பு பெருகிக் கொண்டே இருந்தது. அவர் எப்படி இங்கே வந்தார் ? இத்தனை வருஷங்களுக்குப் பிறகு திடீரென்று வந்து உட்கார்ந்து கொண்டு, 'சங்கரா !' என்கிறபோது பழைய சுந்தரேசனிடம் நான் பழகியதையெல்லாம் மறந்துவிட்டு, கையைக் கட்டிக் கொண்டு நிற்கிறதைத் தவிர எதுவும் செய்ய முடியவில்லையே !

ஜானகி இல்லையே என்று மனம் அடித்துக் கொண்டது. என்னைப் பற்றி அவளிடம் பெருமையாய்ச் சொல்லிக் கொள்ள இப்போதுதான் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவள் திரும்பி வந்ததும் சொன்னால் எல்லாம் பொய் என்கிற மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டு போகப் போகிறாள்.

சமையல் முடிந்ததும் யோகராஜிடம் போய்ச் சொன்னேன். ''ஸ்வாமிக்கு நிவேதனம் பண்ணிவிட்டுச் சாப்பிடு'' என்றார். அவருடைய தியானம் முடிந்தது. நானும் சாப்பாட்டை முடித்துக் கொண்டேன்.

''உனக்கு ஏதேனும் வேலை இருக்கா ?'' என்று கேட்டார்.

'' ஒன்றுமில்லை. இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமைதானே ?''

'' இப்போ நீ என்ன செய்கிற பழக்கம்?''

''தூக்கம்.''

''சரி. நீ தூங்கிவிடு. நான் கொஞ்சம் படிக்கணும். வெளியில் யாரிடமும் நான் வந்திருக்கிறதைச் சொல்ல வேண்டாம். சரியாய் நாலு மணிக்குச் சொற்பொழிவு. மூணு மணிக்கு மேல் ஒரு வாடகைக் கார் கொண்டு வா.''

''செய்கிறேன்'' என்றேன். சட்டென்று ஞாபகம் ஜானகியிடம் போயிற்று.

'' என் மனைவி வந்தால் ஸ்வாமியைப் பற்றிச் சொல்லணும். அவள் என் பேச்சில் நம்பிக்கை கொள்ள மாட்டாள். அதனால் தாங்கள் வந்ததற்கு ஏதாவது ஓர் அடையாளம் வேணும். அப்புறம் நான் மறந்து போய் விடுவேன். அதனால் இப்போதே தெரிவித்துக் கொண்டேன்.''

''அப்படியா ?''

அவர் கண்கள் வேடிக்கையாய் என்னைப் பார்த்தன.

'' சங்கரா !''

முதல் குரலிலேயே விழித்துக் கொண்டு எழுந்து விட்டேன். போன ஞாயிற்றுக் கிழமை மாதிரி இன்று தூக்கம் வெகுநேரம் நீடிக்கவில்லை. அதனால் பாதி நினைப்பும் பாதி மயக்கமுமாய்க் கிடந்திருக்கிறேன்.

அவசரமாய் எழுந்து முன் அறைக்குப் போனேன்.

''மணி என்ன ஆகிறது, பார் !'' என்றார். மேஜையின் இழுப்பறையில் இருந்து கைக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தேன். மூன்று! சொன்னேன்.

''அவசரமில்லை. மெதுவாகவே போ.''

சட்டையை மாட்டிக் கொண்டு புறப்படத் தயாரானேன்.

''உன்னோட தூக்கம் கெட்டுப் போச்சா?'' என்று கேட்டார்.

''இல்லை. நான் இன்னிக்கு ஆழ்ந்து தூங்கிப் போய் விடவில்லை.''

'' அரைகுறைதானா ? மொகல்ஸராய் வரைக்கும் வந்துவிட்டுச் சில பேர் நின்றுவிடுவார்கள்.''

''மொகல்ஸராயா ?''

''ஆமாம் ! நீ தூக்கத்தில் ரயில் பிரயாணம் செய்கிற மாதிரி சொப்பனம் கண்டியா ? அப்போ ஓர் இடம் வந்ததும் ரயில் நின்றுவிடுகிறது. நீ கீழே இறங்கிப் பார்க்கிறே. வரிசை வரிசையாய் எத்தனை ரயில்கள் !''

'' அந்தக் குழப்பத்திலேதான் நான் விழிச்சிண்டேன். ஆனால் முழுசாக ஏற்பட்ட விழிப்பும் இல்லை. அப்புறம் என்ன செய்கிறது என்று தடுமாறித் தவிக்கிறேன். அப்போதுதான் உங்கள் குரல் கேட்கிறது. அது என்ன சொப்பனம் ?''

'' நீ கங்கைக்குக் கிட்டத்தட்ட வந்துவிட்டே சங்கரா !''

''நானா, நானா ? ஹாம் !''

வாடகைக் கார் ஞாபகம் வந்தது. ''இதோ போய் வந்துடறேன்'' என்று விரைந்தேன்.

மேடையில் யோகராஜை அழைத்துக் கொண்டு போய் உட்கார வைப்பதைப் பார்த்தபோது, எனக்குள் என்னையும் மீறிக் கொண்டு பெருமை அலையடித்தது.

'இவர் என் வீட்டிலேதான் வந்து தங்கினார். இருபது வருஷங்களுக்கு முன்னால் என்னோடுதான் படித்தார்....'

வரிசையாக நகரத்துப் பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்து யோகராஜை வணங்குகிறார்கள். 'ஜானகி! பார்த்துக்கோ. இந்த யோகராஜ், பட்டணத்திலே எங்கோ ஒரு மூலையிலே இருக்கிற நம்ம வீட்டை எப்படியோ தேடிக் கொண்டு வந்தார். ஏதோ ஒரு சின்னக் கோபத்துக்காக நீ ஊருக்குப் போயிட்டியே ? உன் பேரிலும் குற்றமில்லே. வருஷக்கணக்காக ஒன்றுக்குமேல் ஒன்றாகக் குறைகளும், ஏமாற்றங்களும் உன் மனசிலே படிந்து போய்விட்டன....'

யோகராஜ் மேடையில் எழுந்து நின்றார். அவர் பார்வை எல்லாத் திசைகளையும் ஒரு தடவை சுற்றி வந்து நிலைத்தது. ஆர்வம் அமைதியாய் மாறிக் காத்துக் கொண்டிருந்தது.

பேச ஆரம்பித்தார் அவர்.

''ஒரு கதை படிக்கிறீர்கள். அதிலே நோயாளி ஆஸ்பத்திரியிலே படுத்திருக்கிறான். அவனுக்கு நல்ல காப்பியாய்ச் சாப்பிட வேண்டும் என்று ஆசை. அவனுக்காக அவன் அண்ணா பிளாஸ்கில் காப்பியை எடுத்துக் கொண்டு போகிறான். அதைப் பஸ்ஸில், இடிபடும் கூட்டத்தில் ஜாக்கிரதையாய்க் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமே என்று கவலைப்படுகிறான்.''

எனக்கு நடு முதுகில் 'சிலீர்' என்றது. நான் எழுதின கதை இது. அவர் எப்போது இதைப் படித்தார்? என் மேஜையின் மேல் கிடக்கிற பத்திரிகைக் குவியலிலிருந்து பகலில்......

அந்தக் கதை பிரசுரமானதும் அதைப் படித்துவிட்டு ஜானகி கேட்டாள். 'போதும், இந்த வியாதியும் படுக்கையும். நான் ஒருத்தி நடமாடுகிற நோயாளியாய் இருக்கிறது போதாதா ? உங்களுக்கு இந்த மாதிரிக் கதை தான் எழுத வரும். அதைவிட நீங்க எழுதாமலே இருக்கிறது நல்லது.'

மேடையிலே அவர் தொடர்கிறார்.

'' இதை எழுதினவனுக்கு ஏற்பட்ட உணர்ச்சியை, படிக்கிறவனும் அடைய வேண்டும். படிக்கிறவனிடமும் உணர்ச்சியும், ஏக்கமும் இருந்தால்தானே அவனிடமும் அது எதிரொலிக்கும் ?''

மூளைக்குள் இழை இழையாய் நரம்புகள் பின்னிக் கிடக்கிறதாம். எனக்கு அப்பொழுது அந்த ஒவ்வோர் இழையும் அதிசயமா,— பெருமையா ஆனந்தமா என்று புரியாத — உணர்ச்சியில் நிரம்பி வழிகிறதாகத் தோன்றுகிறது. ஒரு விநாடிதான். அப்புறம் அத்தனையும் சோகமும் வேதனையும் என்று உணர்கிறேன். ஏன் இந்த வேதனே, அல்லது சோகம் ?

யோகராஜின் குரல் தொடர்ந்து கேட்கிறது.

'' ஒருவன் கங்கைக் கரையிலே போய் நின்றால், அதில் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு ஓடுகிற நீரைப் பார்க்கலாம். ஆனால் அவனுடைய மனத்திலே அந்த மகாநதியின் தத்துவத்தைப் புரிந்து கொள்கிற உணர்ச்சி இருந்தால், அவன் வேறு எல்லாவற்றையும் மறந்து போய்விடுகிறான். கங்கையின் நீர்ப் பிரவாகம் அவனுக்குள் உணர்ச்சிப் பிரவாகமாகிறது. இசைகளுக்கெல்லாம் மேலான ஒலியையும் தனக்குள் அடக்கிய மௌனத்தையும், ஆனந்தத்தின் முடிவையும் துக்கத்தின் முடிவையும் ஒன்றாக்கிய இரண்டுக்கும் அப்பாற்பட்ட ஓர் அனுபவத்தின் ஆரம்பத்தையும் அங்கே பெறுகிறான்.''

நான் துடிக்கிறேன். தவித்துத் தடுமாறுகிறேன். 'சுந்தரேசா! நீ எப்படியோ அந்த மகாநதிக் கரைக்கு ஓடிப் போயிட்டே. நான் எத்தனை ராத்திரிகள் தூக்கம் வராமல் அந்தச் சின்ன வீட்டிலிருந்து ஓடிவிட முடியாமல் புரண்டு புரண்டு எனக்குள்ளே அழுதிருக்கேன் ?'

பஸ் பிடித்து வேலைக்குப் போகிறபோதும், மறுபடியும் பஸ்ஸுக்குக் காத்திருந்து வீடு திரும்புகிறபோதும் அந்த இரண்டு பிரயாண திசைகளிலிருந்தும் தப்பி ஓடிவிட ஆசைப் பட்டிருக்கிறேன்.

★

''சங்கரா!'' என்னை அசைக்கிற அந்தக் குரலைக் கேட்டு நிமிர்ந்தேன்.

'' ஸ்வாமி !''

'' நான் விமான நிலையம் போகிறேன். அதனால் நீ வீட்டுக்குப் போ.''

நான் மட்டும் தனியாகவா ? நினைப்பில் அழுகிறேன். ஆனால் கண்கள் வறண்டுதான் இருக்கின்றன.

'' இதோ, இந்தப் புத்தகத்தை வைத்துக் கொள். இதிலே உன்னுடைய மனக் குறையை உடனடியாய்த் தீர்க்கிற வழியும், அதோடு அந்தக் குறையை மறந்துவிடுகிற வழியும்கூட இருக்கிறது.''

''நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன்.''


★

''உங்க கடுதாசியைப் பார்த்ததும் எனக்கு நம்பிக்கையே இல்லே. என்னை உடனே

தேசப்பற்று + மனிதாபிமானம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்பொழுது பிரிட்டனில் சர்க்கரைக்கு ரேஷன் முறை அமுல் படுத்தப்பட்டது.

ஓர் ஊர் மக்களுக்கு வாராந்திரக் கோட்டா முன்னதாக வழங்கப் பெற்றது. இன்னோர் ஊருக்கோ அந்த வாரத்துச் சர்க்கரையே கிடைக்கவில்லை.



விவரம் தெரியவே அரசாங்கம், மக்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டது, அடுத்த வாரத்துக்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட சர்க்கரையைத் திருப்பித் தந்துவிடுமாறு.

மக்கள் 'கியூ' வரிசையில் நின்றனர், சர்க்கரையைத் திருப்பித் தருவதற்காக!

-ஆதாரம்: ஹிந்து

தகவல் : ரா.வி.

புறப்பட்டு வரச் சொல்லி எழுதி இருந்தது. ஆனால் நான் பேசாமல்தான் இருந்தேன். அம்மாதான், 'போடா, போடா'ன்னு தள்ளி விட்டாள். ஆமாம் ! அவர் எப்படி இருப்பார் ? உங்களோட படிச்சவரா ? எனக்கு இத்தனை நாட்களும் சொல்லவே இல்லையே!'' என்று கேட்டாள் ஜானகி.

'' எனக்கே அதெல்லாம் அவர் வந்து சொன்ன பிறகுதானே புரிஞ்சது ?''

'' அப்போ நான் இல்லாமல் போயிட்டேனே !''

'' ஜானகி ! நானும்தான் வருத்தப்படறேன். ஆனால் உன்னோட வருத்தம் எல்லாம் அநேகமாய்த் தீர்ந்து போச்சு. நான்தான், நான்தான்....''

'' உங்க குணம் எங்கே போகும்? இன்னமும் ஏன் முகத்தை இப்படி வைத்துக் கொள்ளணுமாம் ?''

ஜானகியின் நகையையெல்லாம் மீட்டுக் கொண்டு வந்து, இரட்டை வடம் சங்கிலியையும் புதுப்பித்தாகிவிட்டது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தும் டானிக்கும் ஒரு வாரத்திலேயே அவள் உடம்பில் புதிய தெம்பை வரவழைத்துவிட்டன.

நடு இரவில், காதுகளின் அருகே ஒரு பிரவாக ஓசை கேட்டு நான் திடுக்கிட்டு எழுந்து உட்காருகிறேன்.

மேஜை விளக்கைப் போட்டு இழுப்பறையிலிருந்து ஒரு புஸ்தகத்தைத் தேடி எடுத்துப் பிரிக்கிறேன். அதற்குள்ளேயிருந்து அந்தக் கடிதம் விழுகிறது.

'' சங்கரா ! உனக்கு ஆச்சரியமாய் இருக்கலாம். ஆனால், உன்னைப் பற்றித் தற்செயலாய்க் காசியில் சந்தித்த ஒருவரிடமிருந்து தெரிந்து கொண்டேன். அவர் தெரிவித்த விலாசத்தில்தான் உன்னைச் சந்தித்தேன். இத்துடன், இன்று என்னிடம் கொடுக்கப்பட்ட தொகையை வைத்திருக்கிறேன். அது உனக்கு உடனடியாய் உபயோகப்படும். எடுத்துக் கொள். அமைதியான குடும்ப வாழ்வை அடைய முயற்சி செய். பிறகு இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார். ஆனால் கங்கையின் பெருமையை அதன் கரையிலே, அதற்குத் தகுந்த மனப் பக்குவத்தோடு வந்து நின்றால்தான் உணரலாம். இருந்தாலும் 'கங்கைக் கரையில்' என்கிற இந்தப் புத்தகத்தைப் படித்தால், உன்னுடைய லட்சிய கங்கை எங்கே இருக்கிறது என்பதையாவது நீ அறிந்து கொள்ளலாம். ஒருகால் அது உன் வீட்டுக் குழாயில் வரும் ஜலத்திலேயே இருக்கிறது என்று நீ நினைத்தால்—''

நேரமாகிவிட்டதென்று யோகராஜ் கடிதத்தைப் பாதியிலேயே முடித்திருந்தார்.

விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தேன். அந்தக் கடிதத்தோடு வைத்திருந்த ரூபாய் நோட்டுக்கள் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் அவற்றைக் கையில் பிடித்து, அலையாக ஓடவிட்ட ஞாபகம் இருக்கிறது. அப்புறம்.....

ஜானகி வந்து நின்று, '' இந்தச் சங்கிலி எனக்கு எப்படி இருக்கு?'' என்று கேட்ட நினைவும் வந்தது.

அவளுக்கு அது அழகாய்த்தான் இருந்தது.

நான் புரண்டு படுத்தேன்.

யோகராஜ் இப்பொழுதும் புன்னகையோடுதான் இருப்பார்.

எனக்குள் ஒருகணம் பரவி அழுகையாய் வெடித்தது.

'நான் எப்போது அந்த மகாநதியின் கரைக்குப் போவேன் ? எப்போது அதன் பிரவாகத்தில் என் உள்ளத்தைக் கரைத்துக் கொள்வேன் ?'

இரவு சுமையாய் அழுத்திற்று. விம்மலை அடக்கிக் கொள்ள அந்த இருளினூடே நான் முயன்று கொண்டிருந்தேன்.

ஏ அசடே ! நீ கங்கையின் கரையிலே போய் நின்றாலும் அதன் தத்துவத்தைப் புரிந்து கொண்டுவிடப் போகிறது நிச்சயம் இல்லை. அப்போதும் நீ இந்த அறையைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் — உன் மனசு இந்த மேஜை மீது குப்புறப் படுத்துக் கொண்டு சண்டித்தனம் பண்ணினால்...

காதோரங்கள் வெகு நேரம் ஈரத்தில் கசகசத்துக் கொண்டிருந்தன.



நகலுக்கே இந்த விலையானால் அசல் என்ன விலையோ ?

''டெலாவேர் ஆற்றை வாஷிங்டன் கடக்கிறார்'' என்னும் தலைப்பில் ஓவியர் இமானுவல் லூட்ஸே வரைந்த ஒரு சிறந்த ஓவியத்தைப் பார்த்து சல்ட்மன் ஜான்ஸன் ஒரு நகல் வரைந்தார். ரூ. 20,80,000 கொடுத்து ஒருவர் இந்த நகல் படத்தை வாங்கினார். அமெரிக்கப் படம் ஒன்றுக்குக் கிடைத்த மிகக் கூடுதல் விலை இதுவே. 1850 வாக்கில் டஸல்டார்ப் நகரில் அசல் ஓவியமும், நகலும் வரையப் பெற்றன என்று சொல்கிறார்கள்.

பாப்பாவும் பாரதியும் பாடிய பாட்டு



பாரதி நினைவு நாளை யொட்டித்தான் மகாகவி பற்றிய கட்டுரையைப் படிக்க வேணுமா என்ன? என்றும் நம்முடனிருக்கும் பாரதியைக் குறித்து இன்றே படிப்போம்!

சென்னை தியாகராய நகர் ஹிபித் சாலையிலுள்ள ஐந்தாம் எண்ணுள்ள இல்லம்.

'பாரதி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட அந்த இல்லத்தினுள் நுழைகிறோம். முகம் மலர நம்மை வரவேற்பவர், அமரகவி பாரதியாரின் திருமகள் சகுந்தலா பாரதி அவர்கள்.

வீட்டு முகப்பில் 'பாட்டுக்கொரு புலவன்' பாரதியின் திருவுருவப்படம் ஒன்று பெரிய அளவில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது. அமைதியான அந்த வீட்டைச் சுற்றிலும் அழகான தோட்டம் நம்மைக் கவர்கிறது.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பார்கள். திருமதி சகுந்தலா பாரதிக்கும் கவிபாடும் ஆர்வமும் ஆற்றலும் சிறு வயது முதற்கொண்டே இருந்து வருகிறது. 'ரசிகா' என்ற புனைபெயரில் இவர் பல கவிதைகளை எழுதிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'கவிஞர் பெருமன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கியிருந்தார். அந்த மன்றத்துக்குப் பெரும் புலவர்களெல்லாம் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் இவரை அறிமுகம் செய்து வைத்து, 'சகுந்தலா நன்றாகக் கவிதை பாடுவாள்' என்று சொல்லி மகிழ்வாராம்.

சகுந்தலா சிறுமியாக இருந்தபோது ஒரு நாள் காலை.

பாரதியார் சகுந்தலாவிடம் ''பாப்பா! நீயும் நானும் சேர்ந்து ஒரு பாட்டு எழுதுவோம்!'' என்றாராம். தம் அருமை மகள் சகுந்தலாவை அவர் செல்லமாகப் 'பாப்பா' என்றே அழைப்பாராம். சகுந்தலாவும் சரியென்று சொல்லவே இருவரும் பாட்டு எழுத மாடிக்குச் சென்றனர். பாட்டை எப்படி எழுதுவது?

முதலில் பாப்பா சொல்ல வேண்டியது. பிறகு அப்பா பாட்டு அமைக்க வேண்டியது. இப்படியே பாட்டு வளர்ந்தது. அந்தப் பாட்டுத்தான் 'காலைப் பொழுது' என்ற பாடலாய் மலர்ந்தது. ''அது தவறுதலாகக் 'காதற் பாட்டுக்கள்' என்ற தலைப்புடன் வெளியிடப் பட்டிருக்கிறது'' என்கிறார் திருமதி சகுந்தலா.

இப்படி எழுதிய கையெழுத்துப் பிரதிகளில் பாரதியார் மறக்காமல், ''சகுந்தலா பாப்பாவும் சுப்பிரமணிய பாரதியும் எழுதியது'' என்று குறிப்பிடுவாரென்றால் அவர் தம் மகள் மீது வைத்துள்ள பேரன்பினை நன்கு அறியலாம்.

குழந்தைகள், பள்ளியில் எழுத்துக்களைக் கூட்டி வார்த்தை சேர்க்கும் விளையாட்டு விளையாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதைப் போல் பாரதியாரும் ஒரு நாள் தம் மகளையும் மற்ற மாணவர்களையும் அழைத்து 'பாட்டுச் சேர்க்கும்' விளையாட்டைக் கற்றுக் கொடுத்தாராம்.

ஒவ்வொருவர் ஒரு பதம் சொல்ல, அதைப் பாரதியார் வரிசைக் கிரமமாகப் பொருள் தோன்றும்படி பாட்டிசைத்துத் தருவார். உதாரணமாக,

முதலாமவர் : சக்தியை
இரண்டாமவர் : கொண்டாடு
மூன்றாமவர் : தினந்தோறும்
பாரதியார் : சக்தியை நித்தம் கொண்டாடு

முதலாமவர் : கவலையில்லாமல்
இரண்டாமவர் : சக்தியின் பாதங்களில்
மூன்றாமவர் : முத்து மாலைகள்
நான்காமவர் : ரத்தின ஆரங்கள்
ஐந்தாமவர் : வைத்துப் பணிந்திடு

இந்தப் பதங்களை வைத்துப் பாரதியார் பாடிய பாட்டு இதோ:

'சக்தியை நித்தம் கொண்டாடு
சஞ்சலம் நீக்கி — சக்தியை
முத்துமாலைகள் ரத்னஹாரங்கள்
சக்தி பதத்தில் அணிந்து பணிந்திடு—சக்தியை'

குழந்தைகள் என்றால் பார்த்த பொருளைக் கேட்டு அடம் பிடிக்கும். ஆனால் சிறுமி சகுந்

திருமதி சகுந்தலா பாரதி



தவா எந்த விளையாட்டுச் சாமான்களையும் கேட்டுத் தொந்தரவு பண்ணியதில்லே. அவர் கேட்ட பொருளெல்லாம் நல்ல நல்ல கதைகள், பாட்டுக்கள்தாம்!"

பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது தம் அருமை மகளை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போவது வழக்கம். அங்கே, அலைகடலின் ஓரத்திலே சகுந்தலா அப்பா விடம், ''அப்பா! அப்பா! ஊஞ்சல் கதை சொல்லேன். அதோ ஓடுகிறதே அந்த நண்டு கதை சொல்லேன்!'' என்று வற்புறுத்து வாராம்.

அப்போது ஊஞ்சலைப் பற்றியோ, நண் டைப் பற்றியோ ஒரு கதை வந்துவிடும்; அல்லது கவிதை பிறந்துவிடும் பாரதியாருக்கு.

பாரதியாரின் சொந்த ஊர் எட்டயபுரம் என்று நமக்குத் தெரியும்.

எட்டயபுரம் மன்னருக்கும், சிறுவன் சுப் பையாவுக்கும் (பாரதிக்கும்) நெருங்கிய தொடர்பு இருந்தது. தமிழார்வமுள்ள மன்னர், சிறுவன் பாரதியிடம் தம் சிந்தை யைப் பறிகொடுத்தார் என்றே கூறவேண்டும். அவ்வளவு ஏன், அருட்கவி பாரதியாரின் பாடல்கள் முதன் முதலில் விரும்பப்பட்ட இடமே அந்த எட்டயபுரம் மன்னரின் அரண் மனைதானே?

பாரதியாரின் தாத்தா இரு இராமசாமி சிவன் கிராம முன்சீப்பாக இருந்தவர். அவ ரிடம் தேவாரம், திருவாசகம் எல்லாம் சிறு வன் பாரதி கற்றுக் கொண்டான். இதனால் சின்னஞ் சிறு வயதிலேயே பாரதிக்குத் தமி ழார்வம் வளர்ந்தது.

இவருடைய தமிழார்வம் மேலும் வளர் வதற்குத் தூண்டுகோலாய் இருந்தது, எட் டயபுரம் அரண்மனையின் புலவர் அவை.

இளம் பாரதிக்கு எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கும். பெரும் புலவர்களெல்லாம் நாள்தோறும் அரண்மனையில் வந்து பல்வேறு விஷயங்களைக் குறித்து விவாதிப்பார்களாம். சில சமயங்களில் விவாதம் காரசாரமாகக் கூட முடிவதுண்டு. இந்தக் கூட்டங்களுக் கெல்லாம் தவறாமல் போவார் பாரதி.

ஒரு சமயம் வழக்கம்போல் புலவர்கள், அவைக்கு வந்தனர். ஒரு புலவர் எழுந்து, ''அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து போல் யாராவது பாட முடியுமா?'' என்று உரக்கக் கேட்டார். சிலர் முடியும் என்றும், சிலர் முடியாது என்றும் வாதிட்டனர். இதைக் கேட்டு அவையில் இருந்த பாரதியார் கேலியாகச் சிரித்தார். உடனே ஒரு புலவர் சினம் மிகுந்தவராய், ''பாட முடிந்தவர்கள் நேரே அவைக்கு வந்து பாடலாம்!'' என்றாராம்.

மறுநாள் எட்டயபுரம் மன்னர், முந்தைய நாள் புலவர்கள் விவாதித்ததை அறிந்து எல்லாப் புலவர்களுக்கும் அழைப்பு விடுத் தார். அனைவரும் அவைக்கு வந்தனர். மன் னர் புலவர்களைப் பார்த்து, ''நம்ம சுப் பையா ஒரு பாடலை எழுதிக் கொண்டு வந் திருக்கிறான். நீங்கள் கேட்ட அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து போல் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது'' என்று சொல்லி அந்தப் பாடலைப் புலவர்கள் மத்தியில் அரங் கேற்றினார். அதுமட்டுமா? சிறுவன் சுப் பையாவின் கவி ஆற்றலை உணர்ந்து, 'பாரதி' (சரஸ்வதி) என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தார். அப்போது பாரதிக்கு வயது எத்தனை தெரியுமா? பதினொன்று!

பாரதி பாடிய அந்தக் காவடிச் சிந்து இதுதான்:

''பச்சைத் திருமயில் வீரன்
அலங்காரன் கௌமாரன் — ஒளிர்
பன்னிரு திண்புய பாரன் — அடி
பணி சுப்ரமணியர்க் கருள்
அணிமிக்குயர் தமிழைத் தரு
பக்தர்க் கெளிய செங்காரன் — எழில்
பண்ணு மஞ்சலத் தூரன்''

இதனை இப்போது கணீரென்று இனிமை யான குரலில் பாடிக் காட்டுகிறார் ஸ்ரீமதி சகுந்தலா பாரதி.

சிறுமி சகுந்தலாவுக்கு அப்போது ஐந்து வயது இருக்கும்.

பாரதியார் தம் வீட்டு மாடியில் தம் மகளை மடியின் மீது உட்கார வைத்துக் கொண்டு கதைகள் பல சொல்லிக் கொண்டிருந்தார். சகுந்தலாவின் தாயார் மாடிமீது வந்தபிறகு தான், தாம் ஒரு பொருளை மறந்து வைத்து விட்டதை உணர்ந்தார். உடனே தந்தை மடிமீது உட்கார்ந்து கதை கேட்டுக் கொண் டிருந்த சகுந்தலாவைப் பார்த்து, தாம் மறந்து வைத்துவிட்ட அந்தப் பொருளை எடுத்து வரும்படி சொன்னாராம்.

சுவாரசியமாகக் கதை கேட்டுக் கொண் டிருந்த சிறுமி சகுந்தலாவுக்கு அம்மாவின் கட்டளை ஆத்திரத்தை உண்டாக்கியது. உடனே, ''நான் எடுத்து வர மாட்டேன், போ!'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட் டாராம்.

இதைக் கண்ட பாரதி உடனே, ''தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!'' என்றாராம்.

சிறுமி சகுந்தலாவின் மனத்திலோ, 'அப்பாவுக்கு உள்ள பெரும் புகழும் அம்மா வுக்கு இல்லையே! அம்மா என்ன, வெறும் சமையல்தானே செய்து போடுகிறாள்? என்ன இருந்தாலும் அம்மா மட்டம்தான்...' என்ற தவறான எண்ணம் புகுந்து கொண் டிருந்தது!

அந்த எண்ணத்தைப் போக்கப் பாரதியார் பெரும் பாடு பட்டார். தாய் எத்தனை உயர்ந்தவள் என்பதைப் பிஞ்சுமனத்தில் பதி யும் வண்ணம் இனிமையாக எடுத்துச் சொன் னார். தாய்நாடு, தாய்மொழி என்றெல்லாம் தாயை முன் வைத்தே சொல்கிறோம் எனச் சுட்டினார். தாய்க்கு உள்ள உயர்ந்த இடத்தை உணர்த்துகிற வகையில் பல நீதிக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக் கும்போது, சிறுமி சகுந்தலா, ''அப்படி யானால் நான் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும், அதைச் சொல்லுங்கள் அப்பா!'' என்று கேட்டாராம். அப்போது பிறந்ததுதான் 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!' என்ற பாப் பாப் பாட்டு.

ஐந்து வயதில் நடந்த சம்பவம் ஒன்று. இன்று அறுபதுக்கு மேற்பட்ட வயதிலும் கூடப் பசுமையாக நினைவு இருக்கிறது — இவருக்கு. அச்சம்பவத்தைக் கூறுகிறார் ஸ்ரீமதி சகுந்தலா.

''எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒரு சமயம் கடுஞ் சுரநோய் கண்டது. காய்ச்சலின் வேகத்தால் நாக் குழறிவிட்டது. என் தந்தையின் உண்மைச் சிநேகிதருள் ஒருவரும் என் வளர்ப்புத் தந்தையாக நான் கருதியவருமான திரு பொன்னு முருகேசம் பிள்ளை அவர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தார்.

''என் தந்தை, 'பாப்பா! யார் வந்திருக்கிறார்கள் பார்!' என்றார். முருகேசம் பிள்ளை என்று சொல்ல எண்ணிய எனக்கு சுர வேகத்தால் நாக்குழறிப் போயிற்று. 'முருகேழ பிள்ளே' என்று சொன்னேனும். என் தந்தை சுவரில் மோதிக்கொண்டார், புலம்பினார்.

'''பாப்பா! கடற்கரை மேடையிலிருந்து சிங்கம் கர்ஜிப்பது போலப் பிரசங்கம் செய்யப் போகிறாய் என்று எண்ணி யிருந்தேனே! என்ன குற்றம் செய்ததனால் குழந்தைக்கு இக்கதி நேர்ந்தது? தாய் தந்தையரின் செய்கைகள் மக்களைப் பாதிக்கின்றன. சரீர வாதனையைத் தான் அனுபவிப்பதைவிடத் தன்னில் இனியார், தம் மக்கள் அனுபவிப்பதைப் பார்ப்பது பதின்மடங்கு கொடியது. நான் என்ன குற்றம் செய்தேன்? என்னிடமுள்ள கெட்ட பழக்கம் நான் புகையிலே போட்டுக் கொள்வது ஒன்றுதான். அதையும் இன்றுடன் விட்டேன்' என்று சபதம் கூறினார்.

''காய்ச்சல் டைபாயிட் சுரமாதலால் குணமாக மூன்று மாத காலமாயிற்று. கொஞ்சம் குணம் தெரிந்தவுடன் என் தந்தையார் என் தாய் செல்லம்மா பாரதிக்காக எழுதிய பாட்டுத்தான்—

'பக்தியினாலே — இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ'
என்ற பாட்டு.

'இந்தப் புவிக்கே இங்கோர் ஈசனுண்டாயின்
அறிக்கை யிட்டேனுன்றன்
கந்தமலர்த்தாள் — துணை காதல் மகவு
வளர்ந்திட வேண்டும் என் சிந்தை யறிந்தே
அருள் செய்திட வேண்டும்
என்றால் அருளெய்திடும்! (பக்தியினாலே)' ''

எட்டயபுரத்தில் பாரதி படித்துக்கொண்டிருந்தபோது இவரோடு படித்த காந்திமதி நாதப் பிள்ளை என்ற மாணவர் சற்று ஆணவமுள்ளவர். அவர் தாம் தமிழ்ப் படித்திருக்கிறோம் என்ற கர்வத்தில் பாரதியிடம், ''பாரதி சின்னப் பயல் என்ற சொற்களைக் கடைசி அடியின் முடிவாக வைத்து ஒரு வெண்பாவைப் பாட முடியுமா?'' என்று கேட்டார். அருட்கவி பாரதிக்கு இது என்ன பிரமாதம்? அவன் ஆணவத்தை அடக்கும் வகையில்

''காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி நாதனைப்
பார்அதி சின்னப்பயல்!''
என்றாரே பார்க்கலாம்!

பாடல் புனையும் பாரதிக்கும் ஒரு பாடல் மிகவும் பிடித்தமாய் இருந்தது. அதுதான் இராமலிங்க சுவாமிகளின் 'நான் படும்பாடு' என்ற பாட்டு. அதைக் கேதார கௌளை ராகத்தில் பாரதி அடிக்கடி பாடுவார். குளிக்கும்போதும் சரி, சாப்பிடும்போதும் சரி, இந்தப் பாட்டு இல்லாமல் அவருக்குப் பொழுது போகாது!

பாரதியார் பிற்காலத்தில் வறுமையில் உழன்றார் என்றாலும் அவர் பணக்கார வீட்டுப் பிள்ளையாகத்தான் வாழ்ந்தார். அவரது தந்தை திரு சின்னசாமி ஐயர் அவர்கள் பஞ்சாலை நடத்தி மிகுந்த செல்வச் செழிப்பிலே வாழ்ந்தவர். தொழில் துறையிலும் கலைகளிலும் நல்ல ஈடுபாடு உடையவர்.

1897ல் பாரதிக்குத் திருமணம் நடந்தது. அதற்கு அடுத்த ஆண்டில் பாரதியின் தந்தை நடத்தி வந்த பஞ்சாலை மிகுந்த நட்டத்துக்குள்ளானது. அதனால் மனமுடைந்த அவர் அவ்வாண்டே காலமானார். ஐந்து வயதில் தாயை இழந்து, இப்போது தந்தையாரையும் இழந்த பாரதியின் வாழ்வில் பேரிடி விழுந்தது. வளமான குடும்பத்திலே பிறந்து வளர்ந்த பாரதி, பிறகு வறுமை எனும் கொடிய நோய்க்கு ஆளானார் என்பது உண்மையே!

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்று பாடிய பாரதியின் எண்ணம், செயல் அனைத்துமே தமிழாக இருந்ததை நாம் அறிவோம்.

''தமிழைப் போன்ற உன்னத பாஷை வேறில்லை. பச்சைத் தமிழிலே பேசு. தமிழிலேயே நினை. ஆங்கிலத்தில் நினைத்துப் பின்மொழி பெயர்க்காதே'' என்று பாரதி தம்மிடம் வரும் நண்பர்களுக்கெல்லாம் சொல்வாராம். தம்மை யடுத்தோரும், தம் வீட்டிலுள்ளோரும் தமிழின்றி வேறு மொழி பேச அவர் சம்மதிக்க மாட்டார் என்று கூறும் ஸ்ரீமதி சகுந்தலா பாரதிக்குத் தோட்டக் கலையில் மிகுந்த ஆர்வமுண்டு. சிறிய வயதிலிருந்தே அவருக்குத் தோட்டம், மலர்கள் என்றால் கொள்ளை ஆசை.

நாள்தோறும் தம் தந்தை பாடிய 'பராசக்தி'யை இவர் வழிபடத் தவறுவதில்லை. தம் வீட்டுக்கு அருகே இருக்கும் காளி கோயிலுக்குச் சென்று வழிபடும் இவர், பிற்காலத்தில் உதவுகின்ற வகையில், தம் தந்தையாரைப் பற்றி நினைவுக்கு வருவதை யெல்லாம் அவ்வப்போது விரிவாக எழுதி வைத்துக் கொள்ளும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

பேட்டி: பி. வி. கிரி

வீட்டுக் கணக்கிலிருந்து விடுதலை!

மேற்கு ஜெர்மனியில் பள்ளிப் பிள்ளைகள் வீட்டில் பாடம், கணக்கு எழுதிக்கொண்டு வந்தால் பெரும்பாலும் பெற்றோர்களே அதைச் செய்து உதவியிருப்பார்கள். மூன்று குடும்பங்களில் ஒன்றில் தாயாரோ தகப்பனாரோ பாடம் எழுதிக் கொடுக்கிறார்கள். இத்தகைய வீட்டில் எழுதப்படும் பாடங்களால் பலன் எதுவும் இல்லை என்று கருதப்படுகிறது.

இவ்விஷயமாக மேற்கு ஜெர்மனியில் முதலில் நடவடிக்கை எடுத்தது ஹாம்பர்க் நகர்தான். 'ஹோம் ஒர்க்' கொடுப்பதில்லை என்று ஹாம்பர்க்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஹாம்பர்க் பள்ளிகள் வாரத்தில் ஐந்து நாட்கள் நடைபெறும். காலை முதல் பகல் உணவு நேரம் வரைதான் வகுப்புகள். பிற்பகலில் விளையாட்டுகள் அல்லது ஏதாவது பாடங்கள் எழுதுதல்.

அனந்தனின் இறுதிக் காரியங்கள் எல்லாம் ஒரு வழியாக முடிவடைந்தன. வந்திருந்த உறவினர்களெல்லாம் அவரவர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஓய்ந்தாற்போல் தன் தாயாரின் அருகில் வந்து அமர்ந்து கொண்டான் ஸ்ரீதர்.

''லீவு இன்னும் எவ்வளவு நாட்கள் பாக்கியிருக்கு?'' என்று விசாரித்தாள் பார்வதி.

''அவசரமில்லை. இன்னும் ஒரு வாரம் இருக்கிறது'' என்றான் ஸ்ரீதர்.

''இப்படித் திடீரென்று கண்ணை மூடிடுவார்னு நான் நெனைக்கவேயில்லேடா'' என்று மூக்கைச் சிந்தி மூலையில் போட்டாள் பார்வதி.

''அப்பா ஏதாவது உயில் கியில் எழுதி வைத்திருக்கிறாரா அம்மா?'' என்று நேரிடையாகவே விஷயத்துக்கு வந்து விட்டான் அவன்.

''இந்த வீட்டையும் ஒரு காணி நிலத்தையும் என் பேருக்கு எழுதி வைத்திருப்பதாக என்னிடம் சொன்னதுண்டு. மற்றவைகளைப் பற்றி என்னிடம் எதுவும் சொன்னதில்லை. ஏன், எதற்காகக் கேட்கிறாய் ஸ்ரீதர்? எங்களுக்கு நீ ஒரே பையன்தானே?''

''அப்படித்தான் நானும் நம்பிக்கொண்டிருந்தேன்... ஆனால்...''

''நம்ப கணக்குப்பிள்ளை உன்னிடம் ஏதாவது உளறினாரா?''

''அவராக உளறவில்லை. நான் கிளறிக் கிளறிக் கேட்ட பிறகுதான் உளறினார்.''

''நான் அதை நம்பவில்லை. நீ நம்புகிறாயா?''

''வெளியூர் போயிருக்கிறார், நம்ம வக்கீல். அவர் வந்த பிறகுதான் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். கணக்குப்பிள்ளை எதற்காகப் பொய் சொல்லப் போகிறார்?''

''அதுவும் வாஸ்தவம்தான். ஆனால் எனக்கு உன் அப்பாவை நன்றாகத் தெரியும். அவர் அப்பழுக்கு இல்லாதவர்.''

''அப்படிச் சொல்லிவிட முடியாது அம்மா. ரொம்ப நல்லவர்களைப் போல் வேஷமிட்டவர்களில் எத்தனையோ பேர்வழிகள் அந்தரங்கத்தில் ஒழுக்கம் இல்லாதவர்களாக இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்...''

''ஸ்ரீதர்!''

''கோபித்துக் கொள்ளாதே அம்மா. யாரோ ஒருத்திக்குப் போய் அத்தனை சொத்துக்களை ஒருவர் எழுதி வைத்திருக்கிறார் என்றால்... அதற்குத் தகுந்த காரணம் இல்லாமலா போகும்?''

''எது எப்படி இருந்தாலும் சரி. 'பாங்கில்' உன் பெயரில் கணிசமான



யாருக்கு உயில்?

தொகையைப் போட்டு வைத்திருக்கிறார். எனக்குப் பிறகு இந்த வீடும் ஒரு காணி நிலமும் உனக்குத்தான் வரப்போகிறது. நீயும் நிறையச் சம்பாதிக்கிறாய். உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். இந்த விஷயம் உண்மையாகவே இருந்தாலும் கூட நீ அதைப் பற்றி யாரிடத்திலும் மூச்சு விடக் கூடாது. அதுதான் என் விருப்பம்.''

''அதெப்படி அம்மா பேசாமல் விட்டுவிட முடியும்? கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை அல்லவா எழுதி வைத்திருக்கிறார்?'' என்ற அவன் குரலில் ஆத்திரம் கொஞ்சம் கொஞ்சமாகத் தலை காட்டலாயிற்று.

''அதைப் போல் இரண்டு பங்கு உனக்கும் வைத்திருக்கிறாரே?''

''இருந்தாலும் அதுவும் என்னைச் சேர வேண்டியதுதானே?''

''அப்படி யொன்றும் கட்டாயமில்லை. எல்லாம் அவர் சுயமாகச் சம்பாதித்தது தானே?''



''நீயும் அவர் பக்கம்தான் பேசுகிறாய்!''

''நியாயத்தின் பக்கம் பேசுகிறேன். உன் அப்பா நியாயத்துக்கு விரோதமாக நடந்து கொள்ள மாட்டார்.''

''அப்படியானால் அவருக்கு இன்னொரு மனைவி இருப்பதும் நியாயம்தான் என்று நீ எண்ணுவாயா?'' என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

கே. ஜெயலக்ஷ்மி

''அப்படி ஒரு தவற்றை அவர் செய்திருப்பார் என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. இருந்தாலும் சொல்கிறேன். பலவீனத்துக்கு அடிமையாவது மனித சுபாவம். பிறகு தவற்றை உணர்ந்து நியாயமாக நடந்து கொள்ள ஒருவர் விரும்பினால் அது தவறா?''

''அதையும்தான் பார்த்து விட்டால் போயிற்று'' என்று அவன் எழுந்து சென்று விட்டான்.

''உங்களுக்குத் தெரியாமல் அப்பா எதையும் செய்கிற வழக்கமில்லை. அது எனக்குத் தெரியும்.''

''நீ சொல்வதை நான் மறுக்கவில்லை, ஸ்ரீதர்! ஆனால் இந்த விஷயத்தில் எல்லாமே மூடுமந்திரமாகத்தான் இருக்கிறது.''

''அந்தப் பெண்மணி அவருக்கு என்ன உறவு?''

''அது எனக்கு எப்படித் தெரியும் ஸ்ரீதர்?''

''மனைவியாக இருக்குமோ?''

''இருக்கலாம்; இல்லாமலுமிருக்கலாம்.''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் சார்? இந்தப் பெண்மணி இளவயதுக்காரியோ?''

''முப்பது வயது என்று குறிப்பிட்டதாக ஞாபகம்.''

''அப்போ மகளாக இருக்கலாமில்லையா?''

''நம்முடையது கற்பனைதானே? எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.''

''நீங்கள் உண்மையைச் சொல்ல மறுக்கிறீர்கள்!''

''தெரிந்தால்தானே சொல்வதற்கு?''

''போகட்டும். அவள் விலாசத்தையாவது கொடுக்க முடியுமா?''

''யாருக்கும் தெரிவிக்கக் கூடாது என்பது உன் அப்பாவின் உத்தரவு.''

''எனக்காக விட்டுக்கொடுத்தால் என்ன?''

''மன்னித்துக்கொள் ஸ்ரீதர். அது மட்டும் என்னால் முடியாது.''

''பரவாயில்லை. நானே தெரிந்துகொள்ள முயற்சி செய்கிறேன்.''

''நீ ஊருக்குப் போகும்போது உன் அம்மாவையும் அழைத்துக் கொண்டு போய்விடுவாயல்லவா?''

''மன்னித்துக் கொள்ளுங்கள் வக்கீல் சார்! அது என் சொந்த விஷயம்.'' அவன் சென்று விட்டான்.

தரையோடு தரையாகச் சுருண்டு கிடந்தாள் பார்வதி.

''அம்மா! நான் இன்றிரவு திருச்சிக்குப் போவதாக இருக்கிறேன். நீயும் வருகிறாயா?'' பரிகாசமாக வினவியபடியே வந்தான் ஸ்ரீதர்.

''திருச்சிக்கா? அங்கே நமக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லையே...'' அசைந்து கொடுக்காமல் பேசினாள் பார்வதி.

''தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் இருக்கிறார்களே...''

''யார் அது?'' எழுந்து உட்கார்ந்துவிட்டாள் அவள்.

''விலாசத்தைக்கூடத் தர மறுத்து விட்டார் வக்கீல் சார். இருந்தாலும் எப்படியோ கண்டுபிடித்து விட்டேன். என்னை விட அவர்கள் உனக்குத்தானே அதிக நெருக்க



அர்ப்பணமா? தர்ப்பணமா?

''தேசத்துக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்பவன் தலைவன். தேசத்தைத் தனக்கு அர்ப்பணித்துக் கொள்பவன் அரசியல்வாதி.''

பிரஞ்சுப் பிரதமர் பாம்பீடு கூறியது:
அமிர்தபஜார் பத்திரிகா - பாபு

மான உறவு? அப்பா உன்னைவிட அவளுக்குத்தானே அதிகமாக எழுதி வைத்திருக்கிறார்? அப்படிப்பட்டவளை நீ பார்க்காமல் இருக்கலாமா? அதற்குத்தான் உன்னையும் அழைத்தேன்.''

பார்வதிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இருந்தாலும், 'இவன் சொல்வதிலும் ஒருகால் உண்மை இருக்குமோ! நமக்குச் சமதையாக அவர் வாழ்வில் இன்னொருத்திக்கும் இடம் இருந்திருக்குமா? அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? அவள் எப்படிப்பட்டவளாக இருப்பாள்? அதையும்தான் போய்ப் பார்த்து விட்டால் என்ன? ஆண்களை நம்ப முடியாதோ என்னமோ?' என்றெல்லாம் அவள் சிந்தனை நீண்டு கொண்டே போயிற்று.

''என்னம்மா பதிலேயே காணோம்?''

''நீ அங்கே போய் எதுவும் ரகளை பண்ண மாட்டாயே?''

''நான் எப்படி அம்மா ரகளை பண்ண முடியும்? சும்மா விஷயத்தைத் தெரிந்து கொண்டு வரலாம் என்றுதான்...'' என்று மழுப்பினான் அவன்.

''சரி, நானும் வருகிறேன்.''

''கண்டிப்பாக நீயும் வருவாய் என்று எனக்குத் தெரியும்'' அவன் சிரித்தான்.

''அதோ அந்த வீடுதானுங்க'' என்றான் வண்டிக்காரன்.

''சரி, வண்டியை விடு பார்க்கலாம்.''

''வேண்டாம் ஸ்ரீதர். வண்டி இங்கேயே நிற்கட்டும். நீயும் இதிலேயே உட்கார்ந்திரு. நான் போய்ப் பார்த்துவிட்டுக் கூப்பிடுகிறேன். பிறகு நீ வரலாம்.''

''ஏம்மா, அப்படி?''

''சும்மாத்தான். நீ ஒரு முன்கோபக்காரன். அங்கே வந்து ஏதாவது ஏடாகூடமாகப் பேசுவாய்...'' பார்வதி வண்டியிலிருந்து குதித்து அந்த வீட்டை நோக்கி நடந்தாள்.

கால் மணி ஆயிற்று; அரை மணி ஆயிற்று. முக்கால் மணி... ஒரு மணி நேரமும் ஆகிவிட்டது.

''என்ன சார், இது! எவ்வவு நேரம்தான் இப்படியே நடு ரோட்டிலே வண்டியை நிப்பாட்டிக்கிட்டு இருக்க முடியும்?'' என்று வண்டிக்காரன் சலித்துக் கொண்டான்.

''சற்று இரு. நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று வண்டியிலிருந்து கீழே இறங்கினான் ஸ்ரீதர்.

''எனக்குச் சத்தத்தைக் கொடுத்துப்புட்டுப் போங்க சார். எவ்வளவு நேரம் காத்துக்கிட்டு இருக்கிறதுங்க? எனக்குப் பொழைப்புக் கெட்டுப் போகுது'' என்று கூப்பாடு போட்டான் வண்டிக்காரன்.

''கொஞ்சம் இருப்பா. நான் காசு சேர்த்துக் கொடுத்து விடுகிறேன்...'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்தான் ஸ்ரீதர்.

குறிப்பிட்ட வீட்டை அடைந்ததும் திண்ணையின் மீது ஏறிச் சன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே அவன் கண்ட காட்சி!

பார்வதி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கால்களைக் கட்டிக் கொண்டு ஓர் இளம் பெண் அழுது கொண்டிருந்தாள். அவள் அருகில் ஒரே மாதிரியான இரண்டு பெண் குழந்தைகள் உட்கார்ந்திருந்தன. அவைகளுக்கு ஒன்று அல்லது ஒன்றரை வயது இருக்கும்.

''எனக்கு இந்த வீடு, சொத்து எதுவுமே வேண்டாம், அத்தை. நான் எவ்வளவோ சொன்னேன். மாமா கேட்கவில்லை. எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்து விட்டார். இந்த வயதில் இப்படித் தனியாக இருப்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது? எத்தனை பேர், எத்தனை விதமாகப் பேசுகிறார்கள் தெரியுமா அத்தை? உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னை எப்படியாவது அவருடன் சேர்த்து வையுங்கள் அத்தை....'' என்று குலுங்கக் குலுங்க அழுதாள் அந்த இளம் பெண்.

தலையை நிமிர்த்திக் கூர்ந்து கவனித்தான் ஸ்ரீதர். 'ஷாக்' அடித்தாற் போலிருந்தது அவனுக்கு. திண்ணையிலிருந்து குதித்து விறு விறுவென்று நடந்தான் வண்டியை நோக்கி.

ஆள் அரவம் கேட்டு வாசற் பக்கம் ஓடி வந்தாள் பார்வதி. ஸ்ரீதர் ஓடுவதைக் கண்டாள். அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள்.

''ஸ்ரீதர்...!''

''மணியாகி விட்டது. சீக்கிரம் வண்டியில் ஏறு அம்மா!''

''நான் ஏறுவது இருக்கட்டும்டா. நீ வா அங்கே...''

''நான் வரவில்லை. நீ வருகிறாயா இல்லையா? ரயிலுக்கு நேரமாகி விட்டது.''

''நான் வருவது இருக்கட்டும். இப்ப நீ என் கூட வா.''

''வர முடியாது.''

''ஏன் வர முடியாது?''

''விருப்பமில்லை.''

''இதுதான் உன் முடிவா?''

''ஆ...மா...ம்...''. அவன் வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டு ''ஓட்டப்பா'' என்றான்.

''நீங்க வரலீங்களாம்மா?'' என்று வண்டிக்காரன்தான் கேட்டான்.

''இல்லையப்பா!'' என்று சொல்லிவிட்டு வந்த வழியே திரும்பி நடந்தாள் பார்வதி.

வண்டிக்காரன் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றான்.

ஆடாமல் அசையாமல் வண்டிக்குள் உட்கார்ந்திருந்த ஸ்ரீதரின் முகத்தில் ஒரு கொசு வந்து அமர்ந்து சுரீர் என்று கடித்தது. இடது கையால் அதன் மேல் ஓர் அடி போட்டான் ஸ்ரீதர். அது அங்கேயே நசுங்கிப் போயிற்று. அதே கையால் தடவி எடுத்து வண்டியின் பக்கவாட்டில் தடவி விட்டு, நன்றாகச் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தான். வண்டி வேகமாகச் சென்றது.

சதாபிஷேகம்



ஸ்ரீ ஐயா வாத்தியார், சதுர்வேதங்களிலும் பாண்டித்யம் பெற்று, அவற்றிலுள்ள மந்திர சாஸ்திரங்களின் நுட்பங்களை ஆராய்ந்தறிந்த வல்லவர்; இந்து தர்மத்தைப் பற்றிப் பரிபூரணமாக அறிந்த பெருந்தகை. இரண்டாயிரத்து ஐந்நூறு விவாகங்களுக்கு மேல் நடத்தி வைத்திருக்கும் இம்முதியவரின் சதாபிஷேகம் இவ்வாண்டு ஜனவரி மாதம் பம்பாய், செம்பூர் அஹோபிலமட மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவரது குமாரர்களான ஸ்ரீ சுவாமிநாதனும், நாராயணனும் மேற்படி சதாபிஷேக முகூர்த்தத்தை நடத்தி வைத்தனர். ஸ்ரீ ஐயா வாத்தியார் அவர்கள் திருவனந்தபுரம், சிருங்கேரி மடத்தின் முத்திராதிகாரியாவார். காஞ்சி, சிருங்கேரி மடங்களிலிருந்து இவ்விசேஷ வைபவத்தை யொட்டி, விசேஷ ஆசிகளும் வழங்கப்பட்டன.



❀ செல்வன் **ராஜ்குமாருக்கும்** செல்வி **கலாவதிக்கும்** திருமணம் அண்மையில் சென்னையில் நடந்தேறியது. திருமணத்திற்கு தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்களும், தமிழ்நாடு அமைச்சர்களும் மற்றும் நகரப் பிரமுகர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

மணமகன், மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தின் விற்பனை — சேவைகள் மேலாளர் திரு வி. எஸ். சங்கர் அவர்களின் புதல்வன். வாழ்க மணமக்கள்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031

Managing Editor: T. Sadasivam

Hosiery made of pure GRASIM STAPLE FIBRE

has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability

If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.

THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

TOP SPEED and a HEAVY LOAD




...The most Proven Test of

CLEVITE ENGINE BEARINGS

CLEVITE - closely associated with automobile manufacturers since 1919 - have all along been an integral part of progressive improvements that engineers developed to increase speed and load carrying capacity.

Continually conducting assiduous metallurgical research into better materials and technical solutions to automobile manufacturers' problems, CLEVITE bearings today embody all the results of 50 years experience.





BIMETAL BEARINGS LTD.

In technical collaboration with Clevite Corporation, Cleveland, Ohio, U.S.A.

2, ARTS COLLEGE ROAD, COIMBATORE - 18.

BB-142